


විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව

ශ්‍රී ලංකාව

හතලිස් දෙවන වාර්ෂික වාර්තාව

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலங்கை

நாற்பத்தி இரண்டாவது வருடாந்த அறிக்கை

UNIVERSITY GRANTS COMMISSION

SRI LANKA

FORTY SECOND ANNUAL REPORT

2020



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இலங்கை

நாற்பத்தி இரண்டாவது வருடாந்த அறிக்கை

2020

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகள்



தூரநோக்கு

சிறப்பான இலங்கைக்கான/ உலகத்திற்கான தலைத்துவ அறிவினை வழங்குதல்



பணிக்கூற்று

மூன்று அடிமட்ட கோடுகளை பூர்த்தி செய்தல் பற்றிய வேட்கையுடைய அறிவுள்ள தலைவர்களை உருவாக்குவதற்கு அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் அமைப்பின் ஊடாக உயர் தாக்கமிக்க ஆராய்ச்சி, தரமான கற்பித்தல் மற்றும் தொழில் ஈடுபாடு என்பவற்றுடன் இளமானி பட்டம், பட்டபின் படிப்பு மற்றும் உச்சமான தரத்தில் தொழில்முறைக் கல்வி போன்றவற்றின் ஏற்பாடுகளை எளிதாக்குவதில் முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சியை வளர்த்தல்



இலக்குகள்

- அரச துறையின் உயர் கல்விக்கான சமமான வழியை அதிகரித்தல்
- 21ஆம் நூற்றாண்டு குடியுரிமைக்கு தேவைப்படும் மாணவர்களின் திறன்கள் மற்றும் அறிவை விருத்தி செய்வதற்கு நிதிகளை பங்கீடு செய்வதன் மூலமாக அரச உயர் கல்வி நிறுவனங்களை எளிதாக்குதல்
- பூகோளச் சூழலொன்றில் வாழ்நாள் முழுவதும் கற்பவர்களாக மாணவர்கள் மாறுவதற்கு வழிகோலுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்கள் ஊடாக அரச உயர் கல்வி நிறுவனங்களின் கல்விச் சிறப்பினை ஊக்குவித்தல்.
- வினைத்திறன்மிக்க தரமான மனித வளங்கள், மிகச் சிறப்பான வசதிகள் மற்றும் நிலைத்திருக்க கூடிய பச்சை எண்ணக்கருக்கள் போன்றவற்றை கொண்ட மேம்படுத்தப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களை உறுதி செய்தல்.
- பாதுகாப்பானதும் நிலையானதுமான அமைப்புகள் மற்றும் பரஸ்பரமாக உற்பத்தித் திறன்மிக்க பங்குதார உறவுகள் மூலமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் ஆட்சி மற்றும் முகாமைத்துவத்தை பலப்படுத்தல்.



தலைவரிடமிருந்து செய்தி

ஆணைக்குழுவானது 2020ஆம் ஆண்டில் சில முக்கிய செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கும் அனைத்து மறுசீரமைப்புகளுக்குமான ஏற்பாட்டை மேற்கொள்வதற்கும் கணிசமானதோர் கொள்கைத் தீர்மானங்களை எடுத்துள்ளது. இத்தகைய மாற்றங்கள் ஜனாதிபதி செயலணி மற்றும் கல்விக்கான துணைக்குழுவின் தலையீட்டுடன் வரையப்பட்டு அமுலாக்கப்படுகின்றன. மேலும் இத்தகைய மறுசீரமைப்புக்கள் இலங்கை உயர்கல்வித் துறையை மறுசீரமைப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2020-2022 கான மூலோபாயத் திட்டத்துடன் உடன்பட்டுக் காணப்படுவதோடு அரசாங்கத்தின் புதிய உயர் கல்விக் கொள்கை மறுசீரமைப்பின் அமுலாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றன.

09 மூலோபாயங்களுடன் உயர் கல்வித் துறையானது 50 முக்கிய அடைவுமட்ட குறிகாட்டிகளை (KPIs) செய்வதற்கும் எளிமைப்படுத்தப்பட்ட சூழலொன்றில் 05 வருட காலத்திற்குள் பூரணப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

1) 2019/2020 கல்வியண்டிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளெடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் தொகையானது 10,027 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. கல்வி ஆண்டொன்றில் பல்கலைக்கழக அனுமதிகளில் இதுவே மிகப்பெரிய அதிகரிப்பாகும். அத்தோடு இலங்கை மாணவர்கள் உயர் கல்வியை தொடர்வதற்கான வாய்ப்புகளை மேலும் விரிவாக்குவதன் நோக்கமாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் 'பல் விஞ்ஞானங்கள் பீடம்' மற்றும் 'நகர மற்றும் நீரியல் உயிர்வளங்கள் பீடம்' சேர்த்துக் கொள்ளப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டன. அத்துடன் 16 புதிய கற்கை நெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதேநேரத்தில் 500 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இது எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

2) 2020ம் ஆண்டில் 10,000 மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு வருடத்திற்கும் முன்பாக இத்தகைய மாணவர் தொகையை உள்ளெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். திறந்த பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்திற்கான மாணவர்களின் உள்ளெடுத்தலை அதிகரித்தல் மற்றும் கணனி வசதிகளை வழங்குதல். கற்கை கட்டணம் மற்றும் அனுமதிக் கட்டணத்தை கடனாக செலுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

3) 2019/2020 கல்வியண்டிற்காக பல்கலைக்கழகம் செல்பவர்களுக்காக சலுகைக் கடன் வசதியின் கீழ் மக்கள் வங்கியின் நிதி உதவியுடன் மடிக்கணனிகளை வழங்கும் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4) பல்கலைக்கழகத்தில் உள்ள பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கு 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தினை திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

5) தாதியியல் பல்கலைக்கழகங்களை ஸ்தாபித்தல் தொடர்பான அவசியமான சட்டப் பின்னணி தயாரிக்கப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதேவேளை பாடத்திட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6) ஆசிரியர் பயிற்சியளித்தல் பல்கலைக்கழகங்களின் ஸ்தாபித்தலுக்காக தேவைப்பட்ட சட்ட ஆவணங்களின் தயாரிப்பு மற்றும் நிறைவு.

7) கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவனத்தை'கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்'(GWUIM)ஆக ஸ்தாபித்தல் மற்றும் இதற்கு பொருத்தமான புதிய கற்கைநெறிகளை அறிமுகஞ் செய்தல்.

8) வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு தேவைப்பட்ட சட்ட ஆவணங்கள் மற்றும் பின்னணிகளின் நிறைவு.

9) பாளி மற்றும் பௌத்த கற்றைகள் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தை ஆராய்ச்சி பல்கலைக்கழகம் ஒன்றாக மாற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

10) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள், கலை மற்றும் அழகியல் பீடங்களில் கற்கின்ற மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவினை அதிகரிப்பதற்று 400 மில்லியன்ரூபா செலவில் பொருத்தமான பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில்நுட்ப துறைகள் மற்றும் கணனி ஆய்வுகூடங்களை நிறுவுதல் அத்துடன் கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலையினால் (UCSC)வழங்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாவை கற்பதற்கான வாய்ப்பினை வழங்குதல். வேலைவாய்ப்பு சந்தையில நுழைவதற்கான வாய்ப்பொன்றை இது வழங்குகின்றது.

11) பல்கலைக்கழகம் நுழைபவர்களுக்கான நிகழ்நிலை ஆங்கில கற்கைநெறியை நடாத்துவதற்கு வேண்டிய பூர்வாங்க செயற்பாடுகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை இணைந்து ஆரம்பித்தது.

12) புதிய மாணவர்களுக்கான நிகழ்நிலை தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியொன்றினை நடாத்துவதற்கு வேண்டிய பூர்வாங்க செயற்பாடுகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை இணைந்து ஆரம்பித்தது.

13) நகர பல்கலைக்கழகங்களின் ஸ்தாபிப்பதற்கு சாத்தியமான ஆய்வின் நிறைவு மற்றும் செயற்றிட்டத்தின் எதிர்கால திட்டமிடலுக்காக திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்திற்கான இராஜாங்க அமைச்சுக்கு செயற்றிட்டத்தை கையளித்தல்.

14) அனைத்து பல்கலைக்கழக அமைப்பினது மனித வள முகாமைத்துவத்தையும் தனியொரு அமைப்பிற்குள் கொண்டு வருதல்.

15) இலங்கையில் முதல் முறையாக அனைத்து பல்கலைக்கழகங்களிலும் விரிவுரைகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பரீட்சைகள் என்பன நிகழ்நிலையில் நடாத்தப்பட்டன.

உயர் கல்விக்கான பரந்துபட்ட பங்கெடுப்பு மற்றும் சமமான வகையில் அணுகுவதையும் எளிதாக்குவதற்கு உள்நாட்டு ரீதியாகவும் உலகளாவிய ரீதியிலும் அங்கிகரிக்கப்படுகின்ற புதிய மற்றும் புத்தாக்க கற்கைநெறிகள் மற்றும் பட்ட நிகழ்ச்சித்த திட்டங்களை

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் அறிமுகப்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்பட்டன. அதன்படி புதிய கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மீளாய்வு ஆண்டுப் பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது கல்விசார் ஊளியர்களுக்கு விசேடமாக புதிய பல்கலைக்கழக கல்விசார் ஆளணியினருக்கு தங்களுடைய உயர் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதி பட்ட படிப்புக்களுக்கும் தனித்தனியாக பிரித்த கலாநிதி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் உள்ளெடுப்பதற்கு கல்வியாளர்களை துண்டுவதற்கு ஆராய்ச்சிக்கான நிதியிடலானது அதிகரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக கல்விசார் ஆளணியினரின் தரத்தினை மேம்படுத்துவதற்கு இது உதவி செய்யும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது தனது அதிகார எல்லைக்குட்பட்ட உயர் கல்வி நிறுவனங்களின் நிரந்தரமான கல்விசார் ஆளணி உறுப்பினர்கள் தங்களுடைய முதுமானி மற்றும் முனைவர் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்வதற்கு நிதியுதவியினை வழங்குகின்றது. இம் மானியத் திட்டதின் நோக்கமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அரச பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி திறனை பலப்படுத்தும் விதமாக அவர்களுடைய தொழில்த்துறை அபிவிருத்திக்கு அவசியமான தகமைகளை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து பிரிவுகளிலும் உள்ள கல்விசார் ஆளணியினருக்கு நிதிசார் உதவியினை வழங்குவதாக காணப்படுகின்றது.

சிரேஸ்ட பேராசிரியர். சம்பத் அமரதுங்க
தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

உள்ளடக்கம்

	பக்.இல
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகள்	i
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் செய்தி	ii
உள்ளடக்கம்	v
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	
அறிமுகம்	vii
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வகிபங்கு	vii
நிறைவேற்றுச் சுருக்கம்	viii
அட்டவணைகளின் பட்டியலகள்	xxviii
ப.மா.ஆ குழுவின் அமைப்பு வரைபு	xxx
1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முகாமைத்துவம்	1
2. பல்கலைக்கழக முகாமைத்துவம்	2
3. நிறுவகங்கள்	7
4. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்	10
5. கல்விஅபிவிருத்தி மற்றும் கல்வித் தராதரங்களின் பராமரிப்பு	19
6. நிதிசார் நிர்வாகம்	33
7. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழச் செயலகத்தின் பதவியணியினர்	38
8. மனிதவளங்கள் திணைக்களத்தின் முன்னேற்றம்	40
9. உட்கட்டமைப்பு அபிவிருத்தி	43
10. தர உறுதிப்பாட்டுப் பேரவையின் வகிபங்கு மற்றும் விவகாரங்கள் (QAC)	45
11. தகவல் தொழில்நுட்ப உதவி	47
12. சட்ட விவகாரங்கள்	48
13. பல்கலைக்கழகப் சேவைகள் மேன்முறையீட்டு சபை (USAB)	51
14. மத்திய உள்ளக கணக்காய்வின் விவகாரங்கள்	52
15. வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள்/அபிவிருத்திச் செயற்பாடுகள்/விசேடபணிகள்	52
16. பால்நிலை ஒப்பரவு மற்றும் சமத்துவம்	54
17. பல்கலைக்கழக கல்வியாளர்களுக்கான உயர் கல்விசார் உதவி	57
18. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்	61
19. பல்கலைக்கழக சேமலாப நிதியம்	63
20. 2020ம் ஆண்டுப் பகுதியில் வெளியிடப்பட்ட ஆணைக்குழச் சுற்றறிக்கைகள் மற்றும் தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள்	65
21. 2020ம்ஆண்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	68
22. 2020ம்ஆண்டுக்கான பல்கலைக்கழக வருடாந்த ஓய்வூதிய நிதிக் கூற்றுக்கள்	86
23. 2020ம்ஆண்டுக்கான பல்கலைக்கழக வருடாந்த சேமலாப நிதிக் கூற்றுக்கள்	95
24. நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் எதிர்காலத் திட்ட அறிக்கை-2020	108
25. இணைப்புக்கள்	
I. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ப.மாஆ குழுவின் அனுமதிக்கப்பட்ட மற்றும் தற்போதுள்ள பதவியணியினர்	130
II. பல்கலைக்கழக அனுமதிகள் - கல்வி ஆண்டு 2019/2020சாதாரண ஏற்பாட்டின்	

கீழ் பல்வேறு கற்கை நெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைமாவட்ட மற்றும் கற்கை நெறி ரீதியான வகைப்பாடு (புதிய மற்றும் பழைய பாடத்திட்டம்)..... 131

III. பல்கலைக்கழக அனுமதிகள் - கல்வி ஆண்டு 2019/2020சாதாரண ஏற்பாட்டின் கீழ் பல்வேறு கற்கை நெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைமாவட்ட மற்றும் கற்கை நெறி ரீதியான வகைப்பாடு (புதிய மற்றும் பழைய பாடத்திட்டம்)..... 137

IV. பல்கலைக்கழக அனுமதிகள் - கல்வி ஆண்டு 2019/2020சாதாரண மற்றும் விசேடஏற்பாட்டின் கீழ் பல்வேறு கற்கை நெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின்எண்ணிக்கை..... 147

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிமுகம்

இலங்கையில்அரச பல்கலைக்கழக அமைப்பின் வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தலுக்கான உச்ச சபையாக தொழிற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் திகதியன்று ஸ்தாபிக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களாக பல்கலைக்கழக கல்வியைத் திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும், உயர் கல்வி நிறுவனங்களுக்கான நிதிகளை ஒதுக்குதல், உயர் கல்வி நிறுவனங்களின் கல்விசார் தரங்களை பேணுதல், உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான ஒழுங்குபடுத்தல், அரச உயர் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தல், அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார எல்லைக்குள் வருகின்ற அனைத்து அரச உயர் கல்வி நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல் என்பனவாகும்.

ஆணைக்குழுவின் தலைவர் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பொறுப்புக் கூறுகின்ற உத்தியோகத்தராகவும் இருக்கின்ற அதேவேளை ஆணைக்குழு விவகாரங்களின் தினசரி நிர்வாகத்தை கட்டுப்படுத்துபவராகவும் ஆணைக்குழு கூட்டங்களுக்கு தலைமை தாங்குபவராகவும் காணப்படுகின்றார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் நெறிப்படுத்துவதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் செயற்பாடுகளுடன் திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் அலகுகள் போன்றன காணப்படுகின்றன. பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச உயர் கல்வி நிறுவனங்கள் 15 பல்கலைக்கழகங்களையும் 10 பட்டப்பின் படிப்பு நிறுவனங்களையும் 9 நிறுவனங்களையும் 1 நிலையத்தினையும் உள்ளடக்குகின்றன. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் நிர்வாக அதிகரியாக பேரவை இருக்கும் அதேவேளை கல்விசார் செயற்பாட்டின் உச்ச அமைப்பாக மூதவை காணப்படுகின்றது. பல்கலைக்கழகம் ஒன்றினதும் நிறுவனம் ஒன்றினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக முறையே உபவேந்தர் மற்றும் பணிப்பாளர்கள் காணப்படுகின்றனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வகிபங்கு

1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவானது பின்வரும் பிரதான பொறுப்புக்கள் மற்றும் நோக்கங்களை கொண்டுள்ளது.

1. தேசிய கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழக கல்வியைத் திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும்.
2. உயர்கல்வி தொடர்பில் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட நிதியை உயர் கல்வி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல் மற்றும் அத்தகைய உயர் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் செலவினைக் கட்டுப்படுத்தல்.
3. உயர் கல்வி நிறுவனங்களின் கல்வித் தரங்களை பேணுதல்.
4. உயர் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தினை ஒழுங்குமுறைப்படுத்தல்
5. 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் மூலமாக ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்டதற்கிணங்க உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் அனுமதியை ஒழுங்கமைத்தல் மற்றும் நடவடிக்கை எடுத்தல், செயலாக்கம் மற்றும் அத்தகைய அதிகாரங்களை இல்லாதாக்குதல், கடமைகள், மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை மேற்கொள்ளல்.

நிறைவேற்றுச் சுருக்கம்

இவ்வருடாந்த அறிக்கை 2020ம் வருடத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்கின்றது. 2020ம் வருடத்தின் போது முக்கிய அம்சங்களாகவும் சாதனை அடைவுகளாகவும் அமைவன:- பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதி, கல்விசார் மற்றும் ஆய்வு அபிவிருத்தி, ஆளணியினர் விருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி (IT), தர உறுதிப்பாடு, நிதி நிர்வாக மற்றும் முகாமைத்துவம் அத்துடன் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் கல்விசார் கூட்டுறவு, ஆய்விற்கான ஒத்துழைப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

2019-2023பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலோபாயத் திட்டத்துடன் 2020ம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் போது, வளர்ந்துவருகின்ற எதிர்பார்ப்புகள்மற்றும் நாட்டினுடைய தேவைகள், முன்மொழியப்பட்ட அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தில் மனித தேவைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகள் என்பவற்றுடன் சேர்ந்து 2019-2023 வரையான காலப்பகுதிக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் மூலோபாயத் திட்டத்தின் இலக்கு, நோக்கம் மற்றும் பிரதான அடைவுக் குறிகாட்டிகள் (KPI), என்பன கவனத்திற் கொள்ளப்பட்டன.

2019/2020கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்கள் /உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

2019 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2019/2020 கல்வியாண்டுக்குத் தகுதியுடைய மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2020 மார்ச் மாதம் விண்ணப்பங்களைக் கோரியது. அதனடிப்படையில், சாதாரண அனுமதியின் கீழ் ஒவ்வோர் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குமான மாணவர் தெரிவானது இறுதிசெய்யப்பட்டு 2020 ஒக்டோபர் மாதத்தில் வெட்டுப்புள்ளிகளும் வெளியிடப்பட்டன. விஷேட ஏறபாடுகளின் கீழ் அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கான தெரிவானது 2021ம் ஆண்டில் இறுதிசெய்யப்படும்.

எவ்வாறாயினும், மீளாய்வு ஆண்டின் போது 2018/2019 கல்வியாண்டுக்காக விஷேட ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கான தெரிவும் இறுதி செய்யப்பட்டிருந்தது.

2019/2020 கல்வியாண்டின் பல்கலைக்கழக அனுமதிக்குரிய பிரதான தகவல்கள் கீழே சுருக்கமகக் குறிப்பிடப்பட்டுள்ளன;

வெளியிடப்பட்ட க.பொ.த உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் 2019/2020 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற மாணவர்கள்	181,144
2019/2020 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழக அனுமதிப்பதற்காக முன்மொழியப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை	34,161*
தெரிவு செய்யப்பட்ட / அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை	
(1) சாதாரண	40,111**
(2) விசேட ஏற்பாடு- இராணுவம், பொலிஸ் சேவை மற்றும் விசேட செயல் அணி	22

குறிப்பு: (*) மேலதிக உள்ளெடுப்புகள் உள்ளடங்கலாக
(**)மேலதிக உள்ளெடுப்புகள் மற்றும் விசேட ஏற்பாடுகள் (கட்புலனிழந்தோர் மற்றும் விசேட தேவையுடைய மாணவர்கள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறந்து

விளங்கிய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் அனுமதி) என்பன இதுவரையில் இறுதிப்படுத்தப்படவில்லை.

பல்கலைக்கழக உள்ளெடுப்பினை அதிகரிக்கும் முகமாக, 2020ம் ஆண்டில் பல்கலைக்கழக முறைமையின் கற்கைநெறிப் பட்டியலில் புதிய இரண்டு கற்கை நெறிகள் சேர்க்கப்பட்டு 2019/2020 கல்வியாண்டிற்காக பின்வருமாறு அமுலாக்கம் செய்யப்பட்டது.

இல	கற்கை நெறியின் பெயர்	பல்கலைக்கழகம்	உள்ளெடுப்புகள்
1	நிதிசார் கணிதம் மற்றும் கைத்தொழில் புள்ளிவிபரவியல்	றுகுணைப் பல்கலைக்கழகம்	50
2	மனிதவள அபிவிருத்தி	ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்	65

இவற்றுக்கு மேலதிகமாக 2019/2020 கல்வியாண்டுக்காக ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு தற்போதுள்ள பின்வரும் கற்கை நெளிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இல	கற்கை நெறி	பல்கலைக்கழகம்	உள்ளெடுப்பு
1	மருத்துவம்	மொறட்டுவப் பல்கலைக்கழகம்	60
2	மென்பொருள் பொறியியல்	இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	50
3	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	இலங்கை ஊவா வெல்லச பல்கலைக்கழகம்	100
4	மொழிபெயர்ப்பு கற்கைகள்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	25
	மொத்தம்		**235**

கல்விசார் மற்றும் ஆய்வு அபிவிருத்தி

உயர்கல்வியில் பரந்துபட்ட பங்கேற்பு மற்றும் சமமான அணுகுமுறையினை வழங்கும் நோக்கத்துடன் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்கள் என்பன தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களிலான புதிய மற்றும் புத்தாக்கபூர்வமான கற்கைநெறிகளையும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் அறிமுகப்படுத்துவதற்காக ஊக்கப்படுத்தப்பட்டது. இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் 2020ம் ஆண்டில் பின்வருவனவற்றை ஆரம்பிப்பதற்கான அனுமதியானது வழங்கப்பட்டது:

- நான்கு புதிய பீடங்கள்- (04)
- இருபத்தி ஏழு புதிய கற்கைத் துறைகள்- (27)
- பதினொரு புதிய இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்–(11)
- பதினொரு புதிய இளமாணி சிறப்புப் பட்டங்கள் - (11)
- முப்பத்தி மூன்று புதிய பட்டப் பின் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்- (33)

மேலும் அதிகரித்துள்ள வேலை வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்கும் முகமாக, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நாட்டின் தற்காலத் தேவைகளுக்கு ஏற்றது போல் புதிய அறிவு மற்றும் திறமைகளை வழங்கி அதனை மீள்கட்டமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில், 2020ம் ஆண்டில் மூன்று (03) திணைக்களங்களின் பெயர்கள் மற்றும் நூற்றியொரு (101) இளமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பெயர்கள் மாற்றியமைக்கப்பட்டன.

2020ம் ஆண்டின் போது பல்வேறு துறைகளுக்குமாக அந்தந்த துறைகளில் உயர்கல்வியுடன் தொடர்பான அறிக்கையிடல் மற்றும் உயர்கல்வியுடன் தொடர்பான விடயங்களில் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கென இருபது (20) நிலையான குழுக்கள் மற்றும் வேறொரு (01) குழுவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவில் தொழிற்பாட்டில் இருந்தன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இலங்கை உயர்கல்விக்கான ஜனாதிபதி செயலணி, உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழு உள்ளடங்கலான வெவ்வேறுபட்ட கூட்டங்களில் நிகழ்ச்சித்திட்ட வழங்கல் மற்றும் மதிப்பீட்டை மாற்று வழிகளில் நடாத்துவதன் முக்கியத்துவத்தை பற்றி கலந்துரையாடியுள்ளது. இத்தகைய கலந்துரையாடல்களின் அடிப்படையில், அரச பல்கலைக்கழகங்கள் விசேடமாக கல்வியில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை பின்பற்றுவதற்குரிய வழிகாட்டல்களை உருவாக்கியுள்ளது. இத்தகைய நிகழ்ச்சித்திட்ட வழங்கல் மற்றும் மதிப்பீட்டு மாற்றுவழி முறைமைகள் சர்வதேசமட்டத்தில் பின்பற்றப்பட்டு வருவதோடு கொவிட் 19 தொற்று காரணமாக நேருக்கு நேரான விரிவுரைகளை நடாத்தவோ புத்தகம் மூடிய பரீட்சைகளை நடாத்தவோ இயலாமல் போயியுள்ள காலகட்டத்திலே இந்தப் போக்கானது பெருமளவில் பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல்(UTEL)செயல்திட்ட குழு உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம், 15ம் திகதிகளில் பயிற்சி பட்டறையொன்று இடம்பெற்றது. இப்பயிற்சி பட்டறையின் மூலமாக ஏற்கனவே உள்ள UTEL வரையறைகளை பெருமளவில் மாற்றியமைப்பதே விளைவாக காணப்பட்டது.

2020.10.28ம் திகதியிடப்பட்ட 2199/12ம் இலக்க அதிவிசேட வர்த்தகமானி அறிவிப்பின் மூலமாக 2021.03.01ம் திகதியிலிருந்து வலுவாகும் விதத்தில் தற்போதுள்ள கம்பஹா விக்கிரமராச்சி ஆயுர்வேத நிறுவகமானது 'கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்'(GWUIM) என பெயர் மாற்றி தரமுயர்த்துவதற்கான உத்தரவினை வழங்கியுள்ளது.

நிதிசார் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளிற்கு இணங்க,2020ம் ஆண்டிற்காக திறைசேறியினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா.59,041 மில்லியன் தொகையானது ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத் தொகையானது மீண்டெழும் செலவினம் ரூபா. 49,497 மற்றும் மூலதன மானியம் ரூபா.9,545 இனைக் கொண்டது. 2020ம் ஆண்டு இறுதியில் முறையே 99% மற்றும் 100% ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதித்தொகையிலிருந்து மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களுக்காக பயன்படுத்தப்பட்டதுடன் இதில் ரூபா.59,002 மில்லியன் தொகையானது 99% கூட்டிணைந்த பயன்பாட்டினைக் காட்டியது.

மீளாய்வாண்டின் போது, திறைசேரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் சகல முக்கியத்துவம் வாய்ந்த நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் நோக்கத்துடன் ஐந்து (05) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் சந்திப்புக்கள் இடம்பெற்றன. மேலும்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவானது அமைப்பினுள் முறையான நிர்வாகத்தை உறுதி செய்து கொள்வதற்காக பல்கலைக்கழகங்கள்/உயர் கல்வி நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளுடன் முறையாக ஒருங்கிணைந்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் ஆளணி நடவடிக்கைகள் முகாமைத்துவம்

2020ம் ஆண்டில் நிர்வாக மற்றும் நிர்வாகம் சாரா ஊழியர்களை இணைத்து பல்கலைக்கழகச் செயலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த பதவியணியினர்களின் எண்ணிக்கை 325 ஆகும். 2020 டிசம்பர் 31 ஆந் திகதியின் படி, ப.மா.ஆ செயலகத்தில் பணியாற்றியோர் மொத்த எண்ணிக்கை 255 ஆக இருந்தது. 2020ம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு 03 புதிய நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் 19 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊழியர்கள் சேவையில் உறுதி செய்யப்பட்டனர்.

ஊழியரொருவர் சேவை ஒப்பந்தம் நிறைவுற்றமையின் காரணத்தினால் பதவியிலிருந்து நீக்கிக் கொள்ளப்பட்டார். மீளாய்வாண்டின் போது,மேலும் ஒருவர் முறையாக நடந்த ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் பதவியிலிருந்து நீக்கிக் கொள்ப்பட்டார்.
2020ம் ஆண்டில் ஒருவர் மட்டுமே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயலகத்திற்கு இடையில் உள்ளக பணிமாற்றம் செய்யப்பட்டார். ஆணைக்குழு

சுற்றறிக்கை இல. 678, 696 மற்றும் 893 என்பவற்றின் கீழ் நீண்டகால சேவை விருதுகளுக்கு ஐந்து பேர் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்கள் பல்கலைக்கழக அமைப்பிற்கு ஆற்றிய நீண்டகால புனிதமான சேவையினை கௌரவித்து நிதி மானியங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இருவர் உயர்கல்வி நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்று செல்வதன் நிமிர்த்தம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சேவையிலிருந்து விலகியுள்ளனர். மேலும் மீளாய்வாண்டின் போது, இரண்டு பதவி விலகல்கள், மூன்று பணிநிலை ஓய்வுகள், இரண்டு பணிநிலை ஓய்வுக்கு முன்னதான விடுப்புகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

ஐந்து ஊழியர்கள் பல்கலைக்கழக அமைப்புக்கு ஆற்றிய நீண்டகால பாராட்டுக்குரிய சேவையினை கௌரவிக்கும் விதமாக நிதி மானியங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது அதனுடைய ஆளணியினருக்கு தமது திறமைகள் மற்றும் பணியாற்றும் அனுபவத்தினை மேம்படுத்திக் கொள்வதற்காக தொடர்ச்சியாக பல வாய்ப்புக்களை வழங்கி வந்தது. மீளாய்வாண்டின் போது, நிறைவேற்று ஊழியர் ஒருவரும் நிறைவேற்று உழியரல்லாத 20 பேரும் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட குறுகிய கால பயிற்சி மற்றும் அபிவிருத்தி பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

மேலும் 2020ம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சகல நிரந்தர ஊழிய உறுப்பினர்களுக்குமாக கவர்ச்சிகரமான மற்றும் நியாயமான கட்டணத்தில் தனியாள் கணக்கின் மூலம் குடும்பத்தினையும் ஆவன செய்யும் விதத்தில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேம்படுத்தப்பட்ட சலுகைகள் உள்ளடக்கிய சுகாதாரக் காப்புறுதிக் காப்பீடானது வழங்கப்பட்டது.

1978ம் ஆண்டின் 16ம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் உரித்தாக்கபட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள், மற்றும் தொழிற்பாடுகள் அடிப்படையில் 2020ம் ஆண்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 16 ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் 07 ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள் வெளியிடப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் சுமுகமான தொழிற்பாட்டிற்குத் தேவையான ஆணைக்குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளுடன் தொடர்புடைய தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக இச் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன.

<u>பல்கலைக்கழக அமைப்பில் மனித வளங்கள் பங்களிப்பு</u>

2020ம் ஆண்டு, பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவனங்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் (DMS) மொத்தமாக 956 புதிய ஆளணிப் பதவிகள் அனுமதிக்கப்பட்டன. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு (GWUIM) 272 ஆளணிப் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகத் தர நியமனங்கள்/பதவியுயர்வுகள் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2020ம் ஆண்டின் போது 17 நியமனங்களை வழங்கியது. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது இதர ஆளணித் தரங்களைக் கொண்ட பதவிகளிலும் 21 நியமனங்களையும் 17 பதவி உயர்வுகளையும் வழங்கியதுடன் பல்கலைக்கழக அமைப்புகளை கையாள்வதற்கும் இலகுபடுத்துவதற்காகவும் மொத்தமாக பல்கலைக்கழக அமைப்பினுள் 139 இடமாற்றங்களையும் மேற்கொண்டது.

2020 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான 12 மாத காலப்பகுதியில் பல்கலைக்கழகங்கள்/ உயர்கல்வி நிறுவனங்களிடமிருந்து சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களுக்காக மொத்தமாக 540 விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பெற்றுக் கொண்டது. இது உயர்கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும்.

பல்கலைக்கழகக் கல்வியியலாளர்களின் உயர்கல்வித் தேவைகளுக்கான உதவி மற்றும் ஆதரவு

மீளாய்வாண்டின் போது, கல்விசார் ஊழியர்களின் குறிப்பாக இளைய பல்கலைக்கழகக் கல்வியியலாளர்கள் தமது உயர்கல்வித் தேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக சிரத்தையுடன் பணியாற்றியது. இத்தகைய முயற்சிகளானவை ஆய்வுப் பிரிவு மற்றும் சர்வதேச கூட்டுத்தபானத்தினால் (DRIC) முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அம் முயற்சிகள் பின்வருமாறு காணப்படுகின்றன:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதன் எல்லைக்குள் அடங்கும் உயர் கல்வி நிறுவனங்களின் கல்வி ஊழியர்களின் நிரந்தர உறுப்பினர்களுக்கு முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளை கற்பதற்கு நிதி உதவியை வழங்குகிறது. இந்த மானிய திட்டத்தின் நோக்கமானது கல்வியாளர்கள் தமது தொழில் முன்னேற்றத்திற்கு தேவையான தகுதிகளைப் பெற்றுக் கொள்ள அனைத்து துறைகளிலும் அவர்களுக்கான நிதிசார் ஆதரவினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வழங்குவதன் மூலம் அரச பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி திறனை வலுப்படுத்துவதாகும்.

மானியத்தின் மொத்த மதிப்பானது துறை, ஆய்வின் தன்மை மற்றும் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தும் நாடு போன்றவற்றின் அடிப்படையில் மாறுபடும். 2020ம் ஆண்டில், மொத்தம் ரூ.67 மில்லியன் பாதீட்டுடன் கலாநிதிபட்டப் படிப்பை தொடர்வதற்கு மொத்தம் 17 விண்ணப்பங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகத்தில் தங்களுடைய பட்டப்பின்படிப்பை பூர்த்தி செய்து கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களின் பயன்கருதி சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகத்துடன் (IUJ) இணைந்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பல்கலைக்கழகங்களிலுள்ள கல்வியியலாளர்களின் பயன்கருதி அவுஸ்திரேலியாவில் கற்றலில் முன்னணியில் திகழும் குயின்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் (QUT) இணைந்து இணைந்த/ தனித்தனியான கலாநிதி நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள பல்கலைக்கழக கல்வியியலாளர்களுக்கான பட்டப் பின்படிப்பை (கலாநிதி) இலகுவாக்கும் விதமாக அவுஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்திலுள்ள ஹிறிபித் பல்கலைக்கழகத்துடன் (Giffith) இணைந்து இணை அனுசரணையுடனான புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.

- ஒப்பந்தங்களை விளங்கிக் கொள்வதற்கான குறிப்பில் கையொப்பமிடுவதற்கான முன்கூட்டிய அனுமதி வழங்குதலானது அரச பல்கலைக்கழகங்களால் பதிவு செய்யப்படும்.

உயர்கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணி

2020ம்ஆண்டில் புதிய கட்டுமானங்கள், தொடரப்படுகின்ற செயற்றிட்டங்கள்,புனரமைக்கப்பட்ட செயற்றிட்டங்கள், கையகப்படுத்தல் மற்றும் மனித மூலதன அபிவிருத்தி செயற்றிட்டங்கள், மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் என்பவற்றுக்காக மொத்த தொகை ரூபா.9545 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டின் நிறைவில் மொத்த தொகை ரூபா.9545 மில்லியனை திறைசேரி பரிந்துரைத்து விடுவித்துள
ஆண்டின் போது, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிடமிருந்து 34 புதிய செயற்றிட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டதுடன் மேலும் கவனமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்த பின்னர் * 16 மட்டுமே 2020ம் ஆண்டில் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. 2020ம் ஆண்டில் இப் 16 முன்மொழிவுகளையும் வரி அமைச்சானது தேசிய திட்மிடல்

திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பியிருந்தது. 2020ம் ஆண்டில் பௌதீக ரீதியாக 09 செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆண்டு இறுதியில் தொகையிடப்பட்ட ரூ.30,865 மில்லியன் பெறுமதியில் பல்கலைக்கழக முறைமைகளுக்குள் வடிவமைத்தல் மற்றும் கட்டுமாண செயன்முறைகளில் 91 கட்டுமாண செயற்றிட்டங்கள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அத்துடன் ஆண்டுக்காலத்தில் மொத்தமாக மதிக்கப்பட்ட செலவு ரூ.9521 மில்லியன்கள் பெறுமதியான 21 செயற்றிட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டு பல்கலைக்கழக அமைப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

2020ம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட முக்கிய உட்கட்டுமான செயற்றிட்டங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன:

- பேராதனைப் பல்கலைக்கழக முன்மொழியப்பட்ட பிரதான நூலகத்தை நீளமாக்குதல் - 252.6 மில்லியன்
- பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் கணிதம் மற்றும் பொறியியல் முகாமைத்துவத்திற்கான கணனி நிலைய கட்டிடம் - 294.2 மில்லியன்
- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பொரலெஸ்கமுவ, அபயரெத்ன மாவத்தை ஊழியர் விடுதி- 122.3 மில்லியன்
- ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட கட்டிடம்- நிர்வாக மற்றும் கல்விசார் பயிற்சிபட்டறை கட்டிடம் - 3,073.0 மில்லியன்

2020ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உட்கட்டுமான செயற்றிட்டங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன:

- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மானிடவியல் மற்றும் சமுக விஞ்ஞானம் மற்றும் சேவைகள் பீடத்திற்கான பலநோக்கு கட்டிடம் - 1,183.9 மில்லியன்
- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்திற்கான பலநோக்கு கட்டிட தொகுதி - 1,598.4 மில்லியன்
- யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் முறைமைக்கான P-II கட்டிட கட்டுமாணம் -645 மில்லியன்

- இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கானPara மருத்துவ கட்டிடம் P-I– 1,013.9 மில்லியன்

- இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் முன்மொழியப்பட்ட தொழில்நுட்ப பீடம் - S-II 1,685.0 மில்லியன்

<u>தகவல் தொழில்நுட்ப உதவி</u>

ஒதுக்கப்பட்ட பொறுப்புகளுக்கு ஏற்ப, தகவல் தொமில்நுட்பப் பிரிவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை எளிதாக்குவதற்கு ஆரோக்கியமானதும் தடையற்றதுமான கணினி அமைப்புகளை உறுதிசெய்து கொள்வதற்கு முகாமைத்துவ ஒத்துழைப்பை வழங்கியது. புதிய தகவல் தொடர்பாடல் அமைப்பு அபிவிருத்தி மற்றும் நிறுவுதல், தற்போதுள்ள அமைப்புகளை மேம்படுத்துதல், தேவைப்பாடுகள் / விவரக்குறிப்புகளை உருவாக்குதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒலி ஒளி செயற்பாடுகளை முகாமை செய்தல், கணினி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைப்புகளின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்/உயர் கல்வி நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான தரவுச் செயலாக்க நடவடிக்கைகள் ஆகியவை இந்த பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் அடங்கும்.

2020 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம் பின்வருமாறு:

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) மற்றும் அரச சர்புடைய, அரச சார்பற்ற அமைப்புகளான LEARN, SLT, LK Domain Registry போன்றவற்றுடன் ஒருங்கிணைப்பை செய்தல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் மேம்படுத்துவதற்கான அதிநவீன தகவல்தொழில்நுட்பத்தை அறிமுகஞ் செய்தல்.
- மென்பொருள் அமைப்பின் அமுலாக்கமும் அபிவிருத்தியும்
  - ஆளணி பிரிவிற்கான காப்பீட்டு முகாமைத்துவ முறை
  - ஆளணி பிரிவிற்கான விடுப்பு முகாமைத்துவ முறை
  - வாகன ஒதுக்கீட்டு முறை
  - பதவியுயர்வுக்கான நிகழ்நிலை விண்ணப்ப அழைப்பு முறை
  - நிகழ்நிலை ஆரம்ப பயிற்சி செயற்றிட்டத்தை அணுகுதல் முறை

பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி

2020ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட/பெறப்பட்ட ரூபா.2125 மில்லியன் தொகைப் பணமானது, பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டதுடன் அதில் ரூபா.1,420 மில்லியன்தொகையானது மகாபொல புலமைப்பரிசில் எனவும் ரூபா.705 மில்லியன் தொகையானது மாணவர் நிதியுதவித் (Bursary) திட்டத்தின் கீழும் வழங்கப்பட்டது.

முகாமைத்துவ தகவல் அமைப்பின் செயற்பாடுகள் (MIS) மற்றும் உதவி

2020ம் ஆண்டில், வெளியிடப்பட்ட இலங்கை பல்கலைக்கழகப் புள்ளிவிபரவியல்- 2019 உடன் தொடர்புபடுத்தி முகாமைத்துவ தகவல் அமைப்பு பிரிவின் மூலம் முக்கியமான நான்கு வெளியீடுகள் / அறிக்கைகள் வெளியிடப்பட்டன. 2019ம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் கல்வி நிகழ்ச்சித்திட்ட இளமாணிப் பட்டதாரி ஒருவருக்குரிய மீண்டெழும் அலகுச் செலவினப் பகுப்பாய்வு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத் தளத்தில்வெப்போமெற்றிக்ஸ் மற்றும் QS தரப்படுத்தல்களில் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் புதுப்பிக்கப்பட்ட தரப்படுத்தல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் ஹொட்டல்கள், புலமைப்பரிசில்கள், பதிவுக்கட்டணங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை வசதிகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கை ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தர உறுதிப்பாட்டு பேரவைநடவடிக்கைகள் (QAC)

கொவிட் 19 நோய் தொற்று பரம்பலின் காரணமாக 2020ம் ஆண்டு தர உறுதிப்பாட்டு பேரவைக்கு சவால் மிகுந்த ஒரு வருடமாக மாறியதுடன் தர உறுதிப்பாட்டுப் பேரவைத் தலைவர் புரட்டாதி 2020 இல் மாற்றப்பட்டார். பின்னர் தர உறுதிப்பாட்டுப் பேரவைச் செயற்பாடுகள் தர உறுதிப்பாட்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையான குழுத் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களால் வழிகாட்டப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. அதன்படி அடைந்து கொள்ளப்பட்டவை பின்வருமாறு:

- 2020ம் ஆண்டின் முக்கால் ஆண்டு பகுதியில் 14/15தர உறுதிப்பாட்டுப் பேரவையானது,AHEADசெயற்றிட்டத்தின் இலக்கினையும் தாண்டி பெறுபேற்று புள்ளி அட்டையில் 75% க்கும் அதிகமான புள்ளியினை அடைந்திருந்தது.

- 2020ம் ஆண்டிறுதியில் பெறுபேற்றுப் புள்ளி அட்டையில் உள்ள 75% புள்ளியிலும் பார்க்க தர உறுதிப்பாட்டு பேரவைப் புள்ளியானது 93% ஐ அடைந்திருந்தது. அதாவது 2021ம் ஆண்டுக்காக AHEAD செயற்றிட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கினை பூர்த்தி செய்தது. (75% இல் இருந்த தர உறுதிப்பாட்டுப் பேரவைப் புள்ளியானது 80% ஆக உயர்ந்தது)

- 2020ம் ஆண்டிறுதியில் தர உறுதிப்பாட்டுப் பேரவைத் தலைவரால் மொத்தமாக 12 பல்கலைக்கழகங்கள் பார்வையிடப்பட்டன. (2019ல் 08ம் 2020ல் 04ம் பார்வையிடப்பட்டன).

2019ல் மீதமாக இருந்த மூன்று பல்கலைக்கழகங்களின் நிறுவனம்சார் மீளாய்வுக்கான களப் பயணங்கள் 2020 இன் காலாண்டில் பூரணப்படுத்தப்பட்டன. 2020ம் ஆண்டு நிறுவனம்சார் மீளாய்வுக்காக இரண்டு பல்கலைக்கழகங்களிடமிருந்து சுயமதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. கொவிட்-19 காரணமாக ஏனைய களப் பயணங்கள் யாவும் 2021ம் ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

- 32 நிகழ்ச்சி திட்ட மீளாய்வுகளுக்காக, மீளாய்வு அறிக்கைகளில் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கான செயல் திட்டங்கள் 2020 டிசம்பரில் பெற்றுக் கொள்ளப்பட்டன. 2019ல் ஆரம்பிக்கப்பட்ட 41 கற்கை நிகழ்ச்சி திட்டங்களுக்குமான (மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞானம், பல் மருத்துவ விஞ்ஞானம், இணைந்த மருத்துவ விஞ்ஞானம், உணவு விஞ்ஞானம், விலங்கு விஞ்ஞானம், மற்றும் விவசாயம்) நிகழ்ச்சி திட்ட மீளாய்வுகள் 2020 இல் பூரணப்படுத்தப்பட்டு மீளாய்வு அறிக்கைகளும் இறுதிப்படுத்தப்பட்டன. விஞ்ஞானங்கள், பொறியியல், கட்டிடக்கலை, மற்றும் Geomatics போன்றவற்றின் 59 நிகழ்ச்சி திட்ட மீளாய்வுகளுக்காக சுய மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.
- ***பட்டபின்படிப்பு பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் நிகழ்ச்சி திட்ட மீளாய்விற்கான கையேடு*** ஒன்றின் உருவாக்கம் AHEAD திட்டத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சி திட்ட மீளாய்விற்காக பயன்படுத்தப்படும்.
- நிறுவனம்சார் சுய மதிப்பீட்டு அறிக்கையினை எழுதுபவர்களுக்கும் நிகழ்ச்சி திட்ட மீளாய்வாளர்களுக்குமாக தனித்தனியாக இரண்டு செயலமர்வுகளை 2020ம் ஆண்டில் தர உறுதிப்பாட்டுப் பேரவை நடத்தியது. நிகழ்ச்சி திட்ட மீளாய்வுகளுக்காக புதிய நிகழ்ச்சி திட்ட மீளாய்வாளர்களக்கான பயிற்சி நிகழ்ச்சி திட்டமொன்று zoom மூலமாக நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி திட்டத்தில் 112 கல்வியியலாளர்கள் பங்குபற்றியதுடன் 83 பேர் நிகழ்ச்சி திட்ட மீளாய்வாளர்களாக இருப்பதற்குரிய தகுதியை பெற்றிருந்தனர்.

2020ம் ஆண்டு காலப்பகுதியில் பாட நியமக் குறியீடு (SBM) அறிக்கைகளை அபிவிருத்தி செய்வதில் பாரிய முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டது. மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான துறையினருக்கும் வரலாறு, சிங்களம், புவியியல், வெகுசன தொடர்பாடல், மற்றும் தத்துவவியல் போன்ற பாடங்களுக்கான பரிந்துரைகளை பெற்றவர்களுக்குமாக 2020 மார்ச் மாதம் 11ம் திகதியில் பாடநியமக் குறியீடு (SBM) பயிற்சிப் பட்டறையொன்று இடம்பெற்றது. இத்தகைய பரிந்துரைகள் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமக் குறியீட்டுக்குழுவினால் உறுதிசெய்யப்பட வேண்டியிருந்ததுடன் ஆங்கிலம் மற்றும் சமூகவியல் பாட நியமக் குறியீடுகள் (SBM) அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

2020ம் ஆண்டு காலப் பகுதியில் 94 இளமாணி பட்ட கற்கை முன்மொழிவுகள் மற்றும் 98 பட்ட பின்படிப்பு கற்கை முன்மொழிவுகள் உள்ளடங்கலாக மொத்தம் 233 முன்மொழிவுகள் (திருத்தப்பட்ட மற்றும் மீளத் திருத்தப்பட்டவை உள்ளடங்கலாக) தர உறுதிப்பாட்டுப் பேரவையினால் மதிப்பீடு செய்யப்பட்டன. மேலும் புதிய பீடங்களை ஆரம்பித்தல் தொடர்பாக் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட04 முன்மொழிவுகள் மற்றும் புதிய துறைகளை ஆரம்பித்தல் தொடர்பாக 29 முன்மொழிவுகளும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனவே தர உறுதிப்பாடு தொடர்பான நிலையான குழு புதிய வெளிவாரி பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தினை திருத்தியது. திருத்தப்பட்ட விண்ணப்பப் படிவமானது புதிய முழுநேர பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் அனுமதி மற்றும் பட்ட பின்படிப்பு தகமைகள் போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படுகின்ற படிவத்தை ஒத்ததாக காணப்படுவதுடன் இலங்கைக் கல்வித் தகமை மட்ட நியமம் - 2015 (SLQF)கானதேவைப்பாடுகளுடன் முன்மொழிப்பட்ட தகமைகளுடன் இணங்கியுள்ளது என்பதை உறுதி செய்வதற்கு போதுமான தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளும்.

2020 இல் தர உறுதிப்பாட்டுப் பேரவை மேற்கொண்ட விடயங்கள் பின்வருமாறு:

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட தகமைகள், இலங்கை பல்கலைக்கழகங்களாலும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட பட்டங்களின் SLQF மட்டங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து வருகின்ற கேள்விகள் தொடர்பாக தெளிவுபடுத்தலை வழங்குதல்.
- பல்கலைக்கழகங்களின் தர உறுதிப்பாட்டுச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபாடு மற்றும்
- கற்கை நாட்காட்டியின் ஒத்திசைவுக்கு உதவுதல்

பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவனங்களின் பால்நிலை ஒப்பரவு மற்றும் சமத்துவம் (GEE), பாலியல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல்கள் (SGBV) மற்றும் பகிடிவதைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார எல்லையின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள் /உயர் கல்வி நிறுவனங்கள் அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் பாலின வேறுபாடின்றி நியாயமான முறையில் வேலை செய்யவும் கற்றலை மேற்கொள்ளவும் உகந்ததான சூழலை உறுதி செய்வதற்கான நிறுவனம்சார் திறனைக் கொண்டிருப்பதையும் அதற்காக அவர்களின் அதியுச்சமான நடைமுறைகள் அங்கீகரிக்கப்படுகின்றன என்பதையும் உறுதி செய்து கொள்வதற்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் ஒடுக்குமுறை, பாகுபாடு இல்லாமல் தங்கள் பணியை செய்வதற்கு அனுமதிக்கின்ற பாலினம்சார் தூய்மையான உணர்வினைக் கொண்ட பல்கலைக்கழக கலாச்சாரங்களையும் பல்கலைக்கழக சூழல்களையும் நிறுவுவதனை எளிதாக்குவதன் மூலம் பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பது முக்கியமாகவுள்ளது. இந்த நோக்கத்திற்கு ஏற்ப, 2020 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

- இணையவழி மூலமாக பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்செயல் தொடர்பான (SGBV) புகார்களை பதிவு செய்யும் நுழைவு (www.eugc.ac.lk/sgbv), இணையவழி மூலமாக பகிடிவதை தொடர்பான புகார்களை பதிவு செய்யும் நுழைவு, (www.ugc.ac.lk/rag) தொலைபேசி அழைப்பு (+94 112 123 700) மற்றும் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்செயல்(SGBV) பற்றிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரவுத்தளம் என்பற்றை உள்ளடக்கி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் மையப்படுத்தப்பட்ட குறை தீர்க்கும பொறிமுறைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.

- இலங்கை அரச பல்கலைக் கழகங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் பகிடிவதையால் பாதிக்கப்பட்டவர்களக்கு நிவாரணம் வழங்குவதற்கும் பகிடிவதை சார்ந்த கேடான நடத்தைகளில் இருந்து பாதுகாப்பதற்கும் ஒழுங்குமுறையான பொறிமுறையை வழங்குவதற்குமான குழுவொன்று நியமிக்கப்பட்டது.

- மாணவர் ஒழுக்கத்திற்கென நிலையான குழு ஒன்றினை அமைப்பதற்கான ஆரம்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை அரச பல்கலைக்கழக அமைப்பிலிருந்து பகிடிவதை செய்தலை இல்லாதொழிப்பதே இந் நிலையான குழுவின் நோக்கமாக காணப்படுகின்றது.

- பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்செயல் மற்றும் அதன் சமுக, சட்ட ரீதியான விளைவுகள் தொடர்பாக அச்சு ஊடகத்தினை பயன்படுத்தி பகிடிவதை,பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்செயல்களை எதிர் கொள்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு 2018/2019 கல்வியாண்டுக்காக உள்வாங்கப்பட்ட புதிய இளமாணி பட்ட படிப்பு மாணவர்களுக்கு ஆவணங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

- 'பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்செயல்கள் தொடர்பாக பல்கலைக் கழகங்கள், வளாகங்கள் மற்றும் நிறுவகங்களுக்கு மாணவர்களாலும்

ஊழியர்களாலும் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள்' தொடர்பான 04/2020ம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

- யுனிசெப்நிதியுதவியுடன் இலங்கை பல்கலைக் கழகங்க அமைப்பில் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறை தொடர்பான ஓர் ஆய்வும் இலங்கை பல்கலைக்கழக அமைப்பில் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை சாந்த வன்முறையை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் பொறிமுறைகளையும் அமூலாக்குதல் மற்றும் முன்மொழிதல் என்பன இரண்டு (02) கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன.

அரச கல்வியில் கொவிட்-19 இன் தாக்கங்கள்

சேர்த்துக் கொள்ளுதலின்மொத்த விகிதம், வேலைவாய்ப்பு, அறிவுப் பொருளாதாரம், தரம் மற்றும் பொருத்தப்பாடு ஒன்றுக்கான பட்டதாரிகளின் தொகுப்பு, பட்டதாரிகள் வெளியேறும் வயது, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தில் பல்கலைக்கழகங்கத்தின் பங்களிப்பு போன்ற முக்கிய குறிகாட்டிகளின் பிரகாரம் இலங்கையானது இதன் சமகாலத்தில் தேவைபடுகின்ற சீர்திருத்தங்களில் மிகவும் பின்தங்கியே காணப்படுகின்றது. இச் சூழலானது பல்கலைக்கழக கற்பித்தல், கற்றல், பரீட்சைகள், ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகள் மேற்கொள்ளுதல் என்பவற்றில் பாரிய தாக்கத்தினை செலுத்துகின்ற கொவிட்-19 இன் தாக்கத்தினால் சூழப்பட்டுள்ளது. அத்துடன் பல்கலைக்கழக புதிய அனுமதிகள் இத்தகைய தாக்கத்தினை குறைத்துக் கொள்வதற்கு மேலும் தீவிரமான செயற்பாடுளை வேண்டி நிற்கின்றன.

இந்த நிலமை தொடர்பாக கூறுகையில், தற்போதைய சூழ்நிலையின் விரிவான ஓர் பகுப்பாய்வு, கடந்நகால அறிக்கைகள், கொள்கைப் பரிந்துரைகள், தெரிவுசெய்யப்பட்ட பல்வேறு நாடுகளின் சிறப்பான நடைமுறைகள், நெருக்கடிப் பிரச்சினைகள், மற்றும் தடைகள் என்பன கூறப்பட்டது. அத்துடன் உயர் கல்வியில் கொவிட் 19 பரவலின் தாக்கத்தினை தணித்துக் கொள்வதற்கு மட்டுமே பரிந்துரைகள் வழங்கப்படாது ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசாங்கம், உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயர் கல்வியின் புதிய கட்டாய கொள்கைகளுடன் இணைந்து உயர் கல்வித் துறையை நவீனமயமாக்குவதற்கான அடிப்படை சீர்திருத்தங்களை செல்லுபடியாக்குவதற்கும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகளும் பரிந்துரைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கொவிட் 19 இன் தாக்கமும் அதனை குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகளும்

கொவிட்19 காரணமாக பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் நிகழ்நிலை/ தொலை வடிவம் மூலமாக எந்தளவுக்கு சாத்தியமோ அந்தளவுக்கு சாத்தியமான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதன் காரணமாக நிறுவன ரீதியாக, தகவல் தொழில்நுட்ப உட்கட்டுமான மற்றும் கல்வி சார்ந்த பல்வேறுபட்ட சவால்கள் இருந்தபோதிலும் அத்தகைய தாமதங்களை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. கலை மற்றும் மானிடவியல் பீட மாணவர்கள் உள்ளடங்கலாக அதிகமான மாணவர்கள் கல்வி நிகழ்ச்சி திட்டத்தின் வகை, வழங்கப்படுகின்ற மொழி, என்பவற்றை பொருட்படுத்தாது நிகழ்நிலையில் கற்பதற்கு பெருமளவு உற்சாகத்தையும் ஈடுபாட்டையும் காட்டியிருந்தார்கள் என்பதுடன் நிகழ்நிலை/ தொலைநிலை வழங்குதலில் மாணவர்களின் பங்குபற்றுதலானது எதிர்பார்ப்புக்கும் அப்பால் இருந்தது என்பதை குறிப்பிடுவது மனதிற்கு இனிமையாகவுள்ளது.

பாதிக்கப்பட்ட காலப்பகுதியில் கணிப்பீகளின் போது நிகழ்நிலை/ தொலைநிலை வடிவத்தினை பயன்படுத்தல் மற்றும் வாய்மொழி பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாகவும் அதிகரித்த அவதானிப்பு கொடுக்கப்பட்டது. இருப்பினும் பல்வேறுபட்ட தர்க்கரீதியான மற்றும் நடைமுறை அவதானிப்புகளின் காரணமாக எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் அரையாண்டுக்கான இறுதிப்பரீட்சைகள் நடாத்தப்படவில்லை.

நெருக்கடிமிக்க சவால்களை வெற்றி கொள்வதற்கு பின்வரும் பரிந்துரைகள் கீழே தரப்படுகின்றன:

- நன்கமைக்கப்பட்ட கற்றல் முகாமைத்துவ முறை (LMS), இணைய சேவைக்கான 365 நாட்கள் 24 மணித்தியாலங்களுக்கும் போதுமான தகவல் தொழில்நுட்ப உட்கட்டுமானம், ஒவ்வொரு பீடத்திலும் E- கற்றல் நிலையம், மற்றும் தகுதிவாய்ந்த தொழில்நுட்ப ஊழியர்கள் போன்றவற்றை அனைத்து பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் கொண்டிருப்பதை உறுதி செய்தல்.

- கல்விச் செயன்முறையின் ஒரு பகுதியாக கற்றல் முகாமைத்துவ முறையினை உருவாக்குவதற்கும் நிகழ்நிலை வழங்கலுக்கு பொருத்தமான அத்தியவசிய பாடத்திட்ட திருத்தங்களுடன் கற்றல் முகாமைத்துவ முறையில் தங்களுடைய இணையக் கற்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஊழியர்களுக்கு தேவைப்பட்ட பயிற்சி இணைய கற்கை சாதன அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதற்கும உயர் கல்வி நிறுவனங்களில் முறையான கொள்கைகளை உறுதி செய்தல்.

- நிகழ்நிலை/ தொலைநிலை வடிவத்திற்காக கல்விக் கற்கைகளை வடிவமைப்பதை போல இணைய பயன்பாட்டின் அனைத்து முயற்சிகளையும் அங்கிகரிப்பதற்கு ஓர் கொள்கையை உருவாக்குவதானது ஓர் உருவாக்க செயன்முறையாக உள்ளது. இது கற்கைகள் வழங்குதலில் தகவல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கு ஆசிரியர்களுடைய புத்தாக்க செயற்பாடுகளிலே தங்கியிருக்கின்றது.

- மாணவர்களால் கற்றல் சாதனங்களை அணுகுவதிலேயே நிகழ்நிலை கற்றலின் வெற்றி தங்கியுள்ளது. எனவே வெளியே இருந்துகொண்டு கற்றல் முகாமைத்துவ முறையுடன் (LMS) இணைந்து கொள்வதற்கு Laptop, tabs, Smart phone போன்ற தங்களுடைய கணினி சாதனங்களை பயன்படுத்தக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். உயர் கல்வி நிறுவனங்களில் இணையவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் விருப்பிற்கேற்ப Laptop கணினியொன்றையும் Smart phone (tab/phone) சாதனத்தையும் பெற்றுக்கொள்வதற்கு வசதிப்படுத்திக் கொடுத்தல் வேண்டும். மாணவர்கள் வேறுபட்ட நிதிப் பின்னணிகளை கொண்டிருப்பதனால் கல்விச் செயற்பாடுகளுக்காக இத்தகைய தனியாள் சாதனங்களை வாங்க அவர்களுக்கு உதவுகின்ற கல்விசார் கடன் வசதியொன்றை ஆரம்பித்து கொடுப்பது முக்கியமாக காணப்படுகின்றது. டேட்டா (Data) கட்டணங்கள் விசேட பிறோட்பாண்ட் பக்கேஜ் (Broadband package) மூலமாக குறைத்து வழங்கப்பட வேண்டும்.

- ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மத்தியில் நிகழ்நிலை தொடர்பினை மேற்கொள்வதற்காக காணொளித் தொடர்பாடல் வசதியொன்றுடன் கூடிய இணையம் மூலமாக இணைந்து வேலை செய்யும் சூழலொன்று காணப்படுவது முக்கியமாகவுள்ளது. உதாரணமாக கூகிள் வகுப்பறை, மீற், மக்றோசொவ்ற் ரீம்ஸ், மற்றும் சூம் போன்ற வேறு சாதனங்கள் மூலமாக தொடர்புகளை மேற்கொள்வதை குறிப்பிடலாம். கற்றல் செயற்பாடுகளுக்காக இத்தகைய வசதிகளை பயன்படுத்துவதற்கு உயர் கல்வி நிறுவனங்கள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

- பல்கலைக் கழகங்களில் கல்விச் செயற்பாடுகளின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்திற்காக இணைய நூலகம் மற்றும் மாணவர்களுக்கான ஏனைய சேவைகளையும் ஒருங்கிணைப்பதன் மூலமாக பீடங்களின் இணையவழி கற்றல் சூழலுக்கு கற்றல் முகாமைத்துவ முறை விரிவாக்கப்பட முடியும்.

- இலங்கை தகமை மட்ட நியமம் (SLQF) இணையக் கல்வி, இணையக் கற்பித்தல், மற்றும் இணைய கணிப்பீடுகளுக்கான கொள்கை வழிகாட்டல்களை இணைத்துக் கொள்ள வேண்டும். இந்த வழியில் இணையவழி வடிவங்களில் வழங்குதலை பயன்படுத்தி கல்வியை விசாலமாக்குவதன் காரணமாக தர உறுதிப்பாட்டு

பிரச்சினைகளை தெரிவிக்கின்ற அதேவேளை பொதுவான நியமம் ஒன்னினை இது எளிதாக்கும்.

- உருவாக்கப்பட்ட செல்லுபடியாகும் வழிகாட்டல்களின் வடிவமொன்றுடன், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, மிகச்சிறந்த சர்வதேச நடைமுறைகளிலிருந்து கற்றுக்கொண்டு துணைவிதிகளின் அவசியமான திருத்தத்துடன் அனைத்து சாதகமான கற்கைநெறிகளிலும் உருவாக்க/ சுருக்கமான மதிப்பீடுகளை அமுல்படுத்துவதற்கு கற்றல் முகாமைத்துவ முறைமையிலுள்ள வசதிகளை ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- இணையவழிக் கணிப்பீடு அல்லது பரீட்சைகளில் இடம்பெறக்கூடிய முறைகேடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பது முக்கியமாகும். மாணவர்கள் இணையவழி கணிப்பீடுகளை செய்கின்றபோது கருத்து திருட்டை சோதனையிடுகின்ற மற்றும் இணைய உலாவுதலை கட்டுப்படுத்தும் முடக்கம் போன்றவற்றுக்கான முக்கியமான மென்பொருட் சாதனங்கள் அல்லது பொதிகளை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை துரிதமாக சேர்த்தல்

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிய பின்னர், மாணவர்களைத் தெரிவுசெய்கின்ற தற்போதுள்ள முறைமை மற்றும் வெவ்வேறுபட்ட நிர்வாக, கல்விக் காரணிகளின் காரணமாக அரச பல்கலைக்கழகமொன்றிற்கு நுழைவதற்கு ஒரு வருடத்திற்கும் மேலாக மாணவரொருவர்காத்திருக்க வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நன்கு அபிவிருத்தியடைந்த இணையவழி விண்ணப்ப செயல்படுத்தல் முறையை கொண்டிருக்கின்ற போதும் பெறுபேறுகள் வெளியாகியதிலிருந்து மாணவர்களை தெரிவுசெய்கின்ற செயன்முறைக்கு வழக்கமாக ஆறு மாதங்கள் எடுக்கின்றது. கொவிட் 19 தாக்கத்தின் காரணமாக இந்தநிலை மேலும் மோசமடைந்துள்ளது. இத் தாமதங்களுக்கான காரணிகள் பின்வருமாறு: (அ) பாடசாலை விண்ணப்பதாரியாக இருக்கும் பட்சத்தில் தங்களுடைய விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் பாடசாலை அதிபர்களின் ஒப்புதலொன்றை பெறவேண்டியுள்ளதால் பாடசாலைகள் மூடப்பட்டு இருப்பதன் காரணமாக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதில் உள்ள தாமதம். (ஆ) க.பொ.த உயர்தர மாணவர்களின் இரண்டு பிரிவினர் இரண்டு பாடத்திட்டங்களை தொடர்வதாலும் அதன் விளைவாக வரும் மாணவர் எண்ணிக்கையின் உடன்பாடு காரணமாக மாணவர்களை தெரிவு செய்கின்ற முறமையிலுள்ள பிரச்சினை. (இ) மீள்தீருத்தல் பெறுபேறுகள் வெளியிடப்படும்வரை காத்திருக்க வேண்டிய தேவை. (ஈ) 100,000 க்கும் அதிகமான விண்ணப்பங்களின் திடீர் வருகையினால் அவற்றை செயற்படுத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் காணப்படுகின்ற வளங்களின் அளவுகள். (உ) கொவிட் 19 தொற்று காரணமாக பல்வேறு பல்கலைக்கழகளில் ஏற்படுகின்ற தாமதங்களின் குறிப்பிட்ட பிரச்சினைகளின் காரணமாக மாணவர்கள் பல்கலைக்கழகளுக்கு உள்ளெடுக்கப்படுவதிலும் கல்வி நடவடிக்கைளை ஆரம்பிப்பதிலும் மேலும் தாமம் காணப்படுதல்.

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மாணவர்களை சேர்த்தல் மிகவும் வேறுபட்டது. இங்கு வருட்திற்கு இரண்டு தடவைகள் மாணவர்களை சேர்த்துக் கொள்கின்ற வழக்கமான முறையே காணப்படுகின்றது. முதலாவது, க.பொ.த உயர்தர பெறுபேறுகள் வெளியிடப்பட்ட உடனேயும் இரண்டாவதாக, அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவுசெய்வது பூரணப்படுத்தப்பட்ட பின்னரும் ஆகும். அரசார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர்களை சேர்த்தல் விதிமுறையானது க.பொ.த உயர்தர பெறுபேறுகளில் தங்கியிருப்பதில்லை அத்துடன் இது பட்டப்படிப்பு நிகழ்ச்சி திட்டம் மற்றும் அவர்களின் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுடகான இணைப்புகளிலும் தங்கியுள்ளது. எவ்வாறாயினும் அரச பல்கலைக் கழகங்களுக்குரிய சேர்த்தலை முடித்துக் கொண்ட பின்னர் தெரிவு செய்யப்பட்ட இத்தகைய மாணவர்கள் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'வட்டியில்லா மாணவர் கடன் திட்டம்'(IFSLS) மற்றும் 'எனது எதிர்கால கடன் திட்டம்' மூலமாக அரசார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்படுகின்ற மாணவர்கள் குழுவே கொவிட் 19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மிக முக்கிய துறையாக காணப்படுகின்றது.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அரச பல்கலைக்கழகங்களுக்குரிய சேர்த்தலில் ஏதாவது தாமதம் இருப்பின் அது இந்த

வகைப்பாட்டின் கீழ் அரசார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களுக்கு அண்ணளவாக 5000 மாணவர்களை சேர்த்துக் கொள்வதனை மோசமாக பாதிக்கும்.

இத்தகைய தாமதங்களுக்கான காரணிகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டிருப்பதுடன் அவற்றை குறைத்துக் கொள்வதற்கான பரிந்துரைகளும் பின்வருமாறு காணப்பகின்றன:

- கற்கைநெறிகளின் பெரும்பான்மைக்காக 40% தகுதி அடிப்படையிலும் 55% மாவட்ட அடிப்படையிலும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்கின்ற தற்போதுள்ள விதிமுறைகள் காரணமாக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் மீது பெறுபேறுகளில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினை கொண்டிருப்பதனால் பல்கலைக் கழக தெரிவுச் செயன்முறைக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு க.பொ.த உயர்தர பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் பல்கலைக் கழகங்களுக்கான மாணவர்கள் தெரிவை விரைவாக ஆரம்பிப்பதற்கு மீள் திருத்தல் பிரச்சினையை துரித்தப்படுத்த வேண்டிய பாரியதொரு தேவை காணப்படுகின்றது.

- அபேடசகர்களின் சரிபார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் கூட காணப்படுகின்றது. எனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
தற்போதுள்ள நேரத்தை விரயமாக்கும் பேப்பர் அடிப்படையிலான தொடர்பாடலை தவிர்த்து க.பொ.த சாதாரணதர மற்றும் க.பொ.த உயர் தரங்களின் சரிபார்க்கப்பட்ட பெறுபேறுகளை உடனடியாக பெற்றுக் கொள்வதற்காக பரீட்சைத் திணைக்கழத்துடன் இணையவழித் தொடர்பொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை தற்போது எடுத்திருக்கின்றது.

- பல்கலைக்கழக தெரிவுக்காக விண்ணப்பங்களை சோதனையிடல் மற்றும் சரிபார்த்தலின் தற்போதுள்ள நடைமுறையானது நீண்ட நேரத்தை எடுக்கின்றது. கைகளால் செய்யப்படுகின்ற பல நடவடிக்கைகள் மற்றும் விண்ணப்பங்களின் வேகமான செயலாக்கத்திற்கு இட்டுச் செல்கின்ற ஏற்கனவே இருக்கின்ற முறையை விட மிக நவீனத்துவமானவற்றை தானியக்கவல்ல விண்ணப்பங்களை சோதனையிடல் மற்றும் சரிபார்த்தலுக்காக புதிய முறையொன்றை பெற்றுக்கொள்கின்ற செயன்முறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது தற்பொழுது சாதாரண உள்ளெடுப்பின் கீழ் மாணவர்களை தெரிவுசெய்வதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் பொறுப்பாக உள்ளது. மாணவர்கள் பதிவு செய்யப்படாமை காரணமாக வெற்றிடங்களை நிரப்புதலானது பல்கலைக் கழகங்களிற்கு இறுதிப் பெயர் பட்டியலை அனுப்புவதற்கு முன்பாக முதலாவது தெரிவுக்கு பின்னர் சில கற்கை நெறிகள் 3 தொடக்கம் 4 மாதங்களை எடுத்துக் கொள்வதனால் ஒவ்வொரு வருடமும் 8 தொடக்கம் 10 சுற்றுக்களை எடுக்கின்றது. முதலிரண்டு சுற்றுகளுக்குப் பின்னர் புதிதாக பதிவு செய்தவர்களின் எண்ணிக்கைப்படி குறைவாகவுள்ளது. தீவளாவிய திறமை அடிப்படையொன்றில் பல்கலைக் கழகங்களிற்கு வெற்றிடங்களை நிரப்புதலை கையளிப்பதற்கு இது முன்மொழியப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக ஏற்கனவே உள்ள மாணவர்களை சேர்க்கும் கொள்கை மாற்றப்பட வேண்டியுள்ளது.

- இத்தகைய அழுத்தங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்கான திணைக்களமானது மாணவர்களை தெரிவு செய்கின்ற காலப்பகுதியில் கிழமையொன்றின் 7 நாட்களிலும் இரவு நேரங்களிலும் கூட மிகுந்த வேலைப்பழுவுடன் வேலையை செய்கின்றது. இத்தகைய முறை மற்றும் செயன்முறை அழுத்தங்கள் குறைக்கப்படும் வரையில் ஆகக்குறைந்தது தற்காலிகமான ஓர் வழிமுறையாக பல்கலைக் கழகங்களிற்கு மாணவர்களை சேர்ப்பதிலுள்ள தாமதங்களை குறைப்பதற்கு அதிகமான பணியாட்கள் மற்றும் இடத்திற்கான ஒதுக்கீடு தேவைப்படுகின்றது.

- காத்திருக்கின்ற இந்த நேரத்தினை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு பல்கலைக் கழக கற்கை நெறிகளை வினைத்திறனாக தொடர்வதற்கு தேவைப்படுகின்ற அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் ஆங்கில மொழித் திறன்னளை மேம்படுத்திக் கொள்ளவும் தொழில் திறன்கள் மற்றும் தேர்ச்சிகளை விருத்தி செய்யவும் இணைய அல்லது தகவல் தொழில்நுட்பங்களை வெற்றிகரமாக பயன்படுத்த முடியும். 2020ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக் கழகங்களின் புதுமுக மாணவர்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பல்கலைக் கழகத்திற்கு முன்னரான இணையவழி ஆங்கில மொழி நிகழ்ச்சித் திட்டமொன்று ஒழுங்குபடுத்தப்படும். எதிர்காலத்தில் இக்கற்க்கை நெறியினை தொடர்வதற்கு க.பொ.த உயர் தரபெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு உயர் கல்விக்காக பதிவு செய்வதற்கு தகுதியுள்ள அனைவருக்கும் இலகுபடுத்தும் முகமாக முன்மொழியப்பட்ட இணையப் பல்கலைக் கழகத்தின் ஊடாக இந் நிகழ்ச்சித் திட்டமானது வழங்கப்படவுள்ளது.

- மேலும், அதிகமான கற்க்கை நெறியின் 30% உள்ளடக்கத்தினை வழங்குவதற்கும் ஏனைய கற்க்கை நெறியின் 80% வரைக்கும் உள்ளடக்கத்தினை வழங்குவதற்கும் இணையம்/ தகவல் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்த முடியும். எனவே கற்க்கை நெறியொன்றை வழங்குவதற்கு தேவைப்படும் நேரம் குறைக்கப்படுவதோடு பௌதீக வளங்களும் குறைக்கப்படும். பல்கலைக் கழககத்தில் நேருக்கு நேரான விரிவுரைகளை தொடங்குவதற்கு முன்னதாக பல்வேறு இணைய கற்கைகளை தொடரக்கூடிய நிலையிலுள்ள புதுமுக மாணவர்களுக்கு இணையம்/ தொலைநிலை கற்கைகளை ஆரம்பிப்பதன் மூலமாக காத்திருக்கும் நேரத்தை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு உயர் கல்வி நிறுவனங்கள் இந்த முறைமையினை பயன்படுத்தலாம்.

கொவிட் 19க்கு அப்பால் உயர் கல்விச் சீர்திருத்தங்கள்.

கொவிட் 19க்கு அப்பால் சீர்திருத்தங்களை கவனத்தில் கொள்ளும்போது மூன்றாம் நிலைக் கல்விக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு தேவையான விடாப்பிடியான தாகத்திற்கும், (அ) அரச மற்றும் அரசசார்பற்ற இளமானிப் பட்ட உயர் கல்வி நிறுவனங்கள் (ஆ) இளமானிப் பட்ட மற்றும் பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி பலல்கலைக் கழகங்கள் (இ) அரசசார்பற்ற தொழில்சார் மற்றும் தொழில்முறைசார் நிறுவனங்களைக் கொண்ட உயர் கல்வி நிறுவனங்களின் முக்கிய மூன்று வகைகளை உள்ளடக்குகின்ற பூகோளரீதியாக அதிகளவு நிரூபிக்கப்பட்ட முத்தரப்பு முறைமையொன்றுக்கு இலங்கையிலுள்ள மூன்றாம் நிலைக் கல்வியை உருமாற்றம் செய்வதற்கு புரட்சிகரமான மாற்றங்கள் உட்புகுத்தப்பட வேண்டியுள்ளது.

மூன்றாம் நிலைக் கல்விக்கான அணுகுதலை மேம்படுத்துவதற்காக மூன்று துணைத் துறைகளுக்கு இடையிலும் மத்தியிலும் நெகிழ்ச்சி தன்மை மற்றும் இயக்க தன்மையை வழங்குதல், நன்கு வரையறுக்கப்பட்ட பல்வேறு கல்வி, பயிற்சி மற்றும் தொழில் வழிகள் என்பற்றை வழங்குதல், நியமங்கள், சமநிலைகள், மற்றும் வழங்கப்பட்ட பயிற்சியின் பொருத்தமான 04 வகைகளை பெரிதாக்குதல், பட்டப்பின்படிப்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி, புத்தாக்கம், வணிகமயமாக்குதல் என்பவற்றை ஊக்குவித்தல், வருமான உற்பத்தி மற்றும் தள்ளுபடிகளை ஊக்குவித்தல். எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களின் நிறைவினை உறுதிசெய்வதற்கு பின்வரும் இலக்குகளும் மூலோபாயங்களும் முன்மொழியப்படுகின்றன.

அதன்படி இந்த அறிக்கையானது விசேடமான இலக்குகளின் கீழ் இலங்கையின் உயர்கல்வித் துறையை மறுசீரமைப்பதற்காகவும் நவீனத்துவம் செய்வதற்காகவும் பரிந்துரைகளின் தொகுதியொன்றை பரிந்துரைக்கின்றது. இலக்குகள் ஒவ்வொன்றின் கீழும் சில முக்கியமான பரிந்துரைகள் வழங்கப்படுள்ளன.

பொருத்தமான சட்டவாக்கத்துடன் உயர்கல்வி அமைப்பை மறுசீரமைத்தல்

இலங்கையில் உயர்கல்வி அமைப்பானது நான்கு தசாப்தங்களுக்கு முன்பு ஆறுக்கும் குறைவாகவிருந்த பல்கலைக்கழகங்கள் மீள்கட்டமைப்பு செய்யப்பட்டிருந்த போது இயற்றப்பட்ட 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துடன் அவசரமான மறுசீரமைத்தலை வேண்டிநிற்கின்றது.தற்போதுள்ள பல்கலைக்கழக அமைப்பானது பொறுப்புக்கூற முடியாததாகவும் செயல்திறனற்றதாகவும் காணப்படுவதற்கு காரணமான பலமான நிறுவனத் தன்னாட்சி மற்றும் இறுக்கமான மத்திய கட்டுப்பாடு இரண்டினாலும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே தற்போது இருந்து வருகின்ற பல்கலைக்கழகச் சட்டம் மற்றும் இணைந்துள்ள ஒழுங்கு முறைகள் என்பன பொருத்தமான முறையில் திருத்தப்பட வேண்டும்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை உச்ச செயல்திறன் மிக்க ஒன்றாக, ஒழுங்குமுறை மற்றும் எளிதாக்குதலில் உயர் கல்வித் துறையின் கரமாக உருவாக்குவதற்கு
- பணி வேறுபடுத்தலை எளிதாக்குவதற்கு நிறுவப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்கு உச்சமான தன்னாட்சியை வழங்குவதற்கும்
- நிறுவப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள், நகர பல்கலைக்கழகங்கள், மற்றும் STEM கான ஓர் புதிய பல்கலைக்கழகம் என்பவற்றுடன் சேர்க்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகள், வளாகங்களை நிறுவுவதன் மூலமாக பல்கலைக்கழக உள்ளெடுப்பை விரிவாக்குவதற்கு

ஆட்சியை மறுசீரமைப்பதன் மூலமாக உயர் கல்வி நிறுவனங்களில் செயல்திறனை ஊக்குவித்தல்

உயர் கல்வியில் நல்லாட்சி முக்கியமானதாக இருப்பதுடன் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் ஒன்றிணைந்துள்ளது. அதிகப்படியான நியம மட்டமொன்றாக ஆட்சியானது நீண்ட காலத்திற்கு நிலைத்திருப்பதற்கு பல்கலைக்கழகமொன்றினை அனுமதிக்கின்றது. இதனடிப்படையில் நிர்வாக மற்றும் நிதியியல்செயல்திறனை ஊக்குவிப்பதற்கு உயர் கல்வித்துறையின் ஆட்சியை மறுசீரமைப்பு செய்வது அவசியமாகவுள்ளது.

- அனைத்து நிர்வாக, ஒழுங்கு முறை நடவடிக்கைகளையும் அதிக பயனுள்ளதாகவும் செயல் திறனுள்ளதாகவும் மேற்கொள்வதற்குத் தேவையானதை பெற்றுக்கொள்வதற்கு உயர் கல்வி அமைச்சினை மறுசீரமைப்பதற்கும்

- அரசசார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களை ஆட்சி செய்வதற்கு அரச சார்பற்ற உயர் கல்விப் பேரவை/ அதிகாரசபை என அழைக்கப்படும் புதியதொரு ஒழுங்கான அமைப்பினை உருவாக்குதல்
- பெறுபேற்று அடிப்படையிலும் மேம்படுத்தப்பட்டிருக்கின்ற செயலாக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் அடிப்படையிலும் அரச பல்கலைக் கழகங்களை உருவாக்குவதற்கு நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான பொருத்தமான மறுசீரமைப்புகளை பின்பற்றுதல்
- மூலோபாய முகாமைத்துவ அணுகுமுறையை பின்பற்றுவதற்கு நிறுவனம்சார் பொறிமுறைகளை அனைத்து பல்கலைக்கழகங்களும் கொண்டிருப்பதை உறுதிசெய்தல்.
- எந்தவொரு ஒப்பீட்டு அனுகூலத்தினையும் கொண்டிராத பல்கலைக்கழகங்களிலுள்ள முக்கியமற்ற துணைச் சேவைகள் அனைத்தையும் வெளியேற்றி அவைக்கு பதிலாக அத்தகைய சேவைகளை வழங்குவதற்கு அரச-தனியார் கூட்டாண்மைகளை (PPPs) பயன்படுத்தல்.

இணைய கற்றல் ஊடாக பயன்தருகின்ற கற்பித்தல் மற்றும் கற்றல் அனுபவத்தை வழங்குவதற்கு தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தல்

இலங்கையில் உயர் கல்வி நவீனமயப்படுத்தலானது நாட்டின் அபிவிருத்திக்கு பல்வேறு பிரச்சினைகள் நெருக்கடியாக மாறியுள்ளதை தெரிவிப்பது முக்கிய தேவைப்பாடாக காணப்படுகின்றது. புதிய அழகான பல்கலைக் கழகங்களை கட்டுவதனாலோ விரிவுபடுத்துவதனாலோ உயர் கல்விக்காக அதிகரிக்கின்ற கேள்வியை நிவர்த்தி செய்ய முடியாது மாறாக கல்வியை கற்பதற்கு விரும்புகின்ற அனைவருக்கும் கல்வியை கற்பதற்கு வாய்ப்பினை வழங்குவதில் முக்கிய பங்கொன்றினை தொலைக்கல்வி மற்றும் இணையவழி கற்றல் வகிக்க வேண்டும். இணையவழி கல்வி பயனுள்ளதாக இருப்பதற்கு மூன்று முக்கியமான கூறுகள் இருத்தல் வேண்டும். தொழில்நுட்ப தேவைகள்,5 கற்றல் வளங்கள், கற்போருக்கான ஆதரவு என்பனவாகும். இலங்கையில் இணையவழி கற்றலை பலப்படுத்தி மேம்படுத்துவதற்கான முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு:

- மாணவர்களுடன் கற்றல் முகாமைத்துவ முறையை இணைப்பதற்கு ஓர் சாதனத்தையும் போதுமான இணையத் தொடர்பு வசதிகளையும் ஏற்படுத்தி கொடுப்பதற்கு இணைய கற்கைகளை வழங்கியும் அதற்கான தலையீடுகளை திட்டமிட்டு அமுல்படுத்தவும் அனைத்து விதமான தகவல் தொடர்பாடல் உட்கட்டுமானங்களையும் வழங்குவதற்கு கற்பதன் நோக்கம் மற்றும் திறன் என்பவற்றை விரிவாக்குதல்.
- 'திறந்த கல்வி வளம்' எனும் ஓர் தேசிய கொள்கையை அபிவிருத்தி செய்வதன் மூலமாக பலவகைப்பட்ட கற்றல் வளங்களை ஓரிடத்தில் திரட்டுவதற்கான தேசிய களஞ்சியமொன்றினை ஸ்தாபிப்பதற்கான தேசிய செயற்றிட்டம் ஒன்றினை ஆரம்பித்தல்.

- உலகத் தரம்வாய்ந்த பல்கலைக் கழகங்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட கற்கைநெறிகளை இலங்கை மாணவர்களுக்கு வழங்குவதற்கும் இலங்கை கல்வியியலாளர்களால அபிவிருத்தி செய்யப்பட்ட கற்கைநெறிகளை உலகிலுள்ள பிரைஜைகளுக்கு வழங்குவதற்கும் சர்வதேச அமைப்புகளுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தல்.

- பின்தங்கிய பகுதிகளிலுள்ள மாணவர்களை அடைந்து கொள்வதற்கும் மாணவர்களுடன் தொடர்பை பேணவும் ஈடுபாட்டுடன் இருப்பதற்கும் சமுக வலைத்தள பயன்பாட்டை ஊக்குவிக்க இணையவழி கலந்துரையாடல் அமைப்பு வசதிகளை விரிவாக்கம் செய்தல்.

உயர்கல்வியின் பொருத்தப்பாட்டினை மேம்படுத்தல்

கல்வித்துறையில் முக்கியமான தேவையொன்றாக கல்விப்பொருத்தப்பாடு காணப்படுகின்றது. மாறிவரும் உலகில் கல்விப் பொருத்தப்பாடாக நேற்று என்ன கருதப்பட்டது என்பது இன்றைய தனிநபர்கள், தொழில் மற்றும் சமுகத்தின் தேவைகளுக்கு பொருத்தமற்றதாக இருக்க கூடும். திட்டமிடல், வடிவமைப்பு, அமுல்படுத்தல், கண்காணித்தல், மீளாய்வு, மதிப்பீடு மற்றும் மேம்பாடு என்பவற்றை மையமாகக் கொண்ட செயன்முறைகளின் மட்டநியமம் ஒன்றுடன் உயர் கல்வியில் கல்விப் பொருத்தப்பாடு அமுல்படுத்தப்படும். இதன் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ளும் போது இலங்கையில் உயர் கல்வியின் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதற்கு சில பரிந்துரைகள் கீழே காணப்படுகின்றன.

- நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு கற்போர் மையப்படுத்திய கற்பித்தல் மற்றும் கற்றல் அணுகுமுறைகள் மற்றும் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கல்வியை வழங்குவதற்கு கற்றல் மதிப்பீட்டு முறைகள் போன்றவற்றை ஒன்றிணைத்தல்.

- நவீன கல்வி தொழில்நுட்பங்களை பின்பற்றுவதனை ஊக்குவிப்பதற்கும் பல்கலைக் கழகங்களின் கல்விசார் மற்றும் நிர்வாக பணியாட்களின் தொடர்ச்சியான தொழில் முறைசார் அபிவிருத்தியை நிர்வகிப்பதற்கும் உயர் கல்விக்கான தேசிய நிறுவனம் ஒன்றினை நிறுவுதல்.

- வெளிநாடுகளில் பட்டபின்படிப்பு கல்வியை பெற்றுக் கொள்வதற்கும் நவீன கல்வி வழங்கலை வெளிக் கொணர்வதற்கும் கல்வியியலாளர்களுக்கு புலமைப்பரிசில் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதுடன் பணியாட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு முதன்மையான துறைகளில் கல்விசார் பணியாளர் ஆளணியை விரிவாக்கம் செய்தல்.

- பாடத்திட்ட சீரமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்ட வழங்கல் மற்றும் அறிவு, திறன்களை விருத்தி செய்வதற்கான மதிப்பீடு மற்றும் தொழில் வழங்குநர் மற்றும் தொழிலுக்கு தேவைப்படும் தேர்ச்சிகள் என்பவற்றை உறுதிசெய்து கொள்வதற்கு மூலோபாயங்களை அமுல்படுத்தல்.

- தர உறுதிப்பாடு மற்றும் முறையான தலையீடுகள் ஊடாக வெளிவாரி பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் தரத்தினை மேம்படுத்தல்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் சேவைகளை விரிவுபடுத்தல்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமானது பெருமளவவு எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு இடமளிப்பதற்கு ஏற்ற மாதிரிவடிவம், அமைப்பு மற்றும் கட்டமைப்பினை கொண்டிருக்கின்றது. நாடடின் வெவ்வேறு பகுதிகளில் சிதறிக்கிடக்கும் மாணவர்களை அடைந்து கொள்வதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கல்வி நிலையங்களின் வலையமைப்பானது உதவுகின்றது. அண்மைக் காலங்களில் இலங்கை திறந்த பல்கலைக் கழகமானது தன்னை ஒரு டியிற்றல் மயமாக்கப்பட்ட பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு தொழில்நுட்பத்தின் மூலம் இயங்கக்கூடிய பல ஆரம்கட்ட முயற்றிகளை அமுல்படுத்தி வருகின்றது. வருகின்ற 5 வருடங்களில் இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் தொகையை 100,000 வரை அதிகரிப்பதற்காக பின்வரும் மூலோபாயங்களை அமுலாக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.

- ஏற்கனவே இருக்கின்ற மற்றும் புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மாணவர்களின் பெருமளவான எண்ணிக்கை என்பவற்றை கையாள்வதற்கு அவசியமான உட்கட்டுமானம் மற்றும் மனித வளங்கள் என்பவற்றுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.

- பன்முகப்படுத்தப்பட்ட தகமைகள் மற்றும் அனுபவங்களுடன் மாணவர்களுகக்கான வேலைவாய்ப்பு சார்ந்ததும் பொருத்தமானதுமான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்குமான புதிய பிரிவுகளுக்கு இடையிலான மற்றும் பீடங்களுக்கு இடையிலான நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல்.

- மத்திய வளாகத்திற்கு பொறுப்புக்கூறும் அதேவேளை கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை சுயாதீனமாக நிர்வகிப்பதற்கு நிலையங்கள் இயங்கும் விதத்தில் நிறுவனம்சார் மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தல்.

நாட்டின் தேசிய அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்STEM அல்லாத பட்டதாரிகளின் தேர்ச்சிகள் மற்றும் திறன்களை மேம்படுத்தல்

எப்போதுமே மாறிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர் குழுவினை வழிப்படுத்துவதற்கு தேவைப்படும் தேர்ச்சிகள் மற்றும் திறன்களின் அளவுமட்டத்துடன் பட்டதாரிகளை விருத்தி செய்தல் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி நிகழ்ச்சி திட்டங்களுக்கான முக்கிய தேவையொன்றாக காணப்படுகின்றது. இந்த வகையில் துரிதமாக மாறுகின்ற உலகின் சவால்களை எதிர்கொள்வதற்கு STEM அல்லாத பட்டதாரிகளின் தேர்ச்சிகள் மற்றும் திறன்களை அதிகரிப்பதற்கு பின்வரும் விடயங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பத்தில் தகமையொன்றை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பொன்றினை STEM அல்லாத நிகழ்ச்சித்திட்ட பட்டதாரிகளுக்கு வழங்குதல்.

- நவீனத்துவம் வாய்ந்த வசதிகளை மாணவர்கள் அனுபவிப்பதற்கு ஏற்றவகையில் STEM அல்லாத அனைத்து பீடங்களின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டுமானத்தை பலப்படுத்தல்.

- அனைத்து STEM அல்லாத பீடங்களிலும் தகவல் தொழில்நுட்ப சேவை அலகுகள்/ திணைக்களங்களை ஸ்தாபித்தல்.

உயர்கல்விக்கான நுழைவினை அதிகரிப்பதற்கு மெய்நிகர் பல்கலைக்கழகமொன்றை ஸ்தாபித்தல்

கொவிட் 19 பரவலைத் தொடர்ந்து எழுகின்ற சாதகமான அம்சங்களை கவனத்தில் கொள்ளும்போது கேள்வி – நிரம்பல் இடைவெளியை பற்றி கூறாத அதிகப்படியான அதிகரிப்புகளை எதிர்பதான மாணவர் உள்ளெடுப்பின் மொத்த அதிகரிப்புகளை கல்விக்கான மெய்நிகர் அணுகுமுறை ஒன்றினை அமுல்படுத்துவதற்கான ஓர் வாய்ப்பானது இறுதியாக இயலச் செய்கின்றது. கூட்டிணைந்த வடிவமொனறில் ஏற்கனவே இருக்கின்ற பல்கலைக்கழகங்களினது ஈடுபாட்டுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இணையப் பல்கலைகழகமொன்றினை ஸ்தாபிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.

- துறைகள் மற்றும் பீடங்களின் பாரம்பரிய முறையை கொண்டிராத வகையில் ஆனால் குறைந்தளவான நிரந்தர கல்விசார் பணியாளர்களை சம்பளத்திற்கு அழைத்தும் பங்கு நிறுவனங்களிலிருந்து வருகை விரிவுரை அடிப்படையிலும் வளங்களை பெறுதல்.

- பங்கு நிறுவனங்களில் இருந்து பெறப்படும் கல்வியாளர்களுடன் கல்விகளுக்கான சபையொன்றை ஸ்தாபித்து கற்கைக் குழுவினால் உருவாக்கப்பட்ட இதவடிவங்களை வழங்குவதோடு ஒவ்வொரு இதவடிவத்துக்கும் சான்றிதழ்கள் வழங்குதல்.

- நெகிழ்ச்சி தன்மையுடனான நுழைவு மற்றும் வெளியேற்றங்களின் கொள்கைகளின் படி முற்தேவைகளின்றி, சாதாரண சித்தியை பெறுவதற்கு எளிதாக்கி தங்களுடைய விருப்பத்திற்கிணங்க கற்கை இதவடிவங்களை இலவசமாக பெறுவதற்கு மாணவர்களை அனுமதித்தல்.

- நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கற்கை வழங்குநர்களால் வழங்கப்பட்ட வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இடையில் கடன் பரிமாற்றம் மற்றும் விலக்கல்களை அனுமதித்தல்.

- நாட்டிற்கு உள்ளேயும் வெளிநாடுகளிலும் சிறப்பான மனித வளங்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் பகிர்தல் அத்துடன் ஏனைய நிறுவனங்களின் ஏற்கனவேயுள்ள உட்கட்டுமானத்தினை உகந்த முறையில் பயன்படுத்தல்.

அரச சார்பற்ற உயர் கல்வித் துறையை விரிவாக்கம் செய்தல்

கடந்த சில வருடங்களில் இலங்கையிலுள்ள அரச சார்பற்ற உயர் கல்வித் துறையானது இலங்கையில் உயர்கல்வியை பெற்றுக்கொள்வதற்கு இலங்கையிலுள்ள மாணவர்களுக்காக பல வாய்ப்புக்களை தாமாக வழங்குவதில் நீண்ட காலமாக முன்வந்துள்ளது. எவ்வாறாயினும் இத்துறையானது முறையான சட்ட உறுதிப்பாடு மற்றும் கண்காணிப்பு முறைமைகளை கொண்டிராதமையால் இதனுடைய வளர்ச்சி மற்றும் நம்பகத் தன்மை என்பன பல்வேறு தரப்பினர்களால் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கண்காணித்தல் மற்றும் நம்பகத்தன்மை கட்டமைப்புடனும் முறையான சட்டரீதியான ஆதரவுடனும் அரச சார்பற்ற உயர் கல்வித் துறையை விரிவாக்கம் செய்வதிலேயே அவதானம் செலுத்தப்பட வேண்டிய பிரதான பகுதிகளில் ஒன்று இருத்தல் வேண்டும். மேலும் பாதுகாப்பான சூழலுக்குள் வெளிநாடுகளில் கற்றுவருகின்ற, மீண்டும் இலங்கைக்கு வந்து தங்களுடைய உயர்கல்வியை தொடர்கின்ற மாணவர்களுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் என்பவற்றை ஊக்குவித்தல்

இன்றைய தொழிலுக்கு பின்னரான பொருளாதார அறிவானதுபொருளாதார வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் உள்நாட்டு ஆராய்ச்சித் திறன் என்பவற்றுக்கிடையிலான நெருக்கமான தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய பொருளாதாரம் சார்ந்த புத்தாக்கங்களின் மிகவும் பயனுறுதிவாய்ந்த ஊக்குவிப்பாளராக பல்கலைக்கழகம் சார்ந்த ஆராய்ச்சி இருந்து வருகின்றது. உயர் நிலையிலுள்ள அதிகமான ஆசியப் பல்கலைக்கழகங்கள் உலகப் போக்குடன் சேர்ந்து பல்கலைக்கழகங்களை ஆராய்ச்சி செய்வற்கு பல்கலைக்கழகங்களை கற்பிப்பதிலிருந்து தாமாக மாற்றம் அடைந்துள்ளன. இலங்கையானது இளநிலைப் பட்ட மற்றும் பட்ட பின்படிப்பு கல்வியின் முக்கிய முலக்கூறுகளை ஆராய்ச்சி செய்வதற்கும் புத்தாக்கம் செய்வதற்கும் முன்னுதாரணமான மாற்றம் ஒன்றினை வேண்டி நிற்கின்றது. இதனடிப்படையில் இலங்கை உயர் கல்வி நிறுவனங்களுக்குள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் என்பவற்றை ஊக்குவிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட முக்கிய மூலோபாயங்களுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- ஆராய்ச்சிக்கான திடமான ஆற்றல் வளம் மற்றும் புதிய நிதியிடல் வாய்ப்புக்கள் என்பவற்றுடன் புதிய எண்ணங்களுக்கு பதிலளிப்பதற்கு நெகிழ்ச்சி தன்மைமிக்கதோர் பொறிமுறையை வகுத்தல் மற்றும் நாட்டில் உயர் தகமை வாய்ந்ததும் திறன்மிக்க திறமை ஒன்றினையும் கட்டியெழுப்பி பூகோளத் திறமையை கவர்வதற்கு செயல் முறைகளை வகுத்தல்.

- இலங்கையில் புத்தாக்க உற்பத்திகள் மற்றும் சேவைகள் என்பவற்றை மாற்றியமைக்கின்ற கல்வி மற்றும் ஆராய்ச்சி சிறப்பினை ஊக்குவிக்கின்ற ஒருங்கிணைந்த, பிரிவுகளுக்கு இடையில், பலதரப்பட்ட பிரிவுகளுக்கு இடையில் உள்ள அணுகுமுறைகளின் பெறுமதிமிக்க இணைப்பினை ஸ்தாபிப்பதில் நோக்கத்தையுடைய உயர் கல்விசார் சீரமைப்புக்களை அறிமுகஞ் செய்தல்.

- அனைத்து பங்குதாரர்களுக்கும் பரஸ்பரமாக பயன்தரக்கூடியதும் இலாபம் தரக்கூடியதுமான ஒன்றாக பல்கலைக்கழகம் மற்றும் தொழில் என்பவற்றுக்கு இடையில் புத்தாக்க கூட்டிணைவுகளை ஊக்குவித்தல் அத்துடன் அறிவியல் சொத்து மற்றும் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கத்தினை உள்ளடக்குவதோடு திறனைக் கட்டியெழுப்புதலில் பங்கெடுத்தல்.

- உலகப் பொதுவான நோக்குடன் உச்சமான தரநிலைகளை அனுசரிப்பதற்கும் தரதரமிக்க ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கும் உலகியல் தோற்றப்பாடுடனான ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நிலையங்களை பல்கலைக்கழகங்களுக்குள் உருவாக்குதல். எனவே தான் இத்தகைய நிறுவனங்களும் அவற்றின் ஆராய்ச்சி விளைவுகளும் உலகியல் போட்டித்தன்மை உடையனவாக இருக்கின்றன.

- சிறப்பான தரமிக்க ஆராய்ச்சி நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் சர்வதேச மானியங்களுக்காக போட்டியிடுவற்கு கூட்டிணைப்பு மற்றும் திறனை அபிவிருத்தி செய்தல் ஊடாக ஆராய்ச்சிகளுக்கான நிதிகளை உயர்த்துதல் மற்றும் நன்கொடைகள் ஊடாக ஆராய்ச்சிக்கு நிதியிடுதலை அதிகரித்தல்.
- ஏற்கனவேயுள்ள இடைவெளிகளை தெரிவிப்பதற்கும் அறிவியல் சொத்து உருவாக்கம், புத்தாக்கம், மற்றும் வணிகமயமாக்கல் போன்றவற்றுக்கு இட்டுச் செல்வதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை கொண்டு நடாத்துவதற்குள்ள தடைகளை நீக்குதல்.

உயர் கல்வியில் தர உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தல்

தர உறுதிப்பாட்டு என்ற எண்ணக்கருவானது இரண்டு தசாப்தங்களுக்கு முன்னதாகவே இலங்கை அரச பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகரித்ல் பேரவையானது (QAAC), தர உறுதிப்பாட்டின் நன்மைகள் மற்றும்

எண்ணக்கருவுடனான பரிட்சையம் தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்குதல் மேலும் தரத்தில் ஆகக் குறைந்த தரநிலையுடன் இணக்கப்பாட்டினை சரிபார்ப்பத்தல் மீது கவனம் செலுத்துவதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இக்கால கட்டத்தில் அதிகமானவை அடையப்பட்டிருக்கின்றன. இலங்கை பல்கலைக்கழகங்களுக்கான தர உறுதிப்பாட்டு கையேடு மற்றும் பாட நியம அறிக்கைகள், நடத்தை விதிக்கோவைகள் போன்ற முக்கிய உசாத்துணை ஆவணங்கள் மற்றும் இலங்கை தகமை மட்ட நியமம் என்பன வெளியிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் தர உறுதிப்பாட்டு நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் மற்றும் நிறுவன மீளாய்வுகள் என்பன அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தற்பொழுது வழக்கமானதொரு அம்சமாக காணப்படுகின்றன. எவ்வாறாயினும் தர உறுதிப்பாட்டு வேலையின் மேலதிக அபிவிருத்தியானது அரச பல்கலைக்கழகங்களை மட்டும் உள்ளடக்காது உயர் கல்வியை வழங்குபவர்களின் முழுமையான துறையையும் கூட உள்ளடக்கி மேற்கொள்ளப்பட வேண்டும். இந் நோக்கத்திற்கான முக்கிய பரிந்துரைகளில் சில கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- அரச மற்றும் தனியார் துறை உயர்கல்வி நிறுவனங்கள் இரண்டிலும் அனைத்து கல்வி நிகழ்ச்சித் திட்ங்களிலும் செயன்முறைகளிலும் தர மற்றும் தரநிலைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சட்ட அதிகாரத்துடன் ஓர் சுயாதீனமான தர உறுதிப்பாட்டு நிறுவனத்தை ஸ்தாபித்தல்.

- தர உறுதிப்பாட்டுச் செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் செய்வதற்கு பல்கலைக்கழகங்களிலுள்ள நிரந்தர ஆளனியில் முழுநேர கல்விப் பதவிகளை உருவாக்குதல்.

- ஏனைய தாமதங்களை தவிர்ப்பதற்கும் துறைகளுக்கிடையில், பீடங்களுக்கிடையில், பல்கலைக் கழகங்களிற்கு இடையில் மற்றும் சர்வதேச கூட்டிணைந்த பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை இலகுவாக்குவதற்கும் அரச பல்கலைக்கழக முறைமைக்கான ஒத்தியங்க கூடிய நாட்காட்டி ஒன்றினை அறிமுகஞ் செய்தல்.

- முறையான 5 வருட வெளிவாரி மீளாய்வு சுழற்சியை உறுதிப்படுத்துவதற்கும் நிதியிடல் தீர்மானங்களை தெரியப்படுத்துவதற்குமான வெளிவாரி தர உறுதிப்பாட்டு விளைவுகளை பயன்படுத்துவதற்கும் நிதியிடல் பொறிமுறை ஒன்றினை நிறுவுதல்.

- உயர் தரப்படுத்தலின் உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் சர்வதேச பல்கலைக் கழகங்களுக்கிடையில் ஒன்றிணைந்த கூட்டாண்மைகளை ஸ்தாபித்தல் மற்றும் ஊக்குவித்தல்.

- சர்வதேச முகவர்களிடமிருந்து அங்கிகாரத்தினை நாடிச் செல்வதன் மூலமாகவும் வெளிநாட்டு முகவர்களுடன் தர உறுதிப்பாடு தொடர்பில் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தங்கள் ஊடாகவும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தை மேம்படுத்தல்.

- பல்கலைக்கழக தகவல் முறைமையை நவீனமயப்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தினதும் தர உறுதிப்பாட்டு மற்றும் அங்கீகரித்தல் நிறுவனங்களினதும் தேவைகளை வழங்குகின்ற முகாமைத்துவ தகவல் முறையை அபிவிருத்தி செய்வதற்கும் கொண்டு நடாத்துவதற்கும் அரச பல்கலைக்கழகங்களை ஊக்குவித்தல் மற்றும் ஆதரவளித்தல்.


அட்டவணைப் பட்டியல்கள்

அட்டவணை		பக்.இல
அட்டவணை 4.1	சாதாரண ஏற்பாட்டிற்காக புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்க் தொகை	13-15
அட்டவணை 4.2	2019/2020 கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கற்கை நெறிகள்	15
அட்டவணை 4.3(அ)	கட்புலனற்ற மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அனுமதி	16
அட்டவணை 4.3(ஆ)	இணைபாடவிதான செயற்பாடுகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான அனுமதி	16-18
அட்டவணை 5.1	நிலையான குழுக்கள் மற்றும் ஏனைய குழுக்களுக்காக 2020 இல் இடம்பெற்ற கூட்டங்கள்	19-20
அட்டவணை 5.2.1	2020 இல் அங்கீகரிக்கப்பட்ட பீடங்கள்	20
அட்டவணை 5.2.2	2020 இல் அங்கீகரிக்கப்பட்ட துறைகள்	20-21
அட்டவணை 5.2.3	2020 இல் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	21-22
அட்டவணை 5.2.4	2020 இல் அங்கீகரிக்கப்பட்ட விசேட பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	22
அட்டவணை 5.2.5	2020 இல் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்	23-24
அட்டவணை 5.3.2	2020 இல் அங்கீகரிக்கப்பட்ட துறைப் பெயர் மாற்றங்கள்	24
அட்டவணை 6.1	பல்கலைக்கழக அமைப்பில் நிதிகள் ஒதுக்கீடு/பயன்பாடு– 2019 &2020	33
அட்டவணை 6.3.1	பல்கலைக்கழக அமைப்பில் நிதிகள் ஒதுக்கீடு/பயன்பாடு	34
அட்டவணை 6.3.2	பாதீட்டு முன்மொழிவுகள் - 2020	34-35
அட்டவணை 6.3.3.1	ஆண்டுப் பகுதியில் பூரணப்படுத்தப்பட்ட முக்கிய உட்கட்டுமான செயற்றிட்டங்கள்	35-36
அட்டவணை 6.3.3.2	ஆண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட உட்கட்டுமான செயற்றிட்டங்கள்	36
அட்டவணை 6.3.3.3	வருடாந்த ஒதுக்கீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற பாதீட்டு முன்மொழிவால்ஒதுக்கப்பட்ட நிதிகள்	36
அட்டவணை 6.3.3.4	பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவனங்களுக்கான மகாபொல மற்றும் பேசறி	

	கொடுப்பனவுகள்-2020	37
அட்டவணை 7.1	2020 டிசம்பர் 31இல் உள்ளபடி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நடைமுறையிலுள்ள பதவியணியினர்	38
அட்டவணை 7.2	பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	39
அட்டவணை 8.1.1	2020 இல் பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவகங்கள் என்பவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட புதிய பதவியணியினர்	40
அட்டவணை 8.1.2	பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்	41
அட்டவணை 8.1.3	புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கம்பஹா விக்கிரமராச்சி உள்நாட்டு மருத்துவ பல்கலைக்கழகாக(GWUIM) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பதவிகள்	41-42
அட்டவணை 8.2	2020 இல் நிர்வாகத் தர நியமனங்கள்	42
அட்டவணை 8.3.1	2020 இல் ஏனைய ஆளணித் தரங்களிலுள்ள பதவிகளுக்கானநியமனங்கள்	42-43
அட்டவணை 8.3.2	2020 இல் ஏனைய ஊழியர் தரங்களிலுள்ள பதவிகளுக்கான பதவியுயர்வுகள்	43
அட்டவணை 9.1	பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழக அமைப்பிடம் கையளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்	44-45
அட்டவணை 17.1.1	2015 - 2019 வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பட்டபின்படிப்புக்கான மானியங்கள்	58
அட்டவணை 17.2	2020ல் ப.மா.ஆகுழுவினால் பரிந்துரைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகள்	61
அட்டவணை 18.2	ஓய்வூதிய நிதியின் நிதியியல் சிறப்பம்சங்கள்	62-63
அட்டவணை 19.1	நிதியியல் கூற்றுக்களின் சுருக்கம்	64
அட்டவணை 20.1	2020ல் வெளியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கைகள்	65-66
அட்டவணை 20.2	2020ல் வெளியிடப்பட்ட ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள்	66-67

உ.க – உள்ளக கணக்காய்வாளர்
பி.செ –பிரதிச் செயலாளர்
சி.உ.செ – சிரேஸ்ட உதவிச் செயலாளர்
சி.உ.கண – சிரேஸ்ட உதவிக் கணக்காளர்
சி.உ.உ.கண– சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்
உ.செ – உதவிச் செயலாளர்
உ.உ.கண – உதவி உள்ளக கணக்காய்வாளர்
ம.தொ.அ – மக்கள் தொடர்புகள் அலுவலர்
ம.வ- மனித வளங்கள்
உ.அ.பி – உட்கட்டுமான அபிவிருத்தி பிரிவு
த.உ.பே – தர உறுதிப்பாட்டு பேரவை
ச&.ஆ - சட்ட மற்றும் ஆவணப்படுத்தல்
வ&ப்பரா- வழங்கல்கள் மற்றும் பராமரிப்பு
ம.வ.அ.அ - மனித வளங்கள் அபிவிருத்தி அலகு
ப.சே.நி – பல்கலைக்கழக சேமலாப நிதியம்
ப.சே.மே.ச – பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை

ப.மா.ஆ குழுவின் அமைப்பு வரைபு


பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
நிலையான குழுக்கள்
தலைவர்
உப தலைவர்
செயலாளர்
மேலதிக செயலாளர்/ம.வ
மேலதிக செயலாளர்/கல்வி
மேலதிக செயலாளர் ச&.ஆ
பணிப்பாளர் உ.அ.பி
கணக்காளர்
பணிப்பாளர் /த.உ.பே
பணிப்பாளர் / பா.ஒ.ச.நி
ம.உ.க
உ.க
பணிப்பாளர் ம.வ.அ.அ
பி.செ
திட்டமிடல் பணிப்பாளர்
பி.செ
வேலை பொறியியலாளர்
திட்ட முகாமையாளர்
பி.செ வக்பரா
பள்ளிவிபரவியலாளர்
சி.உ.செ
சி.உ.கண
சி.உ.கண ஒப்புதல்
சி.உ.செ ஆளணி
சி.உ.செ
சி.உ.செ
சி.உ.செ

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முகாமைத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாவுள்ள ஆணைக்குழு 2020ம் ஆண்டில் பின்வரும் முகாமைத்துவ முறையை உள்ளடக்கியுள்ளது.

தலைவர்	**சிரேஸ்ட பேராசிரியர். சம்பத் அமரதுங்க** *பொருளியல் இ.கலைமாணி (விசேட) (ஸ்ரீ ஜெ.ப.க); பொருளியல் முதுகலைமாணி (கொழும்பு); கிராமிய அபிவிருத்தி பொருளியல் முதுவிஞ்ஞானமாணி. of Rural Dev. (சகா,ஜப்பான்); கலாநிதி (ககோசிமா, ஜப்பான்)*
உப தலைவர்	**சிரேஸ்ட பேராசிரியர் (திருமதி) ஜனிதா A.லியனகே** *கலாநிதி (யு.கே),விஞ்ஞான இளமாணி (Hons), CChem, CSi, FRSC, Flchemc*
ஆணைக்குழு உறுப்பினர்கள்	**சங்கைக்குரிய. பேராசிரியர் கே.மகிந்த சங்கரகித்த தேரர்** *இ.கலைமாணி (Hons) (இலங்கை)கலாநிதி, முதுகலைமாணி(டெல்லி)*
	சிரேஸ்ட பேராசிரியர்.A K W ஜெயவர்தன *விஞ்ஞான இளமாணி (Hons), (மொறட்டுவ), கட்டுமாண விஞ்ஞான முதுமாணி(லோக்புறொ, யு.கே), கட்டுமாண முகாமைத்துவம் (லோக்புறொ, யு.கே)CEng, FIE(SL), IntPE (SL), MSSE(SL), FIPM(SL), FNAS(SL), GSLID*
	சிரேஸ்ட பேராசிரியர். வசந்தி அரசரெட்ணம் *விஞ்ஞான இளமாணி,விஞ்ஞான முதுமாணி, (உயிர் இரசாயனவியல்)*
	சிரேஸ்ட பேராசிரியர். பிறேமகுமார டீ சில்வா *இ.கலைமாணி, முதுகலைமாணி(கொழும்பு), விஞ்ஞான முதுமாணி மற்றும் கலாநிதி (எடின்பிறோ, யு.கே)*
	திரு. பாலித்த குமாரசிங்கே (தலைவரின் ஆலோசகர்)
திறைசேரியின் பிரதிநிகள்	**திரு. R H W A குமாரஸ்ரீ** *இ.கலைமாணி (Hons) கொழும்பு ப.கலை, 1991, பட்ட பின்படிப்பு டிப்ளோமா (கைரோ), 1997, முதுகலைமாணி(Dev. Studies), நெதர்லாந்து, 2002*
செயலாளர்	**கலாநிதி. பிரியந்த பிறேமகுமார** *விஞ்ஞான இளமாணி(Hons), MBA (CMB), கலாநிதி (வுகான்*

2. பல்கலைக்கழக முகாமைத்துவம்

2.1 கொழும்பு பல்கலைக்கழகம்

வேந்தர்
அதி வணக்கத்துக்குரிய கலாநிதி. ஒஸ்வல்ட் கோமிஸ், கொழும்பு பேராயர்

உப வேந்தர்
சிரேஸ்ட பேராசிரியர். சந்திரிக்கா N விஜயரட்ண

பிரதி உப வேந்தர்
வெற்றிடம்

பதிவாளர்
திரு.கே.எ.எஸ். எட்வேட்

2.2 பேராதனைப் பல்கலைக்கழகம்

வேந்தர்
பேராசிரியர்.கே.எம்.டீ சில்வா

உப வேந்தர்
பேராசிரியர். யு.வி. திஸ்ஸநாயக்க

பிரதி உப வேந்தர்
பேராசிரியர்.எஸ்.எச்.பி. பராக்கிரம கருணாரெட்ண

பதிவாளர்
திரு.ஆர்.வி.எஸ்.பி. ராஜபக்ச (பதில்) 2020.10.25 வரை)
திரு.ஆர்.வி.எஸ்.பி. ராஜபக்ச (2020.10.26 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

2.3ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

வேந்தர்
பிரதமகுரு (மகாநாயக்க) ஸியாமொபாலி மஹா நிக்காய கோட்டை ஸ்ரீ ஸமஸ்ரீ தர்ம மஹா சங்க சபைமஹாநாயக்க, ஸ்ரீ மகா விகார வன்சலங்கார விமலகீர்த்தி ஸ்ரீ தம்மலோக சாகித்யசுறி. சங்கைக்குரிய. கலாநிதி. இட்டப்பன டம்மலங்கார தேரர்

உப வேந்தர்
சிரேஸ்ட.பேராசிரியர்.எஸ்.எஸ்.எல்.டபிள்யூ.லியனகே (பதில்) 2020.01.06 இலிருந்து 2020.09.08 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
சிரேஸ்ட.பேராசிரியர்.எஸ்.எஸ்.எல்.டபிள்யூ.லியனகே2020.09.09 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

பதிவாளர்
திரு.ஜி.பிறிற்ரோ (2020.11.28 இல் ஓய்வுபெற்றார்)
திரு.டபிள்யூ.எம்.ஆர்.டபிள்யூ.எ.வி. வெலிவிட்ட (2020.11.30 இலிருந்து

செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

2.4 களனி பல்கலைக்கழகம்

வேந்தர்
அஹ்கமகா சத்தம்மஜோதிக்க, றிபிட்டக வஹிஸ்வராச்சாரய, உபதியாய துரந்தர, மகோபத்தய, பண்டித, அதி சங்கைக்குரிய வெலமிட்டியாவ தர்மகீர்த்தி ஸ்ரீ குசால தம்ம தேரர்

உப வேந்தர்

பேரா.டி.எம். சீமசிங்க (2020.03.18 வரை)
பேரா.டி.எம். லக்ஸ்மன் செனவிரெத்தின (பதில்)(2020.03.19 இலிருந்து 2020.05.14 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
பேரா.பிரசாந்த விஜயசிங்க (பதில்)(2020.05.15 இலிருந்து 2020.08.27 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
பேரா.நிலாந்தி டீ சில்வா 2020.08.28 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

பிரதி உப வேந்தர்
பேரா. எல். செனவிரெத்தின (2020.05.14 வரை)

பதிவாளர்
திரு. டபிள்யூ.எம். கருணாரத்தின

2.5 மொறட்டுவ பல்கலைக்கழகம்

வேந்தர்
வித்தியஜோதி பேரா.கே.கே.வை.டபிள்யூ பெரேரா

உப வேந்தர்
பேரா. கே.கே.சி.கே. பெரேரா (2020.08.16 வரை)
பேரா. பி.கே.எஸ். மஹானாம (பதில்) 2020.08.17 இலிருந்து 2020.09.06 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
பேரா. என்.டி.குணவர்த்தன 2020.09.07 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

பிரதி உப வேந்தர்

பேரா.பி.கே.எஸ்.மஹானாம

பதிவாளர்

செல்வி.டபிள்யூ.எம்.டி.பி.மாதவெல்ல குலுஹல்ல
திருமதி.கே.சி.எஸ்.பெரேரா (பதில்) ஓய்வு விடுமுறையில் இருந்து
செல்வி.டபிள்யூ.எம்.டி.பி.மாதவெல்ல குலுஹல்ல மீண்டும் வரும்வரை 2020.09.03 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

2.6 யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

வேந்தர்
பேரா.எஸ். பத்மநாதன்

தகுதிவாய்ந்த அதிகாரி
பேரா.கந்தசுவாமி(2020.08.06வரைக்கும்)

உப வேந்தர்

பேரா.கந்தசுவாமி(பதில்) 2020.08.07 இலிருந்து 2020.08.27 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
பேரா.ஸ்ரீஸ்கந்தராஜா 2020.08.28 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

பிரதி உப வேந்தர்
வெற்றிட்டம்

பதிவாளர்
திரு.விஸ்வநாதன் காண்டீபன்

2.7 றுகுண பல்கலைக்கழகம்

வேந்தர்
சங்கைக்குரிய கலாநிதி. அக்குறேதிய நந்த நாயக்க தேர்ர

உப வேந்தர்
சிரேஸ்ட பேரா. ரி.எஸ். டி அமரசேன

பிரதி உப வேந்தர்
பேரா.இ.பி.எஸ்.சந்தன

பதிவாளர்
திருமதி.பி.எஸ். ஹலுகம

2.8 கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

வேந்தர்
கலாநிதி.வி.விவேகாநந்தராஜா

உப வேந்தர்
பேரா.பிளேவியன் சல்மஸ் றாகேல்

பிரதி உப வேந்தர்
வெற்றிடம்

பதிவாளர்
திரு.ஏ.பகிரதன்

2.9 இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

வேந்தர்
பேராசிரியர்.அச்சி எம். இஸ்ஹாக்

உப வேந்தர்
பேராசிரியர் எம்.எம்.எம் நஜிம்

பதிவாளர்
திரு. எச் அப்துல் சத்தார்

2.10 இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

வேந்தர்
பேராசிரியர்.ஏ.ஆர்.ஆரியரத்ன (2020.02.09 வரைக்கும்)
சங்கைக்குரிய ஈத்தலவெந்துனவ ஞானதிலக தேரர் (2020.02.10 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

உப வேந்தர்
கலாநிதி. பீ.ஏ கருணாரத்ன

பதிவாளர்
திரு.எம்.எம்.ஜி.பி அபயசிங்க

2.11 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

வேந்தர்
சங்கைக்குரிய பேராசிரியர் கம்புருகமவெ வஜிர தேரர்

உப வேந்தர்
பேராசிரியர்.எம் சுனில் சாந்த (2020.05.18 வரைக்கும்)
பேரா.டபிள்யூ.கே.யு.சி. ஞானபால (பதில்)2020.05.19 இலிருந்து 2020.11.02 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
பேரா.ஆர்.எம்.யு.எஸ்கே.ரத்நாயக்க 2020.11.03 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

பதிவாளர்
திரு.வி.டி கித்சிறி (2020.03.30 வரைக்கும்)
திரு.கமல் குணவர்த்தன (பதில்)2020.03.31 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்.

2.12 இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
வேந்தர்
தேசபந்து பேராசிரியர். கெ.ரி. டீ சில்வா

உப வேந்தர்
பேராசிரியர்.இ.எம்.பி ஏக்கநாயக்க (2020.05.21 வரைக்கும்)
கலாநிதி.சஞ்சீவ போவத்த (பதில்) 2020.05.22 இலிருந்து 2020.09.07 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
சிரேஸ்ட பேரா.ஜே.எம்.யு.கே ஜெயசிங்க (2020.09.08 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

பதிவாளர்
திரு.டபிள்யு.எ.டீ சித்ராநந்த

2.13 இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

வேந்தர்
திரிபீடகச்சாரிய தர்ம கீர்த்தி ஸ்ரீ சுமங்கல ரத்தினபால தம்மரஹித்த அதி சங்கைக்குரிய பேனகமுவ ஸ்ரீ தம்மாதின்ன நாயக்க தேரர

உப வேந்தர்
பேரா. ஜெ.எல் ரத்னசேகர (பதில்) 2020.01.28 இலிருந்து 2020.11.03 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
பேரா. ஜெ.எல் ரத்னசேகர2020.11.04 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

பதிவாளர்
திரு.எம்.எப்.ஹிபாத்துல் கரீம்
பதில் பதிவாளர் திரு. ஏ.ஜே.எம்.டீ.என்.பீ. நாவேல (2020.07.26 இலிருந்து திரு.எம்.எப்.ஹிபாத்துல் கரீம் பதவியேற்கும்வரை)

2.14 இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

வேந்தர்
பேராசிரியர்.கொல்வின் குணரத்ன (2020.03.08 வரை)
பேராசிரியர்.தம்மிக்க ஏ தான்றிகொட (2020.09.15இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

உப வேந்தர்
பேராசிரியர் எஸ்.எ ஆரியதுரை

பிரதி உப வேந்தர்
கலாநிதி.ஏ.பி.மடுறப்பெறும

பதிவாளர்
செல்வி.டபிள்யு.எல்.விஜயசேன
திரு.பி.கே.சேனவிரத்ன (பதில்) (2020.08.01 இலிருந்து 2020.10. 31 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

2.15 கட்புல ஆற்றுகைக் கலைப் பல்கலைக்கழகம்

வேந்தர்
வாழ்நாள் பேராசிரியர் சங்கீத் நிபுன் சனத் நந்தசிறி

தகுதிவாய்ந்த அதிகாரி
வாழ்நாள் பேராசிரியர் டபிள்யு.எம் அபயரத்ன பண்டார (2020.10.12 வரைக்கும்)

உப வேந்தர்
சிரேஸ்ட பேராசிரியர்.கலாநிதி. றொகான P மகாலியானாராய்ச்சி (2020.10.13 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

பதிவாளர்
திரு. பி.எம் தயாவன்ச

3. நிறுவகங்கள்

3.1 விவசாயப் பட்டப் பின் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர்.ஸி.எம்.பி.தெமடவெவ (08.11.2020 வரை)பேராசிரியர்.ஸி.எம்.பி.தெமடவெவ (பதில்) (09.11.2020 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

3.2 தொல் பொருளியல் பட்டப்பின் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்
சிரேஸ்ட பேராசிரியர். ஏ.எம். காமினி அதிகாரி

3.3 முகாமைத்தவப் பட்டப்பின் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரயர் அஜந்த தர்மசிறி

3.4 மருத்துவப் பட்டப்பின் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர்.எச். ஜனக டீ சில்வா (31.03.2020 வரை)
பேராசிரியர்.சேனக்க ராஜபக்ச (01.04.2020 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

3.5 பாளி மற்றும் பௌத்தக் கற்கைகள் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்

பணிப்பாளர்
சங்கைக்குரிய சிரேஸ்ட பேராசிரியர். மெதவாச்சிய தம்மஜோதி தேரர்

3.6 விஞ்ஞானப் பட்டப்பின் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர்.எச்.எம்.ரி.ஜி.எ பிட்டவல

3.7 ஆங்கிலப் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர். ஆனந்த ஜயவிக்ரம

3.8 மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டப்பின் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர்.ஜெ.எம். ஆனந்த ஜயவிக்ரம

3.9 சுதேச மருத்துவ நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர் பி.எ பரணகம

3.10 மனித வள மேம்பாட்டு நிறுவகம்

பணிப்பாளர்
காலஞ்சென்ற பேராசிரியர்.ஜெ.எ.எஸ்.கெ. ஜயகொடி (2020.07.27 வரை)
செல்வி.காமனி மாதோராய்ச்சி (பதில்) (2020.07.28 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

3.11 கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரி

பணிப்பாளர்
பேராசிரியர். கெ.பி ஹேவாகமகே

3.12 கம்பஹா விக்ரமாராய்ச்சி ஆயர்வேத நிறுவகம்

தகுதிவாய்ந்த அதிகாரி
சிரேஸ்ட பேராசிரியர்.ஜே.ஏ.லியனகே

3.13 நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் தேசிய நிறுவகம்

பணிப்பாளர்
திரு.பிரசன்ன ரணவீர (23.02.2020 வரை)
கலாநிதி.றுவான் கமகே (பதில்) (24.02.2020 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

3.14 மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம்

தகுதிவாய்ந்த அதிகாரி
கலாநிதி.நவரத்னகே சுனில் ஜயந்த நவரத்ன (2020.01.01 இலிருந்து 2020.06.30 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
பேராசிரியர்.எஸ்.எம்.ஏ. நாணயக்கார (2020.07.01 இலிருந்து 2020.09.30 வரை செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)
கலாநிதி.சி.எஸ். லியுவன்கமகே (2020.10.01 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

3.15 உயிர் இரசாயன, மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம்

பணிப்பாளர்
கலாநிதி. சிரோமா ஹந்துனெத்தி

3.16 மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களில் உயர் கல்விக்கான தேசிய நிலையம்

பணிப்பாளர்
பேராசிரியர் லால் மேர்வின் தர்மசிறி (2020.04.30 வரை)
சிரேஸ்ட பேராசிரியர் ஜே.ஏ.லியனகே (பதில்) (2020.05.01 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

3.17 சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர்(திருமதி) அம்மன்கிளி முருகதாஸ் (பதில்)

3.18 கொழும்புப் பல்கலைக்கழக விவசாயத் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள் நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர் எஸ்.சுதர்சன் (2020.06.08இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

3.19 சுதேச மருத்துவ பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்

பணிப்பாளர்
பேராசிரியர்.ஜெயந்த ஜெயவர்த்தன (2020.03.31 வரை)
பேராசிரியர்.வசந்த குணதுங்க (பதில்) (2020.04.01 இலிருந்து செல்லுபடியாகும்படி நியமிக்கப்பட்டார்)

4. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

2019/2020 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. அதனுடைய வழிகாட்டுதலை அடிப்படையாகக் கொண்டு,2019/2020 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2019 ஆவணி மாதம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளிடமிருந்து 2020 மார்ச் மாதத்தில் விண்ணப்பங்களைக் கோரியது. அதனடிப்படையில், ஒவ்வொரு இளமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்குமான சாதாரண உள்ளெடுப்பு இறுதிசெய்யப்பட்டு வெட்டுப் புள்ளிகள் 2020 ஒக்டோபரில் வெளியிடப்பட்டன. நாட்டில் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக வெட்டுப்புள்ளிகளின் வெளியிடுதல் தாமதமானது. விசேட ஏற்பாடுகளின் கீழ் மாணவர்கள் தெரிவு செயற்பாட்டில் இருப்பதுடன் 2021ல் இறுதி செய்யப்படும்.

4.1 2019/2020 கல்வியாண்டுக்கான மாணவர்களது பல்கலைக்கழக அனுமதிகள்–சாதாரண ஏற்பாடுகளின்கீழ் (2019 ஆகஸ்டில் இடம்பெற்றக.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக)

2019/2020கல்வியாண்டுக்கானபல்கலைக்கழகஅனுமதிக்கான மாணவர்களின் தெரிவுக்கானபின்வரும் அனுமதிகள் கொள்கையானதுபின்பற்றப்பட்டிருந்தது.

1. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2019இல்இடம்பெற்ற க.பொ.த(உ/த) பரீட்சையில் மாணவர்களால் பெறப்பட்ட சராசரி Z புள்ளிகள் மீதான நிலை ஒழுங்கின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கான மாணவர்களின் தெரிவு தீர்மானிக்கப்பட்டது

2. கலைப்பாட கற்கை நெறியைப் பொறுத்தவரை,*(அதாவது, கலை, கலை (SP), கலை (SAB), தொடர்பாடல் கற்கைகள், சமாதானம் மற்றும் முரண்பாடு தீர்த்தல், இஸ்லாமியக் கற்கைகள், அரபு மொழி, இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL) மற்றும் சமூகப் பணி)*கொடுக்கப்பட்ட மாவட்டமொன்றில் இருந்து அனுமதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையானது 1993/1994 அல்லது 2002/2003 கல்வியாண்டில் அந்த மாவட்டத்திலிலிருந்து அனுமதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையை விடக் குறைவானதாக இருக்கக் கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு எது அதிகமாக இருக்கின்றதோ அதற்கு தீவளாவிய திறமை அடிப்படையில் அனுமதியானது மேற்கொள்ளப்பட்டது.

3. மேலே 1.1.2 இல் குறிப்பிட்ட கற்கைநெறிகளைத் தவிர, எல்லாப் பாடநெறிகளுக்குமான அனுமதி இரட்டை விதிமுறையொன்றில் மேற்கொள்ளப்பட்டன அதாவது:

    - முழுத் தீவளாவிய திறமை
    - மாவட்ட அடிப்படையிலான திறமை

4. குறிப்பிட்டவோர் கற்கைநெறி மொத்தமாக கிடைக்கக் கூடிய இடங்களில் 40% வரையான இடங்கள் முழுத் தீவளாவிய திறமை அடிப்படையொன்றின் மீதானz புள்ளித் தரவரிசையின் அடிப்படையில் நிரப்பப்பட்டுள்ளன.

5. எஞ்சியுள்ள 60% இல், 55% வரையானது மாவட்ட ரீதியான திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறது. கொடுக்கப்பட்ட மாவட்டம் ஒன்றிற்கான

மாவட்டத் திறமையிலான அடிப்படையென்பது, முழுத் தீவளாவிய திறமையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கைக்கு(40% வரை) மேலதிகமாக எஞ்சியுள்ள 55% வரைக்கும் மேலதிக இடங்களை கிடைக்க ஆவன செய்யப்படுகின்றன என்பதாகும். அதனடிப்படையில், நாட்டின் மொத்த சனத்தொகையினை கருத்தில் கொண்டு மாவட்டத்தின் விகிதாசாரத்திற்கு அமைவாக ஒவ்வொரு மாவட்டத்தின் மொத்த சனத்தொகைக்குரிய விகிதாசாரத்தில் 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் 55%ஆன இடங்கள் ஒவ்வொரு கற்கை நெறிக்காகவும் ஒதுக்கப்படும்.

6. ஒவ்வொரு கற்கை நெறியிலும்கிடைக்கக் கூடிய இடங்களிலுள்ள 5%வரைக்குமான விசேட ஒதுக்கீடொன்று கல்விசார் சாதகமற்ற சூழ்நிலை நிலவும் கீழ் குறிப்பிடப்பட்ட 16 மாவட்டங்களுக்கு சனத்தொகை விகிதாசாரத்தில் அதாவது 16 மாவட்டங்களின் மொத்த சனத்தொகையில் அத்தகைய ஒவ்வொரு மாவட்டத்தின் சனத்தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப ஒதுக்கப்பட்டுள்ளது.

1. நுவரெலியா	9. மட்டக்களப்பு
2. கம்பாந்தோட்டை	10. அம்பாறை
3. யாழ்ப்பாணம்	11. புத்தளம்
4. கிளிநொச்சி	12. அநுராதபுரம்
5. மன்னார்	13. பொலனறுவை
6. முல்லைதீவு	14. பதுளை
7. வவுனியா	15. மொனராகலை
8. திருகோணமலை	16. இரத்தினபுரி

7. கலை அல்லாத ஏனைய கற்கைநெறிகளுக்கும் மாணவர்களை அனுமதிப்பதில் 1993/1994 அல்லது 2002/2003 கல்வியாண்டுப் பகுதியில் அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மாவட்ட கோட்டாவிற்கு குறைவாக காணப்படாது ஏதாவது மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள அந்த கற்கை நெறிக்கான கோட்டாவானது உயர்வாக உள்ளதென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

8. இரண்டு பாடத்திட்டங்களின் கீழ் 2019ஆம் ஆண்டு க.பொ.த(உ/த) பரீட்சை இடம்பெற்றமையினால் 2011ம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த(உ/த) பரீட்சையில் பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் தோற்றிய மாணவர்கள் தொடர்பில் SC(FR) விண்ணப்ப இல.29/2012 இல் உச்ச நீதிமன்றத்தினால் அறிவுறுத்தப்பட்டது போல 2019ம் ஆண்டிலும் பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் தோற்றிய மாணவர்களை தனித்தனியாக இரு பிரிவினராக மாணவர்களை கருதுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. எனவே 2019ஆம் ஆண்டு க.பொ.த(உ/த) பரீட்சையில் மாணவர்களால் பெறப்பட்ட Z புள்ளிகளின் அடிப்படையில் 2019/2020 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களிற்கு மாணவர்களை தெரிவு செய்தல் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதற்கான விதிமுறையை முன்மொழிவதற்கு நிபுணர்கள் குழுவொன்றினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்திருந்தது.
கூறப்பட்ட நிபுணர்கள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக

சட்டத்தின் 15(vii)ம் பிரிவுடன் இணங்கி அனுமதிக் குழுவுடனான ஆலோசனையுடனும் சட்டமா அதிபர் ஆலோசனையுடனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டது.

- 2019ம் ஆண்டில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் க.பொ.த(உ/த) பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களை ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட ரீதியான திறமை மற்றும் அனைத்து தீவளாவிய திறமை அடிப்படையிலும் ஒவ்வொரு பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்குரிய மாணவர் வீதமாது 2013-2017 வரையான ஐந்து வருட காலத்தின் போது முறையே ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட ரீதியான திறமை மற்றும் அனைத்து தீவளாவிய திறமை அடிப்படையிலும் குறிப்பிட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக தங்களுடைய முதலாவது முயற்சியில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்குரிய மாணவர்களின் ஒன்றுபட்ட சராசரி வீதமாக இருக்கும்.

- 2019ம் ஆண்டில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் க.பொ.த(உ/த) பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களை ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட ரீதியான திறமை மற்றும் அனைத்து தீவளாவிய திறமை அடிப்படையிலும் ஒவ்வொரு பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்குரிய மாணவர் வீதமாது 2013-2017 வரையான ஐந்து வருட காலத்தின் போது முறையே ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட ரீதியான திறமை மற்றும் அனைத்து தீவளாவிய திறமை அடிப்படையிலும் குறிப்பிட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக தங்களுடைய இரண்டாவது மற்றும் மூன்றாவது முயற்சிகளில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்குரிய மாணவர்களின் ஒன்றுபட்ட சராசரி வீதமாக இருக்கும

9. 2019ம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையின் Z புள்ளிகளின் அடிப்படையில் 2019/2020 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களிற்கு மாணவர்கள் தெரிவானது "2019/2020 கல்வியாண்டுக்காக "இலங்கை பல்கலைக்கழகங்களின் இளமாணி பட்ட கற்கைக்கான அனுமதி" எனும் கையேட்டுடன் விதிகள் மற்றும் ஒழுங்குகளுக்கு உட்பட்டு மேலேயுள்ள தீர்மானங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

2019/2020 கல்வியாண்டிற்காக உத்தேச அனுமதி 34,161 ஆகவும், மொத்தம் 181,144 விண்ணப்பதாரர்கள் 2019/2020 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

4.1.1 சாதாரன ஏற்பாட்டின் கீழ் அனுமதி

மொத்தம் 40,111 மாணவர்கள் பின்வருமாறு பல்கலைக்கழகங்களுக்கு சாதாரண ஏற்பாட்டின் கீழ் அனுமதிக்கப்பட்டனர்:

கல்வி ஆண்டு 2019/2020 தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை

	கற்கை நெறி	புதிய பாடத்திட்டம்	பழைய பாடத்திட்டம்
1.	மருத்துவம்	608	1216
2.	பல் அறுவைச் சிகிச்சை	41	77
3.	விலங்கு மருத்துவ விஞ்ஞானம்	46	81
4.	விவசாயம்	311	546
5.	உணவு விஞ்ஞானமும் போசாக்கும்	54	107
6.	உயிரியல் விஞ்ஞானம்	565	1102
7.	பிரயோக விஞ்ஞானம் (உயிரியல்)	149	286
8.	பொறியியல்	1083	1099
9.	பொறியியல் - (EM)	32	45
10.	பொறியியல்- (TM)	39	56
11.	கணிய அளவையியல்	62	88
12.	கணினி விஞ்ஞானம்	255	362
13.	பௌதீக விஞ்ஞானம்	1008	1318
14.	அளவையியல் விஞ்ஞானம்	61	101
15.	பிரயோக விஞ்ஞானம் (பௌதீக விஞ்.)	335	453
16.	முகாமைத்துவம்	3875	1395
17.	சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும்	49	36
18.	வணிகவியல்	574	295
19.	கலை	4553	2267
20.	கலை (SP)வெகுஜன ஊடகம்	63	45
21.	கலை (SAB)	175	128
22.	முகாமைத்துவக் கற்கைகள் (TV)- A	267	185
23.	கட்டடக்கலை	52	45
24.	வடிவமைப்பு	41	43
25.	சட்டம்	414	77
26.	தகவல் தொழில்நுட்பம்	84	164
27.	முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழிநுட்பம்	32	84
28.	முகாமைத்துவம் (பொது)சிறப்பு	73	38
29.	தொடர்பாடல் கற்கைகள்	112	85
30.	பட்டினமும் நாடு நட்டமிடலும்	53	32
31.	சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும்	22	11
32.	ஆயுர்வேத மருத்துவமும் அறுவைசிகிச்சையும்	122	257
33.	யுனானி மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	39	47
34.	நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி	56	20
35.	உணவு விஞ்ஞானமும் தொழிநுட்பமும்	61	172
36.	சித்த மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	128	116
37.	தாதியியல்	176	358
38.	தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும்	91	191
39.	விவசாய வள முகாமைத்துவமும் தொழில்நுட்பமும்	61	157
40.	கலை (SP) / அரங்கேற்றக் கலை	64	43
41.	சுகாதார விருத்தி	40	60
42.	மருந்தகவியல்	55	169

43.	மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	48	173
44.	ஊடுகதிர்ப் படமெடுப்பு	31	34
45.	இயன் மருத்துவம்	32	67
46.	சூழல் பேணலும் முகாமைத்துவமும்	41	65
47.	வசதிகள் முகாமைத்துவம்	38	40
48.	போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும்	36	52
49.	மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும்	33	44
50.	கைத்தொழில் புள்ளி விபரவியலும் கணிதவியல் நிதியும்	43	75
51.	புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும்	35	41
52.	கணக்கிடலும் முகாமைத்துவமும்	40	32
53.	மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானமும்	42	75
54.	இஸ்லாமியக் கற்கைகள்	234	41
55.	விஞ்ஞானமும் தொழிநுட்பமும்	43	62
56.	கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும்	31	67
57.	தொழில்முயற்சியும் முகாமைத்துவமும்	57	41
58.	விலங்கு விஞ்ஞானம்	37	68
59.	சங்கீதம்	380	120
60.	நடனம்	303	171
61.	சித்திரமும் வடிவமைப்பும்	49	10
62.	நாடகமும் அரங்கியலும்	116	55
63.	கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும்	62	29
64.	ஏற்றுமதி விவசாயம்	33	69
65.	தேயிலை தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும்	39	70
66.	கைத்தொழில் தகவல் தொழிநுட்பம்	51	46
67.	கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்	40	64
68.	வியாபார தகவல் முறைமைகள் (சிறப்பு)	47	30
69.	தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (SEUSL)	122	45
70.	கணக்கிடலும் தகவல் முறைமைகளும்	75	100
71.	உடற்றொழில் கல்வி	49	45
72.	விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்	115	60
73.	பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்	45	37
74.	அரபு மொழி	202	20
75.	கட்புலக் கலை	69	45
76.	விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும்	29	42
77.	உணவு உற்பத்தி மற்றும் தொழிநுட்ப முகாமைத்துவம்	44	92
78.	நீர் வளங்களும் தொழிநுட்பமும்	34	78
79.	பனை இனத்தாவர தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும்	31	70
2020ம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தில் ஒரேயொரு உள்ளக இடமாற்றம் மட்டுமே பதிவு செய்யப்பட்டது. ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கங்கள் 678,696 மற்றும் 893 என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் நீண்ட கால சேவைக்கான விருதினை பெறுவதற்கு தகுதியானவர்களாக ஐந்து ஊழியர்கள் காணப்பட்டதுடன் பல்கலைக்கழக அமைப்பில் அவர்களின் சிறந்த நீண்ட கால சேவையினைப் பாராட்டி நிதி மானியங்கள் வழங்கப்பட்டது.

7.3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்திலிருந்து ஊழியரின் வெளியேற்றம்

பல்கலைக்கழங்கள்/உயர் கல்வி நிறுவனங்களுக்கு இடையில் இடமாற்றம் பெற்றதன் காரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தை விட்டு விலகிய இரண்டு (02) ஊழியர்கள்2020[ல்] காணப்பட்டனர்.

மீளாய்வின் கீழ் ஆண்டுப்பகுதியில்இரண்டு (02) பதவி விலகல்கள், மூன்று (03) ஓய்வுநிலைகள் மற்றும் இரண்டு ஓய்வு காலத்திற்கு தயாராகும் விடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

7.4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் உள்ள ஆளணயினருக்கு வழங்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்கள்

பல்கலைக்கழங்கள்/உயர் கல்வி நிறுவனங்களுக்கு இடையில் இடமாற்றம் பெற்றதன் காரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தை விட்டு விலகிய இரண்டு (02) ஊழியர்கள்2020[ல்] காணப்பட்டனர்.மீளாய்வின் கீழ் ஆண்டுப்பகுதியில்இரண்டு (02) பதவி விலகல்கள், மூன்று (03) ஓய்வுநிலைகள் மற்றும் இரண்டு ஓய்வு காலத்திற்கு தயாராகும் விடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.இப் பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்த திட்டங்கள் என்பன திறன்கள் அபிவிருத்தி நிதிய லிமிட்டட்(SDLF), கட்டுமான உபகரணப் பயிற்சி நெறி நிலையம்(CETRAC),மிலோதா (Miloda)நிதிசார் கற்கைகளுக்கான நிறுவனம்,தொழில்துறை வழிகாடல் கூட்டுத்தாபனம்(PDC), தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவை,PRAGசேவைப் பயிற்சி மற்றும் ஆலோசனை நிறுவகம், மைக்குயர் றென்ஸ் மற்றும் ஜோன்ஸ் (McQuire Rens & Jones), நூலக மற்றும் தகவல் விஞ்ஞானங்களின் தேசிய நிறுவகம்(NILIS),இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பு(LEARN), இலங்கை ஆளணி முகாமைத்துவ நிறுவகம்(CIPM)மனிதவளபயிற்சி மற்றும் அபிவிருத்தி, விமானசேவை வரவேற்பாளர்கள் தொழிற் சங்கம் (APFA)ஆகிய அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களினாலேயே மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, மீளாய்வின் கீழ் ஆண்டுக் காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியிருந்த நிர்வாக, எழுத்தாளர், முதனிலை மட்ட ஊழியர்கள் பின்வருமாறு;

ஆளணியினர் தரம்	ஊழியர் எண்ணிக்கை
நிர்வாக	01
எழுத்தளர்	12
முதனிலை	08
மொத்தம்	15

அட்டவணை: 7.2 பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்ற ஊழியர் எண்ணிக்கை

7.5. சுகாதாரக் காப்புறுதித் திட்டம்

2020ம் ஆண்டில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனத்துடன் இணைந்து மேம்படுத்தப்பட்ட நன்மைகளுடன் கூடிய சுகாதாரக் காப்புறுதிப் பாதுகாப்பானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தில் உள்ள சகல நிரந்தர ஊழியர்களுக்காக வழங்கப்பட்டது.

7.6. பாராட்டு மற்றும் வரவேற்பு

மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழச் செயலகத்தில் இணைந்து கொண்ட ஊழியர்களை வரவேற்கின்ற அதே வேளை,2020ம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினை விட்டு விலகிச் சென்ற ஊழியர்களினால் ஆற்றப்பட்ட உயர்ந்த பட்ச சேவைகள் தொடர்பான பாராட்டினை தெரிவிப்பதற்கும் ஆணைக்குழுவானது விரும்புகின்றது.

8. மனித வளங்கள் திணைக்களத்தின் முன்னேற்றம்

பல்கலைக்கழக அமைப்புக்கு மனிதவள ஆதரவை வழங்குவதற்கான அதன் பொறுப்பினை உரியமுறையில் பேணுவதில் மனிதவளத் துறையானது 2020இல் நிலையான முன்னேற்றத்தை அடைந்தது. திணைக்களத்தின் ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திணைக்களத்தின் முக்கிய நடவடிக்கைகள் கீழே சுருக்கமாக கூறப்பட்டுள்ளன.

8.1. பதவியணியினர் மீளாய்வு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம், 2020ம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களுக்காக956 புதிய பதவியணியனர் நிலைகளுக்கான அனுமதியினை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் (DMS) வழங்கியது. இத்956 பதவிகளின் தகவல்களும் கீழே அட்டவணை 8.1.1இல் தரப்பட்டுள்ளன.

ஊழியர் வகைப்பாடு	பதவியணியினர் இடங்கள் எண்ணிக்கை
கல்வி சார்	678
பீடாதிபதி பதவி	02
தற்காலிக கல்விசார் ஆளணி	103
நிர்வாக மற்றும் ஏனையோர்	08
கல்விசார் உதவியாளர்	05
முகாமைத்துவ உதவியாளர் /தொழில்நுட்பமல்லாத	43
முகாமைத்துவ உதவியாளர் /தொழில்நுட்பம்	60
முதனிலை(திறனுடைய/அரைவாசித் தினுடைய/திறனற்ற)	57
மொத்தம்	**956**

அட்டவணை 8.1.1 2020 இல் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் என்பவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட புதிய பதவியணியினர்

உயர்கல்வி நிறுவகங்கள்	பதவியணியினர் எண்ணிக்கை
கொழும்பு பல்கலைக்கழகம்	60
ஸ்ரீ பாளி வளாகம்	03
பேராதனை பல்கலைக்கழகம்	26
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	74
களனிப் பல்கலைக்கழகம்	43
மொறட்டுவ பல்கலைக்கழகம்	125
யாழ்பாணப் பல்கலைக்கழகம்	114
வவுனியா வளாகம்	24
றுகுணைப் பல்கலைக்கழகம்	76
இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்	34
திருகோணமலை வளாகம்	17
இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்	42
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்	99
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்	34
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்	68
ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்	43
கட்புல மற்றும் அரங்கேற்ற கலை பல்கலைக்கழகம்	03
கம்பஹா விக்கிரமராய்ச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்	72
சுதேச மருத்துவ நிறுவகம்	06
கொழும்பு பல்கலைக்கழக கணனி கல்லூரி	08
கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவநிறுவகம்	06
தகவல் தொழில்நுட்பம், மொறட்டுவ பல்கலைக்கழகம்	46
சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்	05
மொத்தம்	**1228**

அட்டவணை 8.1.2 பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பதவியணியினர்

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கம்பஹா விக்கிரமராய்ச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்திற்கான புதிய பதவியணியினர் பதவிகள் பின்வருமாறு;

ஊழியர் வகைப்பாடு	பதவிகளின் எண்ணிக்கை
கல்வி சார்	65
பீடாதிபதி பதவி	04
தற்காலிக கல்விசார் ஆளணி	29
நிர்வாக மற்றும் ஏனையோர்	20
கல்விசார் உதவியாளர்	05
முகாமைத்துவ உதவியாளர்/தொழில்நுட்பமல்லாத	70

முகாமைத்துவ உதவியாளர் /தொழில்நுட்பம்	20
முதல்நிலை(திறனுடைய/அரைவாசித் தினுடைய/திறனற்ற)	59
மொத்தம்	**272**

அட்டவணை 8.1.3 புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்திற்காக அனுமதிக்கப்பட்ட புதிய பதவியணியினர் பதவிகள்

8.2. நிர்வாகத் தரங்களுக்கான நியமனங்கள் / பதவி உயர்வுகள

2009ம் ஆண்டின் 57ம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச் சட்டம்) மூலம் திருத்தப்பட்டவாறான 1978ம் ஆண்டின் பல்கலைக்கழக சட்ட இலக்கம் 16 இன் பிரிவு 71(2) இன் (ii)ம் (iii)ம் பந்தி மற்றும் பிரிவு 8(1)க்கு அமைவாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானதுபல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கான நிர்வாகத் தரநியமனங்கள்/பதவி உயர்வுகள் பொறுப்புக்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020ம் ஆண்டுக்காகமேற்கொள்ளப்பட்டநியமனங்கள் பின்வரும் அட்டவணை 8.2இல் காட்டப்பட்டுள்ளன.

நியமிக்கப்பட்ட ஊழியர் வகைப்பாடு	நியமனங்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட உதவிச் செயலாளர் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவி	04
சிரேஷ்ட உதவிச் செயலாளர் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவி(சட்ட மற்றும் ஆவணப்படுத்தல்)	01
சிரேஷ்ட உதவிச் செயலாளர் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவி (நூலக சேவை)	02
உதவிச் செயலாளர்/உதவிப் பதிவாளர் பதவி	01 **(உள்வாரி வகைப்பாடு)**
உதவிச் செயலாளர்/உதவிப் பதிவாளர் பதவி	08 **(வெளிவாரி வகைப்பாடு)**
உதவிச் செயலாளர்/உதவிப் பதிவாளர் பதவி (சட்ட மற்றும் ஆவணப்படுத்தல்)	01

அட்டவணை 8.2 2020 இல் நிர்வாகத் தர நியமனங்கள்

8.3. ஏனைய தரங்களில் உள்ள ஆளணியினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்/ பதவியுயர்வுகள்

1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்டம் இல 16 இன் 71(2)ம் பிரிவின் (iii)ம்பந்திக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டில் நிர்வாகத் தரமல்லாத வேறு தரங்களில் உள்ள பதவிகளுக்கு இருபத்தொரு (21) நியமனங்கள் மற்றும் பதினேழு(17) பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆவற்றின் தகவல்கள் அட்டவணை 8.3.1 மற்றும் 8.3.2 இல் தரப்பட்டுள்ளன.

நியமிக்கப்பட்ட பதவி	நியமனங்களின் எண்ணிக்கை
பட்டறை பொறியியலாளர் (சிவில்)தரம்III	05
மேற்பார்வையாளர் (தரைத் தோற்றம்) தரம்III	01
பணிகள் பொறியியலாளர் (சிவில்) தரம்III	07

பிரதம பாதுக்காப்பு அலுவலர்தரம் II	02
புள்ளிவிவர அலுவலர்தரம் II	01
பல்கலைக்கழக மருத்துவ அலுவலர்	01
பயிற்சியளித்தல் பொறியியலாளர் தரம்III	01
உதவிப் பணிப்பாளர்/ பிராந்திய கல்விச் சேவைகள்	03
மொத்தம்	**21**

அட்டவணை 8.3.1 2020 இல் ஏனைய ஆளணித் தரங்களிலுள்ள பதவிகளுக்கான நியமனங்கள்

பதவி உயர்த்தப்பட்ட பதவி	நியமனங்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட ஆளணி தொழில்நுட்ப உத்தியோகத்தர்	09
மேற்பார்வையாளர் (தரைத் தோற்றம்) தரம் II	03
ஒலி ஒளி தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் I	01
பிரதம தொழில்நுட்ப உத்தியோகத்தர்	04
மொத்தம்	**17**

அட்டவணை 8.3.2 2020 இல் ஏனைய ஆளணித் தரங்களில் பதவிகளுக்கான பதவி உயர்வுகள்

8.4. பல்கலைக்கழகங்களிற்கு இடையிலான மாற்றங்கள்-2020

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 78ம் பிரிவின் பிரகாரம் 2020ம் ஆண்டில்பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பின்வரும் வகையில் பல்கலைக்கழக அமைப்பிற்குள் 139 இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ❖ நிர்வாகத்துறை உத்தியோகத்தர்கள் - 19
- ❖ கல்விசாரா, நிர்வாகம் சாரா பதவி உத்தியோகத்தர்கள் - 120

8.5. சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2020ம் அண்டு ஜனவரி 01ம் திகதி முதல் 2020 டிசம்பர் 31ம் திகதி வரையிலான காலப் பகுதியில் பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவனங்களிடமிருந்து சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்காக மொத்தமாக 540 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

இவைகள் 2016.07.14ம் திகதிய திருத்தப்பட்டவர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இல 01/2016 இன் படி பெறப்பட்டதுடன், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உயர்கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

9. உட்கட்டமைப்பு அபிவிருத்தி

2020ம் ஆண்டில் மொத்த தொகைரூபா9545மில்லியனானது புதிய கட்டுமானம் மற்றும் தொடரும் செயற்றிட்டங்கள், புனரமைப்பு செயற்றிட்டங்கள், கொள்வனவுகள்,மனித மூலதன அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும்அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டதுடன் 2020ம் ஆண்டின் இறுதியில் மொத்தத் தொகைரூபா9545மில்லியனை திறைசேரியானது சிபாரிசு செய்து விடுவித்துள்ளது.

ஆண்டுக்காலப்பகுதியில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிடமிருந்து ஆணைக்குழுவால் 34 புதிய செயற்றிட்டங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 2020ம் ஆண்டில் கவனமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டின் பின்னர் *16 முன்மொழிவுகள்மட்டுமே ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்டன. 2020ம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக அனைத்து 16 முன்மொழிவுகளையும் வரி அமைச்சானது அனுப்பியிருந்தது. பௌதீக ரீதியாக 9 செயற்றிட்டங்கள் 2020ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆண்டிறுதியில் உள்ளவாறு ஒதுக்கப்பட்டுள்ள ரூ 30,865 மில்லியன் பெறுமதியில் பல்கலைக்கழக அமைப்பிற்கிடையில் வடிவமைத்தல் மற்றும் கட்டிட நிர்மாண செயன்முறையில் வெவ்வேறு மட்டங்களில் 91 கட்டிட நிர்மாணப் செயற்றிட்டங்கள் இடம்பெற்று வருகின்றன அத்துடன் மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில்ரூபா 9521 மில்லியன் பெறுமதியுடைய 21 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழக அமைப்பிடம் கையளிக்கப்பட்டன.தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	2017		2018		2019		2020	
	செயற்றிட்டங்களின் எண்ணக்கை	மொத்தப் பெறுமதி (ரூபா மில்ல)	செயற்றிட்டங்களின் எண்ணக்கை	மொத்தப் பெறுமதி (ரூபா மில்லி)	செயற்றிட்டங்களின் எண்ணக்கை	மொத்தப் பெறுமதி (ரூபா மில்லி)	செயற்றிட்டங்களின் எண்ணக்கை	மொத்தப் பெறுமதி (ரூபா மில்லி)
ப.மா.ஆவினால் பெறப்பட்ட செயற்றிட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	61	42,601.52	48	28,979.42	39	18,906.75	34	8,857.79
ப.மா.ஆவினால் அனுமதிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	*36	22,680.38	*26	24,719.24	19	6,331.26	16	7,630.97
தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	*34	21,997.38	*26	24,719.24	14	6,382.96	16	7,630.97
தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	*26	17,799.62	*14	14,213.46	11	2,845.80	1	182.45
அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை	*40	15,438.45	*19	22,846.03	21	14,544.20	-	-
நடப்பாண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை	#*50	32,353.50	#*11	7,117.00	16 குறிப்பு-1	3,581.70	9 குறிப்பு-1	6,794.90

தற்போது செயற்பாட்டிலுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை	#*122	49,972.00	#*90	47,783.00	179 **குறிப்பு-2**	28,323	91 **குறிப்பு-2**	30,865.0
பூர்த்தியடைந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை	#*59	12,454.00	#*98	30,248.00	17 **குறிப்பு-3**	5,723	21 **குறிப்பு-3**	6,521.0

** முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கியது.*
 # செயற்றிட்டத்தின் பௌதீக நிலைமை மாத்திரமே கருத்திற் கொள்ளப்பட்டது.

குறிப்பு -01 *பல்கலைக்கழகங்களிலிருந்து புதுப்பிக்கப்பட்டு 2020செப்டம்பர் படி எடுக்கப்பட்டு2020ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை*

குறிப்பு-02 *தக்கவைத்தல் போன்ற நிலுவைக் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய திட்டங்களாக எடுக்கப்பட்டு 2020ல் நடைபெற்றுவரும் திட்டங்களின் எண்ணிக்கை*

குறிப்பு-03 *பல்கலைக்கழகங்களில் இருந்து புதுப்பிக்கப்பட்டு செப்டம்பர் 2020 வரையிலான பதிவுகளின்படி பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்கள்.*

அட்டவணை 9.1 பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழக அமைப்பிடம் கையளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்

10. தர உறுதிப்பாட்டுப் பேரவையின் வகிபாகம் மற்றும் விவகாரங்கள் (QAC)

செயற்றிறன் மிக்க தர உறுதிப்பாட்டு முறைமையின் ஆதரவின் ஊடாக உயர் கல்வியில் சிறப்பான நிலைப்பாட்டினை அடைந்து கொள்ளும் நோக்குடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உறதிப்பாட்டுப் பேரவை (QAC) ஸ்தாபிக்கப்பட்டது.

2020ம் ஆண்டுப் பகுதியில் தர உறுதிப்பாட்டுபேரவையின் வகிபாகம் மற்றும்விவகாரங்கள் கீழே சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது;

கொவிட் 19 நோய்த் தொற்று பரவலின் காரணமாக 2020ம் ஆண்டானதுதர உறுதிப்பாட்டு பேரவைக்கு சவால் மிகுந்த ஒரு ஆண்டாக மாறியதுடன் தர உறுதிப்பாட்டுப் பேரவைத் தலைவர் புரட்டாதி 2020ல் மாற்றப்பட்டார். பின்னர் தர உறுதிப்பாட்டுப் பேரவைச் செயற்பாடுகள் தர உறுதிப்பாட்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையான குழுத் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களால் வழிகாட்டப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. அதன்படி அடைந்து கொள்ளப்பட்டவை பின்வருமாறு;

- 2020 ஆம் ஆண்டின் முக்கால் ஆண்டு பகுதியில் 14/15 தர உறுதிப்பாட்டுப் பேரவையானது, AHEAD செயற்றிட்டத்தின் இலக்கினையும் தாண்டி பெறுபேற்று புள்ளி அட்டையில் 75% க்கும் அதிகமான புள்ளியினை அடைந்திருந்தது.
- 2020 ஆம் ஆண்டிறுதியில் பெறுபேற்று புள்ளி அட்டையில் உள்ள 75% புள்ளியிலும் பார்க்க தர உறுதிப்பாட்டு பேரவைப் புள்ளியானது 93% ஐ அடைந்திருந்தது. அதாவது 2021 ஆம் ஆண்டுக்காக AHEAD செயற்றிட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கினை பூர்த்தி செய்தது. (75% இல் இருந்த தர உறுதிப்பாட்டுப் பேரவைப் புள்ளியானது 80% ஆக உயர்ந்தது)
- Q1 2020 ஆம் ஆண்டிறுதியில் தர உறுதிப்பாட்டுப் பேரவைத் தலைவரால் மொத்தமாக 12 பல்கலைக்கழகங்கள் பார்வையிடப்பட்டன. (2019ல் 08ம் 2020 இல் 04ம் பார்வையிடப்பட்டன)

2019 இல் மீதமாக இருந்த மூன்று பல்கலைக்கழகங்களின் நிறுவனம்சார் மீளாய்வுக்கான களப் பயணங்கள் 2020 இன் காலாண்டில் பூரணப்படுத்தப்பட்டன. 2020ம் ஆண்டு நிறுவனம்சார்

மீளாய்வுக்காக இரண்டு பல்கலைக்கழகங்களிடமிருந்து சுயமதிப்பீட்டு அறிக்கைகள் (SERs) பெற்றுக் கொள்ளப்பட்டன. கொவிட்-19 காரணமாக ஏனைய களப் பயணங்கள் யாவும் 2021ம் ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

- 32 நிகழ்ச்சி திட்ட மீளாய்வுகளுக்காக, மீளாய்வு அறிக்கைகளில் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கான செயல் திட்டங்கள் 2020 டிசம்பரில் பெற்றுக் கொள்ளப்பட்டன. 2019ல் ஆரம்பிக்கப்பட்ட 41 கற்கை நிகழ்ச்சித் திட்டங்களுக்குமான (மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞானம், பல் மருத்துவ விஞ்ஞானம், இணைந்த மருத்துவ விஞ்ஞானம், உணவு விஞ்ஞானம், விலங்கு விஞ்ஞானம், மற்றும் விவசாயம்) நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் 2020ல் பூரணப்படுத்தப்பட்டு மீளாய்வு அறிக்கைகளும் இறுதிப்படுத்தப்பட்டன. விஞ்ஞானங்கள், பொறியியல், கட்டிடக்கலை, மற்றும் Geomatics போன்றவற்றின் 59 நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளுக்காக சுய மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

- ***பட்டபின்படிப்பு பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் நிகழ்ச்சி திட்ட மீளாய்விற்கான கையேடு*** ஒன்றின் உருவாக்கம் AHEAD திட்டத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சி திட்ட மீளாய்விற்காக பயன்படுத்தப்படும்.

- நிறுவனம்சார் சுய மதிப்பீட்டு அறிக்கையினை எழுதுபவர்களுக்கும் நிகழ்ச்சி திட்ட மீளாய்வாளர்களுக்குமாக தனித்தனியாக இரண்டு செயலமர்வுகளை 2020ம் ஆண்டில் தர உறுதிப்பாட்டுப் பேரவை நடாத்தியது. நிகழ்ச்சி திட்ட மீளாய்வுகளுக்காக புதிய நிகழ்ச்சி திட்ட மீளாய்வாளர்களக்கான பயிற்சி நிகழ்ச்சி திட்டமொன்று zoom மூலமாக நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி திட்டத்தில் 112 கல்வியியலாளர்கள் பங்குபற்றியதுடன் 83 பேர் நிகழ்ச்சி திட்ட மீளாய்வாளர்களாக இருப்பதற்குரிய தகுதியை பெற்றிருந்தனர்.

2020ம் ஆண்டு காலப்பகுதியில் பாட நியமக் குறியீடு (SBM) அறிக்கைகளை அபிவிருத்தி செய்வதில் பாரிய முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டது. மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான துறையினருக்கும் வரலாறு, சிங்களம், புவியியல், வெகுசன தொடர்பாடல், மற்றும் தத்துவவியல் போன்ற பாடங்களுக்கான பரிந்துரைகளை பெற்றவர்களுக்குமாக 11ம் திகதி பங்குனி மாதம் 2020 இல் பாட நியமக் குறியீடு (SBM) பயிற்சிப் பட்டறையொன்று இடம்பெற்றது. இத்தகைய பரிந்துரைகள் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமக் குறியீட்டுக்குழுவினால் உறுதிசெய்யப்பட வேண்டியிருந்ததுடன் ஆங்கிலம் மற்றும் சமூகவியல் பாட நியமக் குறியீடுகள் (SBM) அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 94 இளமாணி பட்ட கற்கை முன்மொழிவுகள் மற்றும் 98 பட்ட பின்படிப்பு கற்கை முன்மொழிவுகள் உள்ளடங்கலாக மொத்தம் 233 முன்மொழிவுகள் (திருத்தப்பட்ட மற்றும் மீளத் திருத்தப்பட்டவை உள்ளடங்கலாக) தர உறுதிப்பாட்டுப் பேரவையினால் மதிப்பீடு செய்யப்பட்டன. மேலும் புதிய பீடங்களை ஆரம்பித்தல் தொடர்பாக் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 04 முன்மொழிவுகள் மற்றும் புதிய துறைகளை ஆரம்பித்தல் தொடர்பாக 29 முன்மொழிவுகளும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனவே தர உறுதிப்பாடு தொடர்பான நிலையான குழு புதிய வெளிவாரி பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தினை திருத்தியது. திருத்தப்பட்ட விண்ணப்பப் படிவமானது புதிய முழுநேர பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் அனுமதி மற்றும் பட்ட பின்படிப்பு தகமைகள் போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படுகின்ற படிவத்தை ஒத்ததாக காணப்படுவதுடன் SLQF 2015 கானதேவைப்பாடுகளுடன் முன்மொழிப்பட்ட தகமைகளுடன் இணங்கியுள்ளது என்பதை உறுதி செய்வதற்கு போதுமான தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளும்.

ஏனைய அம்சங்கள் தொடர்பாக 2020ல் தர உறுதிப்பாட்டுப் பேரவை மேற்கொண்ட விடயங்கள் பின்வருமாறு;

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட தகமைகள், இலங்கை பல்கலைக்கழகங்களாலும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட பட்டங்களின் SLQF மட்டங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து வருகின்ற கேள்விகள் தொடர்பாக தெளிவுபடுத்தலை வழங்குதல்;
- பல்கலைக்கழகங்களின் தர உறுதிப்பாட்டுச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுபாடு.
- கற்கை நாட்காட்டியின் ஒத்திசைவுக்கு உதவுதல் தொடர்பான செயற்பாடுகள்

11. தகவல் தொழில்நுட்ப உதவி

தகவல் தொமில்நுட்பப் பிரிவானது ஒதுக்கப்பட்ட பொறுப்புகளுக்கு ஏற்ப, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை எளிதாக்குவதற்கு ஆரோக்கியமானதும் தடையற்றதுமான கணினி அமைப்புகளை உறுதிசெய்து கொள்வதற்கு முகாமைத்துவ ஒத்துழைப்பை வழங்கியது. புதிய தகவல் தொடர்பாடல் அமைப்பு அபிவிருத்தி மற்றும் நிறுவுதல் (installation), தற்போதுள்ள அமைப்புகளை மேம்படுத்துதல், தேவைப்பாடுகள்/ விபரக்குறிப்புகளை உருவாக்குதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒலி ஒளிச் செயற்பாடுகளை முகாமை செய்தல், கணினி மற்றும் தகவல் தொடர்பாடல் அமைப்புகளின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்/உயர் கல்வி நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான தரவுச் செயலாக்க நடவடிக்கைகள் என்பன இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் அடங்கும்.

2020ம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம் பின்வருமாறு:

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (ICTA) மற்றும் அரச சர்புடைய, அரச சார்பற்ற அமைப்புகளான LEARN, SLT, LK Domain Registry போன்றவற்றுடன் ஒருங்கிணைவு
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் மேம்படுத்துவதற்கான அதிநவீன தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்.

1. மென்பொருள் அபிவிருத்திகள்

i. ஆளணி பிரிவுக்கான காப்புறுதி முகாமைத்துவ முறைமை

ப.மா.ஆ குழுவின் ஊழியரின் தகவல்களை பதிவு செய்கின்ற இந்த மென்பொருள் வசதிகளானது ஊழியர் தாம் பெற்றுக் கொண்ட காப்புறுதி மற்றும் தங்களது காப்புறுதி தொடர்பான ஏனைய விடயங்களையும் பார்வையிடுவதற்கு வழிவகுக்கின்றன.

ii. ஆளணி பிரிவுக்கான விடுமுறை முகாமைத்துவ முறைமை

இந்த மென்பொருளானது இணையம் ஊடாக ஊழியர்கள் தங்களுடைய விடுமுறைகளை விண்ணப்பிப்பதனை எளிதாக்குகின்றது. அத்தோடு குறித்த ஊழியர் தொடர்பில் அறிக்கையிடும் முகாமையாளர் விடுமுறை கோரலை பார்வையிடவும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் முடியும்.

iii. வாகன ஒதுக்கீட்டு முறைமை

இது இணையவழியில் வாகனக் கோரல் பத்திரத்தை அனுப்புதனை இலகுவாக்கும் ஓர் இணையவழி மென்பொருளாகும்.

iv. பதவி உயர்வுகளுக்கான இணையவழி விண்ணப்பங் கோரல் முறைமை

இம் முறைமையானது முகாமைத்துவ உதவியாளரின் பதவி உயர்வுகள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு முதல்நிலை தரங்கள் ஊழியர்களின் நியமனங்களின் விண்ணப்பக் கோரல் செயன்முறையை இலகுவாக்குகின்றது.

v. இணையவழி ஆரம்பகட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை கையாள்வதற்கான முறைமை

இந்த முறைமையானது பல்கலைக்கழக நிர்வாக மற்றும் நிதியியல் அலுவலர்களுக்கான ஆரம்பகட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான செயன்முறைக்களை இலகுவாக்குகின்றது, இங்கே அனைத்து நிர்வாக மற்றும் நிதியியல் அலுவலர்கள் தகவல்களின் தரவுத்தளமொன்றினை இந்த முறைமை பேணும்.

12. சட்ட விவகாரங்கள்

12.1. புதிய சட்டம்

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் கீழே காட்டப்பட்டவாறு 15 கட்டளைகளையும் 3 கட்டளைச் சட்டங்களையும் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

12.1.1. 2020ம் ஆண்டில் வெளியிடப்பட்ட கட்டளைகள்

i. இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலுள்ள மருத்துவ கல்வி அலகினை மருத்துவ கல்வித் துறையாக தரமுயர்த்துவதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜனவரி 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2160/40 இல் வெளியிடப்பட்டது.

ii. இலங்கை மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பதின்மூன்று புதிய துறைகளுடன் புதிய மருத்துவ பீடமொன்றினை அமைப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 பெப்ரவரி 19ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2163/22 இல் வெளியிடப்பட்டது.

iii. இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறையொன்றுடன் புதிய தொழில்நுட்பவியல் பீடமொன்றினை ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜனவரி 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2160/43 இல் வெளியிடப்பட்டது.

iv. இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தில் தகவல் முறைமைகள் துறையையும் பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் இரசாயன விஞ்ஞானங்கள் துறையையும் புதிதாக ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜனவரி 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2160/41 இல் வெளியிடப்பட்டது.

v. இலங்கை ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்தில் பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் பிரயோக பூகோள விஞ்ஞானங்கள் துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறையொன்றை ஸ்தாபிப்பதற்கான

பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜனவரி 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2160/45 இல் வெளியிடப்பட்டது.

vi. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் கலாச்சார பீடத்தில் ஆங்கில மொழிக் கற்பித்தல் அலகினை ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையாக தரமுயர்த்துவதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜனவரி 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2160/39 இல் வெளியிடப்பட்டது.

vii. இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மூலப்பபொருட்கள் மற்றும் இயந்திரவியல் தொழில்நுட்பத் துறை மற்றும் சிவில் மற்றும் சூழல் தொழில்நுட்பத் துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறை இரண்டினை ஸ்தாபிப்பதன் முகமாக தொழில்நுட்ப பீடத்தில் ஏற்கனவேயுள்ள பொறியியல் தொழில்நுட்பத் துறையினை தனித்தனியாக ஆக்குவதற்காக பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜனவரி 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2160/44 இல் வெளியிடப்பட்டது. மேலும் இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப பீடத்தில் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞான துறை என்ற பெயரில் புதியதொரு துறையும் ஸ்தாபிக்கப்பட்டது.

viii. இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் மற்றும் நிதி பீடத்தில் விருந்தோம்பல் மற்றும் பொழுதுபோக்கு முகாமைத்துவ துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறையொன்றை ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜனவரி 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2160/42 இல் வெளியிடப்பட்டது.

ix. இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் மொழிபெயர்ப்பு கற்கைகள் துறையும் விஞ்ஞான பீடத்தில் கணனி விஞ்ஞான துறையும் என்ற பெயரில் புதிய இரண்டு கற்கைத் துறைகளை ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 பெப்ரவரி 19ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2163/21 இல் வெளியிடப்பட்டது.

x. இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மானிடவியல் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் பீடத்தில் மொழிகள், கலாச்சார கற்கைகள் மற்றும் அரங்கேற்ற கலைத் துறை மற்றும் சங்கீதம் மற்றும் உருவாக்க தொழில்நுட்ப துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறை இரண்டினை ஸ்தாபிப்பதன் முகமாக ஏற்கனவேயுள்ள மொழிகள், கலாச்சார கற்கைகள் துறையினை தனித்தனியாக பிரிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 பெப்ரவரி 27ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2164/53 இல் வெளியிடப்பட்டது.

xi. இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் சூழல் மற்றும் கைத்தொழில் விஞ்ஞானங்கள் துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறையொன்றினை ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜூலை 03ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2182/40 இல் வெளியிடப்பட்டது.

xii. இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் மருத்துவ தொழில்நுட்பத் துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறையொன்றை

ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜூலை 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2186/28 இல் வெளியிடப்பட்டது.

xiii. இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவ விஞ்ஞான பீடத்தில் நோய்யெதிர்ப்பியல் மற்றும் மூலக்கூற்று மருத்துவ துறையும் மானிடவியல் மற்றும் என்ற பெயரில் புதிய கற்கைத் துறைகள் இரண்டினை ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 ஜூலை 30ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2186/27 இல் வெளியிடப்பட்டது.

xiv. இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்தில் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறையொன்றினை ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 செப்ரெம்பர் 11ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2192/63 இல் வெளியிடப்பட்டது.

xv. இலங்கை றுகுணைப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் மற்றும் நிதி பீடத்தில் வணிக முகாமைத்துவ துறை என்ற பெயரில் புதிய கற்கைத் துறையொன்றினை ஸ்தாபிப்பதற்கான பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 27(1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையானது 2020 செப்ரெம்பர் 11ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2192/64 இல் வெளியிடப்பட்டது.

12.1.2. 2020 இல் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டங்கள்

i. 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 18வது பிரிவின் கீழ் இலங்கை திறந்த பல்கலைக்கழக 2020 இன் 01ம் இலக்க கட்டளைச்சட்டமானது(திருத்தம்) 2020 ஜனவரி 07ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2157/9 இல் வெளியிடப்பட்டது.

ii. 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 18வது பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் பட்டப்பின் படிப்பு நிறுவன 2020 இன் 02ம் இலக்க கட்டளைச்சட்டமானது(திருத்தம்) 2020 பெப்ரவரி 13ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2162/32 இல் வெளியிடப்பட்டது.

iii. 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 140வது பிரிவை சேர்த்து வாசிக்க தக்க 18ம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மனித வள மேம்பாட்டு நிறுவன 2020 இன் 01ம் இலக்க கட்டளைச்சட்டமானது 2020 நவம்பர் 11ம் திகதிய அரச அதிவிசேட வர்த்தமானி இல. 2201/09 இல் வெளியிடப்பட்டது.

12.2. நீதிமன்ற வழக்குகள்

மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக சட்ட நீதிமன்றங்கள் மற்றும் நியாயாதிக்க சபைகள் முன்பாக பதிவுசெய்யப்பட்ட பின்வரும் வழக்குகளை ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு கையாண்டது.

உச்ச நீதிமன்றம்	-	31வழக்குகள்
மேன்முறையீட்டு நீதிமன்றம்	-	27 வழக்குகள்
பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை	-	23வழக்குகள்

மாவட்ட நீதிமன்றம்	-	06 வழக்குகள்
தொழிலாளர் நியாயாதிக்க சபை	-	02 வழக்குகள்

12.3. இதர செயற்பாடுகளில் பங்களிப்பு

12.3.1. பல்கலைக்ககழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குள் செயற்பாடுகள்

i. நகர பல்கலைக்கழகங்களை ஸ்தாபித்தல் தொடர்பில் சாத்தியப்பாடுடைய கற்கைகளை நடாத்துவதற்கு ஆரம்பகட்ட பணிகளுக்கான உதவி வழங்கப்பட்டது.

ii. கல்வி விடுமுறையில் செல்வதற்கு முன்னதாக பல்கலைக்கழக அமைப்பில் ஆசிரியர்களால்/அலுவலர்களால்/ஏனைய ஊழியர்களால் கையெழுத்திடப்பட வேண்டிய முறிகள் மற்றும் உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய 920ம் இலக்க ஆணைக்குழச் சுற்றறிக்கையை மீள்பார்வையிடுவதற்கு நியமிக்கப்பட்ட குழுவை தலைமை தாங்குதல்.

iii. ஏற்கனவேயுள்ள பட்டப் பின்படிப்பு நிறுவனங்களின் முகாமைத்துவச் சபையின் (BoM) தொகுப்பை மறுசீரமைக்கின்ற திருத்தங்கள் வரையப்பட்டது.

12.3.2. பல்கலைக்ககழக மானியங்கள் ஆணைக்குழுவின் வெளியகச் செயற்பாடுகள்

i. தாதியியல் மற்றும் ஆசிரியர் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பது தொடர்பாக சட்டவாக்த்தை வரைவதற்கு உதவி வழங்குதல்

13. பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபை (USAB)

பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபையானது 2020.01.01 முதல் 2020.12.31 வரையிலான காலகட்டத்தில் இருபத்திரெண்டு (22) அமர்வுகளைக் கொண்டிருந்தது. இருபத்திநான்கு (24) மேன்முறையீடுகள் 2020ம் ஆண்டில் பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபையில் பதிவு செய்யப்பட்டது. இரண்டு (02) மேன்முறையீடுகள் தொடர்பாக ஆரம்பநிலை உத்தரவுகள் வழங்கப்பட்டு அவ் இரண்டு மேன்முறையீடுகளும் (02) தள்ளுபடி செய்யப்பட்டன, பதினாறு (16) மேன்முறையீடுகள் தொடர்பாக உத்தரவுகள் வழங்கப்பட்டு அதில் பதினொரு (11) மேன்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன, மூன்று (03) அனுமதிக்கப்பட்டன, ஒன்று (01) தள்ளுபடி செய்யப்படவோ அனுமதிக்கப்படவோ இல்லை, ஒரு (01) மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது.இடைக்கால உத்தரவுகள் எதுவும் வெளியிடப்படவில்லை. 2020ம் ஆண்டின் இறுதியில் பதின்மூன்று (13) உத்தரவுகள் எழுதப்பட்டுக் கொண்டிருந்ததுடன் இரண்டு (02) மேன்முறையீடுகளின் உத்தரவுகள் தீர்மானங்கள் காரணமாக நிறுத்தப்பட்டன. இரண்டு (02) உத்தரவு வழங்கப்பட்ட மேன்முறையீடுகள் இன்னும் நிலுவையில் உள்ளதுடன் இரண்டு (02)மேன்முறையீடுகள் செய்யப்பட்டன. மொத்தமாக முப்பத்திநான்கு (34) மேன்முறையீடுகள் 2020ம் ஆண்டின் இறுதியில் நிலுவையில் இருந்தன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு (02) வழக்குகள் மேன்முறையீடு செய்யப்பட்டதுடன் பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபையால் வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு எதிராக வழக்குகளில் ஒன்று உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

14. மத்திய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் விவகாரங்கள்

மத்திய உள்ளகக் கணக்காய்வு பிரிவானது,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் தாபனக் கோவையின் 1வது அத்தியாயத்தின் 3வது பந்தியில் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவின் பரதான நோக்கமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் ஏனைய அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களது உள்ளக கணக்காய்வு பணிகள் மற்றும் விசாரணைகளை நடாத்துவதே ஆகும்.

14.1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்

கணக்காய்வுக் குழுவானது வருடாந்த கணக்காய்வு திட்ட மீளாய்வு தொடர்பாக முகாமைத்துவ குழு அல்லது ஆணைக்குழுவுக்கு பரிந்துரைகளையும் பல்கலைக்கழக அமைப்பிற்கு மத்தியில் பரப்பப்பட வேண்டியுள்ள கொள்கைத் தீர்மானங்களையும் மேற்கொள்கின்றன, அத்துடன் 2020ம் ஆண்டுக் காலப் பகுதியில் ஐந்து (05) ஆணைக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் என்பன விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

14.2. முற்கூட்டிய கணக்காய்வு

ஊழியர்களுக்கு விடுவித்த கொடுப்பனவுகளின் துல்லியத்தை உறுதி செய்வதற்காக பின்வரும் பகுதிகளில் முற்கூட்டிய கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

- சேமலாப நிதியத்தின் விடுவிப்பு
- பணிக்கொடைக் கொடுப்பனவு
- ஓய்வூதியத்தின் விடுவிப்பு

15. வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள் / அபிவிருத்தி நடவடிக்கைகள் / சிறப்புப் பணிகள்

15.1. வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள்

2020ம் ஆண்டில்,பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் தகவல் தொடரபாடல் முகாமைத்துவ முறைமைகள் பிரிவானது பின்வரும் மூன்று முக்கியமான வெளியீடுகள் மற்றும் அறிக்கைகளுடன் அமைப்புக்கு நிர்வாக ஒத்துழைப்பை வழங்கியது.

1) "2020 ஜுலை மாதத்தில் வெளியிடப்பட்ட "இலங்கை பல்கலைக்கழக புள்ளிவிவரங்கள் 2019" எனும் தொடரின் பதினெட்டாவது இதழின் வெளியீடு.

2) 2019ம் நிதியாண்டிற்கான பல்கலைக்கழகங்களின் அலகு மீண்டெழும் செலவு பகுப்பாய்வு செய்யப்பட்டு,"பல்கலைக்கழகங்களில் கற்கைத் திட்டங்களின் இளமாணிப் பட்டதாரி ஒவ்வொருவருக்குமான அலகு மீண்டெழும் செலவுப் பகுப்பாய்வு- 2019" ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது

3) வெப்போமெற்றிக்ஸ் (webometrics) மற்றும் QS தரப்படுத்தலில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் புதுப்பிக்கப்பட்ட

தரப்படுத்தல்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டன

4) பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் விடுதிகள், புலமைப்பரிசில்கள், பதிவுக் கட்டணம் மற்றும் சிற்றுண்டி வசதிகளின் விபரங்கள் தொடர்பான அறிக்கை தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது

15.2. சிறப்புப் பணிகள்

பின்வரும் சிறப்பு பணிகள் 2020ஆம் ஆண்டில் செய்யப்பட்டன.

1) 2019ம் ஆண்டிற்கான தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கணக்கெடுப்பு (R&D) அறிக்கைக்காக பல்கலைக்கழகங்களில் இருந்து ஒன்றுதிரட்டப்பட்ட தரவு பூர்த்தி செய்யப்பட்டது

2) உயர் கல்வி நிறுவனங்களில் (2019 டிசெம்பர் 31ம் திகதியிலுள்ளவாறு) முறி உடன்படிக்கையை மீறியமையுடன் தொடர்புடைய ஆளணியினரிடம் இருந்து செலுத்தப்பட வேண்டியுள்ள தொகையை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைச் செயன்முறைகள் ஒன்றுதிரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.

3) கொவிட் 19 தொற்றுக் காலப்பகுதியில் இணையவழிக் கற்பித்தல் மற்றும் கற்றலை ஆய்வு செய்வதற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட கணக்கெடுப்பின் பெறுபேறுகள் அறிக்கையாக சுருக்கப்பட்டன.

4) 2012/2013ம் ஆண்டுக்கான உள்ளெடுப்பின் இறுதி எம்.பி.பி.எஸ் (பிரதான) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு எம்.பி.பி.எஸ் பட்டதாரிகளின் பொதுவான திறமை ஒழுங்குப் பட்டியல் தொகுக்கப்பட்டு வேலைவாய்ப்பு பயிற்சியின் நோக்கத்திற்காக சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5) 2011/2012ம் ஆண்டுக்கான இறுதி எம்.பி.பி.எஸ் (மீள் பரீட்சார்த்திகள்) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு எம்.பி.பி.எஸ் பட்டதாரிகளின் பொதுவான திறமை ஒழுங்குப் பட்டியல் தொகுக்கப்பட்டு வேலைவாய்ப்பு பயிற்சியின் (internship) நோக்கத்திற்காக சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6) 2009/2010ம் மற்றும் 2010/2011ம் உள்ளெடுப்பின் ஆண்டுகளுக்கு பொருத்தமான பரீட்சைகளுக்கான ஆயுர்வேத பட்டதாரிகளின் திறமை ஒழுங்குப் பட்டியல் தொகுக்கப்பட்டு வேலைவாய்ப்பு பயிற்சியின் நோக்கத்திற்காக ஆயுர்வேத திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளவை பின்வருமாறு:

- 2016 செப்ரெம்பர் கம்பஹா விக்கிரமராய்ச்சி ஆயுர்வேத நிறுவகத்திற்கான பரீட்சை மற்றும் 2016 ஜனவரி உள்நாட்டு மருத்துவ நிறுவகத்திற்கான பரீட்சை: 2009/2010ம் ஆண்டுக்கு பொருத்தமான ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை இளமாணிக்கான பிரதான திறமை பட்டியல்

- 2017 ஜனவரிபரீட்சை கம்பஹா விக்கிரமராய்ச்சி ஆயுர்வேத நிறுவகத்திற்கான மற்றும் 2016 ஜூலை உள்நாட்டு மருத்துவ நிறுவகத்திற்கான பரீட்சை: மீள் பரீட்சார்த்திகள் பட்டியல் 01

- 2017 மேபரீட்சை கம்பஹா விக்கிரமராய்ச்சி ஆயுர்வேத நிறுவகத்திற்கான மற்றும் 2017 மார்ச் உள்நாட்டு மருத்துவ நிறுவகத்திற்கான முதலாவது விசேட பின் சேர்க்கப்பட்ட பட்டியல்: மீள் பரீட்சார்த்திகள் பட்டியல் 02

- 2017 ஒக்டோபர்பரீட்சை உள்நாட்டு மருத்துவ நிறுவகத்திற்கான இரண்டாவது விசேட பின் சேர்க்கப்பட்ட பட்டியல்: மீள் பரீட்சார்த்திகள் பட்டியல் 03

- 2018 ஜூலை பரீட்சை உள்நாட்டு மருத்துவ நிறுவகத்திற்கான மூன்றாவது விசேட பின் சேர்க்கப்பட்ட பட்டியல்: மீள் பரீட்சார்த்திகள் பட்டியல் 04

- 2010/2011ம் ஆண்டுக்கான உள்ளெடுப்புக்கு பொருத்தமான ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை இளமாணிக்கான பிரதான திறமை பட்டியல் தர புள்ளி சராசரியை (GPA) பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது.

- 2010/2011ம் ஆண்டுக்கான உள்ளெடுப்புக்கு பொருத்தமான பரீட்சைக்கான சித்த மருத்தவ பட்டதாரிகளின் திறமை ஒழுங்கு பட்டியல் தொகுக்கப்பட்டு வேலைவாய்ப்பு பயிற்சியின் (internship) நோக்கத்திற்காக ஆயுர்வேத திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

16. பால் ஒப்பரவு மற்றும் சமத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள் /உயர் கல்வி நிறுவனங்கள் அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் உகந்த, பாலினசமத்துவத்துடன் கூடிய வேலை மற்றும் கற்றல் சூழலை உறுதி செய்வதற்கான நிறுவன திறனைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதற்கும், அவர்களின் சிறந்த நடைமுறைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படுவதற்கும், முக்கியமாக பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவது பல்கலைக்கழகங்களில் பாலின உணர்திறன் கொண்ட பல்கலைக்கழக கலாச்சாரங்கள் மற்றும் பல்கலைக்கழக சூழல்களை நிறுவுவதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் இருவரும் ஒடுக்குமுறை மற்றும் பாகுபாடு இல்லாமல் தங்கள் பணியைத் தொடர அனுமதிக்கின்றனர். இந்த நோக்கத்திற்கு ஏற்ப, 2020 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

16.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின்மையப்படுத்தப்பட்ட குறை நிவர்த்தி பொறிமுறை

மனக்குறைகளை தீர்க்கும் பொறிமுறைகளின் கீழ்பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் ஸ்தாபிக்கப்பட்ட பின்வரும் வழிகள் மூலமாக புதிய மாணவர்கள் அல்லது அவர்களது பெற்றோர் மற்றும் பல்கலைக்கழக உறுப்பின்களிடமிருந்து 2020 ஆம் ஆண்டில் பகிடிவதை மற்றும் பாலியலும் பால்நிலை சார்ந்த வன்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றன.

- பகிடிவதை முறைப்பாட்டு நுழைவாயில் www.ugc.ac.lk/rag/அல்லது https://www.eugc.ac.lk/rag/
- இணையவழி பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்செயல் நுழைவாயில் www.ugc.ac.lk/sgbv/
- அவசர எண் 0112123700
- மின்னஞ்சல் raggінghelp@ugc.ac.lkமற்றும் helpme@ugc.ac.lk
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு / தலைவருக்கு அழைப்பை ஏற்படுத்தல், நபர் அல்லது எழுத்து மூலத்தில் சமர்ப்பிப்புகள், மின்னஞ்சல் அனுப்புதல்

அத்தகைய அனைத்து முறைப்பாடுகளும் பல்கலைக்கழக வாரியாக பிரிக்கப்பட்டு அந்தந்த பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கு/ வளாகங்களின் தலைவர்களுக்கு/ நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்படும். அதேநேரம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அத்தகைய அனைத்து முறைப்பாடுகளுக்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக அறிக்கைகளை அனுப்புவதற்கும் அவர்கள் வேண்டப்படுகின்றனர். பகிடிவதை மற்றும் பாலியல் தொந்தரவு முறைப்பாடுகளை தெரிவிக்கின்ற செயன்முறை வேளையில் பல்கலைக்கழகங்களின் உப வேந்தர்களால் கோரப்படுகின்றபோது தேவைப்படும் அறிவுரையும் ஒத்துழைப்பும் விரிவாக்கியுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்பரவுக்கான நிலையதில் இடப்பட்டுள்ள பகிடிவதை மற்றும் பாலியலும் பால்நிலை சார்ந்த வன்செயல்கள் முறைப்பாடுகள் தொடர்பான தரவுத்தளத்தில் பல்கலைக்கழகங்களால் தொகுக்கப்பட்டுள்ள அனைத்துமுறைப்பாடுகளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளன. இது தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் வருகின்றது.

16.2. இலங்கை அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில்(உ.க.நி) துஸ்பிரயோக நடத்தை தொடர்பான பகிடிவதையை தடுப்பதற்கு பகிடிவதையால் பாதிக்கப்பட்டவர்களை தேற்றுவதற்காகவும் முறையானதொரு பொறிமுறையை வழங்குவதற்காகவும் குழு நியமிக்கப்பட்டது

முன்னாள் கல்வி அமைச்சர் கௌவரவ கலாநிதி. பந்துல குணவர்த்தன அவர்களால் வழங்கப்பட்ட அறவுறுத்தல்களுக்கமைவாக 2014/2015 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார எல்லையின் கீழுள்ள அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பகிடிவதை காரணமாக தங்களுடைய கல்வியை இழந்துள்ள மாணவர்களுக்கு பொருத்தமான நிவாரணியை வழங்குவதிலுள்ள பிரச்சினைகளை குறிப்பிட்டு கூறுவதற்குபல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பின்வரும் உறுப்பினர்களுடன் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

- நீதவான் கலாநிதி. சலீம் மர்சூப் PC –தலைவர்
- சிரேஸ்ட பேராசிரியர் ஜனித்தா A லியனகே- உறுப்பினர் மற்றும் செயலாளர்
- சங்கைக்குரிய பேராசிரியர் மகம்மன பன்னன்னாந்த தேரர் - உறுப்பினர்
- வண.கலாநிதி. பெனற் சாந்த பெர்னான்டோ - உறுப்பினர்
- சிரேஸ்ட பேராசிரியர் நாரத வர்ணசூரிய- உறுப்பினர்
- கலாநிதி. சந்திர எம்புல்தெனிய - உறுப்பினர்
- திரு.பிரசாந்த லால் டி அல்விஸ் PC - உறுப்பினர்

கல்வி நிறுவனமொன்றில் மீண்டும் அனுமதிக்கப்படும் போது பாதிக்கப்பட்ட மாணவர்கள் அதே விதியால் பாதிக்கப்படாது இருப்பதனை உறுதி செய்வதற்கு பகிடிவதையை பாதுகாப்பதற்கு முறையானதொரு பொறிமுறையை முன்மொழிவதற்கும் இக் குழுவானது கேட்டுக்கொள்ளப்பட்டது.

88 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன் சத்தியப்பிரமாணம் ஒன்றின் மூலமாக தேவைப்படும் விண்ணப்பத்தை சமாப்பிக்காமை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார எல்லையின் கீழல்லாத கல்வியாண்டு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுடன் இணங்காமை காரணமாக 35 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டன.

குழு அறிக்கையானது 2020 ஆகஸ்ட் 31ம் திகதி தலைவர்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது.

16.3. மாணவர்கள் ஒழுக்கம் தொடர்பான நிலையான குழு (SCSD)

மாணவர்கள் ஒழுக்கம் தொடர்பான நிலையான குழுவொன்றை (SCSD) ஸ்தாபிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரச பல்கலைக்கழகங்களிலிருந்து பகிடிவதையை இல்லாதொழிப்பதே இந்த நிலையான குழுவின் நோக்கமாகும். மேலே கூறப்பட்டுள்ள குழுவிற்காக நியமிக்கப்பட்டவர்களுக்கு மேலதிகமாக பின்வருவோர் சார்பாக பரிந்துரைக்கப்படுபவர்கள் இக்குழுவில் உள்ளடக்கப்படுவர்;

- கௌரவ. சட்டமா அதிபர்
- பாதுகாப்பு அமைச்சு செயலாளர்
- பொலிஸ்மா அதிபர்

16.4. பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்செயல் தொடர்பாகவும் அதன் சமுக மற்றும் சட்ட விளைவுகள் தொடர்பாகவும் அச்சு ஊடகத்தை பயன்படுத்திபகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்செயலை எதிர்த்து போராடுவது குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல்.

2018/2019 உள்ளெடுப்பின் புதுமுக மாணவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட பின்வரும் ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1. 1998ம் ஆண்டின் 20ம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடுத்தல் சட்டம்

2. 2015ம் ஆண்டின் 4ம் இலக்க, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்

3. "பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மற்றும் பாலியல்சார் வன்செயல் தொடர்பாக மாணவர்களுக்கான தகவல்" எனும் சிற்றேடு தயாரிக்கப்பட்டது. பகிடிவதை மற்றும் பாலியலும் பால்நிலைசார் வன்செயல் என்றால் என்ன; பகிடிவதையில் எவ்வாறான செயற்பாடுகள் காணப்படுகின்றன; பகிடிவதை செய்யப்படும் போது எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள்; யாரிடம் முறைப்பாடு செய்வது என்பவற்றை இந்த சிற்றேடு விளக்குகின்றது.

16.5. பால்நிலை ஒப்பரவு மற்றும் சமத்துவம், பகிடிவதை மற்றும் பாலியலும் பால்நிலைசார் வன்செயல் தொடர்பான கொள்கைகள்

உரிய நிறுவனங்களுக்கு வந்த முறைப்பாடுகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் 7 நாட்களுக்குள் தலைவர்/பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை வந்தடைவதற்கு அத்தகைய முறைப்பாடுகளுக்காக எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகளுடன் ஒன்றுசேர்த்து நிறுவனத்தால் பெறப்பட்ட பகிடிவதை மற்றும் பாலியலும் பால்நிலைசார் வன்செயல் தொடர்பான முறைப்பாடுகளை சமர்பிப்பதற்கு பல்கலைக்கழகங்களின் உப வேந்தர்கள், வளாகங்களின் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் பணிப்பாளர்களை கேட்டுக்கொள்வதற்காக ***"பல்கலைக்கழகங்கள்/வளாகங்கள்/நிறுவனங்களுக்கு மாணவர்கள், ஆளணி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட பகிடிவதை மற்றும்பாலியலும் பால்நிலைசார் வன்செயல் (SGBV) தொடர்பான முறைப்பாடுகள்"*** தொடர்பாக 04ம் இலக்க ஆணைக்குழச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

16.6. "இலங்கை பல்கலைக்கழக அமைப்பில் பகிடிவதை மற்றும் பாலியலும் பால்நிலைசார் வன்செயல் (SGBV) தொடர்பான ஓர் ஆய்வு மற்றும்இலங்கை பல்கலைக்கழக அமைப்பில் பகிடிவதை மற்றும் பாலியலும் பால்நிலைசார் வன்செயலை எதிர்த்துப் போராடுவதற்கான அமுல்படுத்தல்/தலையீடுகள் மற்றும் பொறிமுறைகளை முன்மொழிதல்

இந்த முறைமை சார்ந்த ஆராய்ச்சியானது யுனிசெப்பின் நிதியுதவியுடன் 2018 ஜீனில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இரண்டு (02) கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. கட்டம் 01 பிரச்சினை தொடர்பான அளவுசார் மற்றும் தரமசார்ந்த ஆய்வு மீது கவனஞ் செலுத்தியதுடன் கட்டம் 02, கட்டம் 01 ஐ அடிப்படையாகக் கொண்டு விருத்தி செய்யப்பட்ட மூலோபாயங்கள்/செயல் புள்ளிகளின் அமுலாக்கத்தை ஆதரவளிப்பதில் கவனத்தை செலுத்தியது. கட்டம் 02 இன் ஆராய்ச்சியானது 2019இல் ஆராய்ச்சி செயற்பாடுகளை நடாத்தும் போது ஏற்பட்ட தவிர்க்கமுடியாத தடைகளின் காரணமாக 2020இல் தொடர்ந்தது.

2020இல் ஆராய்ச்சியின் இறுதி அறிக்கையானது பூரணப்படுத்தப்பட்டதுடன் ப.மா.ஆ குழு மற்றும் யுனிசெப்பின் மீளாய்வுச் செயன்முறைகளைத் தொடர்ந்து முடிவாக வெளியிடப்படும்.

மனித விழுமியங்கள், சமுக ஒத்திசைவு, பால்நிலை, பல்வகமை மற்றும் வேறுபாடுகளை மதித்தல் தொடர்பான நோக்குநிலை கையேடு ஒன்றினை உருவாக்குவதாக மேலேயுள்ள ஆராய்ச்சியின் கட்டம் 2 இன் முன்மொழிவின் முக்கிய கூறுகளில் ஒன்று காணப்பட்டது. கூறப்பட்ட பணியை பூர்த்தி செய்வதற்கு ஆலோசகர் ஒருவராக ஓய்வுநிலைப் பேராசிரியர் ஸ்ரீ ஹெற்ரிகே நியமிக்கப்பட்டதுடன் இது செயற்பாட்டில் உள்ளது.

17. பல்கலைக்கழக கல்வியியலாளர்களுக்கு உயர் கல்விக்கான உதவி

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கு அமைவாக, கல்விசார் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கென விஷேடமாக இளம் கல்வியாளர்களை தமது உயர் கல்வியினை தொடர்வதற்கும் பல்கலைக்கழக முறைமையினுள் ஆராய்ச்சிக் கலாச்சாரத்தைஊக்குவித்து பலப்படுத்துவதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது ஆய்வு மற்றும் சர்வதேசக் கூட்டுத் தாபனத்தின் ஊடாக 2020ம் ஆண்டில் ஒத்திசைவான முயற்சியினை மேற்கொண்டது.

மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன;

17.1 உயர் கல்விக்கான மானியங்கள்

17.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மானியத்தின் கீழ் உயர் கல்விக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு நிதிசார் உதவி

பல்கலைக்கழக அமைப்பின் ஆதிக்க எல்லையின் கீழ் உள்ள உயர் கல்வி நிறுவகங்களின் கடமை புரியும் கல்விசார் ஆளணியின் நிரந்தர உறுப்பினர்களுக்கு அவர்களது முதுமாணிப் மற்றும் கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை கற்பதற்கானநிதி உதவியினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது வழங்கி வருகிறது. கல்வியாளர்கள் தங்களுடைய தொழில்துறை மேம்பாட்டுக்காக தேவைப்படும் தகமைகளை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து துறைகளிலும் உள்ள கல்வியாளர்களுக்கு நிதிசார் உதவியினை வழங்குவதன் மூலமாக ப.மா.ஆ குழுவின் கீழுள்ள அரச பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி திறனை பலப்படுத்துவதே இந்த மானியத் திட்டத்தின் நோக்கமாகும்.

மானியத்தின் மொத்த மதிப்பு அதன் பாடப்பிரிவு, ஆய்வின் தன்மை மற்றும் திட்டம் நடத்தப்படும் நாடு ஆகியவற்றுடன் மாறுபடும். இருப்பினும், மானியமானது ஆண்டுக்கு ரூ. 2.0 மில்லியனை மீறுவதில்லை. முன்மொழிவுத் திட்டத்தின் தரம் மற்றும் அதன் விஞ்ஞான ரீதியான திறமையை அடிப்படையாகக் கொண்டு போட்டி அடிப்படையில் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் ஒரு மானியத்திற்கு தகுதி பெறுவதற்கு,ஆங்கில மொழியில் நடத்தப்படும் முதுமாணி அல்லது பி.எச்.டி.களுக்கு 6.0 க்கும் குறையாமலும், வேறு ஏதாவது மொழிகளில் பட்டங்களுக்கானஐ.எல்.இ.டி.எஸ் (கல்வி) குறைந்தபட்சம் ஒட்டு மொத்தமாக 6.0 குறையாத மதிப்பெண்ணுடனும் விண்ப்பதாரி ஒருவர் ஐ.எல்.இ.டி.எஸ் (கல்வி) க்கு குறைந்தபட்சம் 6.5 மதிப்பெண்களைப் பெற்றாக வேண்டும.

2020ல் ரூ 67 மில்லியன் தொகையில் PhD கற்பதற்காக 17 விண்ணப்பதாரிகள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்டனர்.

ஆண்டு	வழங்கப்பட்ட மானியங்களின் எண்.	ஆங்கீகரிக்கப்பட்ட மானியத்தினது பெறுமதி ரூ.பா.மில்லியன்
2015	43	69.89
2016	39	107.32
2017	49	147.79
2018	17	83.38
2019	14	75.2

அட்டவணை 17.1.1 2015-2019 இலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பட்டப் பின்படிப்பிற்கான மானியங்கள்

17.1.2 இலங்கை ப.மா.ஆ குழு- ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகம் கலாநிதி / முதுமாணி நிகழ்ச்சித் திட்டம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகத்துடன் (ஐ.யு.ஜே) இணைந்து,சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை முடிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்வியாளர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களின் நலன்களுக்காக இணை அனுசரணை நிதியுதவித் தொகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்கான கலாநிதிநிகழ்ச்சித் திட்டத்திற்கு அதிகபட்சமாக 02 அபேட்சகர்களையும், முதுமாணிநிகழ்ச்சித் திட்டத்திற்கு அதிகபட்சமாக 10 அபேட்சகர்களையும், சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகம் அனுமதிக்கின்றது. அபேட்சகர்களின் தெரிவானது ஒவ்வொரு நிறுவனமும் வகுத்துள்ள தேவைப்பாடுகளின் திருப்தியின் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவாலும் சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகத்தினாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

இந்த புலமைப்பரிசிலானது கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்த கல்விக் கட்டணத்தையும் அபேட்சகர் ஒருவருக்கான 90,000 ஜப்பானிய ஜென்னில் மாதாந்த வாழ்க்கை உதவித் தொகையையும் உள்ளடக்கும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகமானது கல்விக் கட்டணத்தில் 50% தள்ளுபடி செய்வதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 50% நிறுவனம்சார் கட்டணம் மற்றும் மாதாந்த வாழ்க்கை உதவித்தொகையை வழங்கும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2020ஆம் ஆண்டுக்காக எதனையும் அனுமதிக்கவில்லை ஆனால் 4 அபேட்சகர்கள் தங்களுடைய உயர் கல்வியை தொடர்ந்து வருவதுடன் 2020 ஆம் ஆண்டுக்கான இந்த திட்டத்தின் கீழ் ¥ 5,165,000 மானியங்களுக்கு சமமான மொத்த தொகையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டது. 2020இல் அபேட்சகர் ஒருவர் தனது படிப்புகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார்.

17.1.3 இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) - குயின்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழக (QUT) இணைந்த/தனித்தனியான கலாநிதி நிகழ்ச்சித் திட்டம் 2020/2021

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பல்கலைக்கழகங்களிலுள்ள கல்வியியலாளர்களின் நன்மை கருதி அவுஸ்திரேலியாவில் கற்றலில் முன்னணியில் திகழும் குயின்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் (QUT) இணைந்து இணைந்த/தனித்தனியான கலாநிதி நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது. குயின்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகமானது குறிப்பாக விஞ்ஞானம், பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவ விஞ்ஞானங்கள் மற்றும் வணிகவியலில் ஆராய்ச்சி பலங்களை கொண்டுள்ளது.

2020 செப்ரெம்பர் 04ம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலமாக இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அதன்படி முடிவுத்திகதி வரையில் (2020 ஒக்டோபர் 30) 07 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதுடன் ஆரம்பகட்ட தெரிவுக்காக குயின்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள.

17.1.4 ஹிறிபித் பல்கலைக்கழகத்தில் கலாநிதி நிகழ்ச்சித் திட்டம்,குயின்ஸ்லாந்து,அவுஸ்திரேலியா – 2020

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள பல்கலைக்கழக கல்வியியலாளர்களுக்கான பட்டப் பின்படிப்பை (கலாநிதி) வழங்கும் நோக்கத்துடன் அவுஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்திலுள்ள ஹிறிபித் பல்கலைக்கழகத்துடன் (Giffith) இணைந்து இணை அனுசரணையுடனான புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.

ஹிறிபித் பல்கலைக்கழகமானது வருடமொன்றுக்கு 12 சர்வதேச பட்டப் பின்படிப்பு ஆராய்ச்சி புலமைப்பரிசில்களை வழங்குவதுடன் மூன்று (03) வருட காலத்திற்கான கல்விக் கட்டணங்களின் முழுச் செலவினை ஈடுசெய்து கொள்வதற்கு சர்வதேச பட்டப் பின்படிப்பு ஆராய்ச்சி புலமைப்பரிசில் ஒன்றும் வெற்றிகரமான அபேட்சகர்களுக்கு வழங்கப்படும். ஹிறிபித் பல்கலைக்கழகமானது பட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு தேவைப்பட்டால், மேலதிகமான ஆறு மாதங்களுக்குரிய கல்விப் புலமைப்பரிசில் மற்றும் வாழ்க்கை உதவித் தொகையினை வழங்குவதற்கும் பரிசீலித்துள்ளது.

அதற்கும் மேலதிகமாக அவுஸ்திரேலியாவிற்காக ப.மா.ஆ குழுவினால் அனுமதிக்கப்பட்ட வரையறைக்குள் மூன்று (03) வருட காலத்திற்கான வாழ்க்கை உதவித் தொகை மற்றும் மாணவர்களுக்கான வெளிநாட்டு மருத்துவச் செலவினையும் வெற்றிகரமான அபேட்சகர்களுக்கு ப.மா.ஆ குழு வழங்குகின்றது.

2019 ஜீன் இல் 1வது சுற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் 22 விண்ணப்பங்கள் உரிய திகதிக்கு முன்னர் பெறப்பட்டன, அத்துடன் அனைத்துவிண்ணப்பங்களும் ஹிறிபித் பல்கலைக்கழகத்திற்கு பூர்வாங்க காட்சிப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டன. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த ஆராய்ச்சி முன்மொழிவுகளை கருத்தில் கொண்டு 2020ம் ஆண்டில் ப.மா.ஆ குழுவுடன் இணைந்து ஹிறிபித் பல்கலைக்கழகமானது 10 மானியம் பெறுநர்களை தெரிவு செய்துள்ளதுடன் புலமைப்பரிசிலைப் பெறுவதற்கும் அனுமதித்துள்ளது.

2020 ஆகஸ்ட் 2ல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2வது சுற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் 2020 செப்ரெம்பர் 15முடிவுத் திகதியாக காணப்பட்டது. அதன்படி 18 விண்ணப்பங்கள் முடிவுத் திகதிக்கு முன்னர் பெறப்பட்டு பூர்வாங்க தெரிவிற்காக ஹிறிபித் பல்கலைக்கழகத்திற்குஅனுப்பி வைக்கப்பட்டன.

17.2 அரச பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய புரிந்துணர்வு ஒப்பந்தம்/ உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான முன் அனுமதி பெறுதல்

வெளிநாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்/ உடன்படிக்கையில்ஈடுபடுவதற்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் வரி அமைச்சிலிருந்து முன் அனுமதி பெறப்பட வேண்டும். மேலும் பல்கலைக்கழகங்களால்

மேற்கொள்ளப்படும் அனைத்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களும்/ உடன்படிக்கைகளும் அமைச்சரவை அமைச்சர்கள் ஊடாக பாரரளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென 2018.07.03 இல் அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இந்த செயன்மறையானது ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட 2019.12.19ம் திகதியிடப்பட்ட சுற்றிக்கை இல.PS/SP/SB/சுற்றறிக்கை/06/2019 மூலமாக வழிப்படுத்தப்பட்டது.

அதன்படி ப.மா.ஆ குழுவானது இந்த நோக்கத்திற்காக பின்வருமாறு 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பல்கலைக்கழக அமைப்பிலுள்ள நடைமுயைான்றை பின்பற்றியுள்ளது;

1. உரிய பல்கலைக்கழகத்தின் பேரவையின் அனுமதி
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி
3. கல்வி அமைச்சின் அனுமதி
4. வெளிவிவகார அமைச்சின் அனுமதி

2020ல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளின் சுருக்கம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

தொ.இல	பல்கலைக்கழகம்	பெறப்பட்டபுரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளின் எண்	பரிந்துரைக்கப்பட்டு அமைச்சுக்கு அனுப்பப்பட்டபுரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகளின் எண்
01	பேராதனை	08	06
02	கொழும்பு	14	14
03	களனி	01	01
04	ஸ்ரீ ஜயவர்தனபுர	06	06
05	மொறட்டுவ	06	04
06	றுகுணை	16	09
07	இலங்கை திறந்த	04	04
08	ரஜரட்டை	02	02
09	சப்ரகமுவ	01	01
10	வயம்ப	02	02

அட்டவணை 17.2 2020ல் ப.மா.ஆகுழுவினால் பரிந்துரைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகள்

18. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்


அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டவாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட 1999 ஜூன் 10ம் திகதிய ஆணைக்குழச் சுற்றறிக்கை இல.747 இன் பிரகாரம் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் 1999 செப்டம்பர் 1இல் ஸ்தாபிக்கப்பட்டது.

18.1. முக்கிய நிதிச் சிறப்பம்சங்கள்


18.1.1. முதலீடு மற்றும் முதலீட்டு வருமானம்

அரச வங்கிகள் மற்றும் அரசாங்கத் திறைசேரி முறிகள் மற்றும் கடன் பத்திரங்களில் நிலையான வைப்புக்களின் மீது முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

வருமான பகுப்பாய்வு- 2020



2020.12.31ல் உள்ளபடி மொத்த முதலீடு




18.2. உறுப்பினர்களின் பங்களிப்பு

நிதிச் சிறப்பம்சங்கள்						
ஓய்வூதிய நிதியம்						
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு						
		2016	2017	2018	2019	2020
1	உறுப்பினர்கள்					
	செயற்படும் உறுப்பினர்கள்	11,722	12,586	13,945	14922	15,211
	செயற்படாத உறுப்பினர்கள்	1,451	1,856	1,928	2025	2,023
	மொத்த உறுப்பினர்கள்	13,173	14,442	15,873	16947	17,234
2	மொத்த உறுப்புரிமை	16,230	17,779	19,733	21275	21,951
3	ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்கள் எண்	222	252	279	314	351
4	மொத்த தொகை மீளப்பெற்ற உறுப்பினர் எண்	812	886	965	1082	1,186
5	நிதி மீதி (ரூ.மில்லியன்)					
	பங்களிப்பாளர் நிதி	5,805	7,043	8,722	10,906	13,473
	ஓய்வூதியதாரர்களின் நிதி மற்றும் ஒதுக்கீடு	590	708	744	815	855
	நிதியின் வளர்ச்சி %	21%	21%	22%	24%	22%
6	மொத்த முதலீடு (ரூ.மில்)	5,704	6,969	9,078	11,060	13,347
7	மொத்த முதலீட்டு வருமானம் (ரூ.மில்)	595	733	924	1,168	1,333

8	வருமான வரி (ரூ.மில்)	**11**	**22**	**138**	**166**	**189**
9	முதலீட்டுத் திரும்பல் (%)	**10%**	**10.50%**	**10.18%**	**10.56%**	**9.98%**
10	உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வட்டி	**10.50%**	**10%**	**10%**	**10%**	**9.60%**
11	ஓய்வூதியக் கொடுப்பனவுகள்(ரூ.மில்)	**39**	**51**	**58**	**75**	**93**
12	ஓய்வூதியக் கொடுப்பனவின் வளர்ச்சி%	**21%**	**31%**	**14%**	**29%**	**24%**


அட்டவணை 18.2 ஓய்வூதிய நிதியத்தின் நிதியியல் சிறப்பம்சங்கள்

நிதியின் வளர்ச்சி




ஆண்டு

ஓய்வூதியக் கொடுப்பனவுகள்




ஆண்டு

முதலீட்டு வருமானம்



உறுப்பினர்கள்



மொத்த உறுப்பினர்கள்

செயற்பாட்டு உறுப்பினர்கள்

செயற்பாடற்ற உறுப்பினர்கள்

19. பல்கலைக்கழக சேமலாப நிதியம்


பல்கலைக்கழக அமைப்பில் உள்ள ஊழியர்களுக்கான ஓய்வூதிய உத்தரவாதத் திட்டமாக 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 89 – 96வது பிரிவுகளில் உள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக சேமலாப நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. பணி ஓய்வில் அல்லது அவர்களின் சேவைகளை நிறைவு


செய்கையில் உறுப்பினர்களுக்கு சிறப்பான வருமானத்தை மீள வழங்குவதை உறுதி செய்வதற்கு விவேகத்துடன் நிதியை நிர்வகிப்பதே பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் நோக்கமாகும்.


19.1. நிதியியல் கூற்றுக்களின் சுருக்கம்


நிதிச் சிறப்பம்சங்கள் பல்கலைக்கழக சேமலாப நிதியம்								
		உள்ளபடி		2016	2017	2018	2019	2020
1	உறுப்பரிமை							
	செயற்படும் உறுப்பினர்கள் கணக்கு	31-டிசம்பர்		32,055	34,614	36,851	38,842	40,105
	செயற்படா உறுப்பினர்கள் கணக்கு	31-டிசம்பர்		5,218	5,208	5,202	5,196	5,193
2	மீளச் செலுத்திய நிதிகள்	31-டிசம்பர்						
	மீளச் செலுத்திய நிதிகளின் எண்	31-டிசம்பர்		2,845	2,881	2,798	3,143	2,717
	மீளச் செலுத்திய நிதிகள் பெறுமானம் (ரூ மில்லி)	31-டிசம்பர்		1,737	2,259	2,141	2,456	2,712
3	நிதி மீதி(ரூ மில்லி)	31-டிசம்பர்		33,052	37,027	42,254	48,729	56,059
4	கடன் மீதி (ரூ மில்லி)	31-டிசம்பர்		4,745	5,274	6,304	7,047	7,432
5	பொது திரும்பல்	31-டிசம்பர்		220	279	6	121	65
6	ஆண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட கடன்(ரூ மில்லி)	31-டிசம்பர்		916	1,414	1,963	1,897	1,471
7	மொத்த முதலீடு(ரூ மில்லி)	31-டிசம்பர்		23,763	27,028	34,651	38,275	45,585
8	முதலீட்டு வருமானம் (ரூமில்லி)	31-டிசம்பர்		2,852	3,157	3,653	4,393	4,741
09	முதலீட்டு வரி(ரூ மில்லி)	31-டிசம்பர்		57	113	690	622	674
10	முதலீடுகள் மீதான திரும்பல் (வரிக்கு முன்பாக)	31-டிசம்பர்		12.87%	11.68%	10.54%	11.48%	10.40%
11	ஆரம்ப இருப்பின் மீது விதிக்கப்பட்ட வரி	1-ஜனவரி		11.30%	10.50%	10.00%	10.00%	9.60%

அட்டவணை19.1 நிதியியல் கூற்றுக்களின் சுருக்கம்









20. 2020ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபன சுற்றறிக்கைக் கடிதங்கள்

திருத்தப்பட்டவாறு 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்குள் அந்தந்த அரசாங்க அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட உத்தரவுகளுடன் சேர்த்து, ப.மா.ஆ குழு மற்றும் உயர்கல்விசார் நிறுவனங்களின் சுமுகமான செயற்பாட்டிற்காக ஆணைக்குழுவில் இருந்து கிடைத்த தீர்மானங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல்களையும் அவசியமான வழிகாட்டல்களையும் வழங்குவதற்காக மீளாய்வுக் காலத்தின் போது ப.மா.ஆ குழுவானது 16 ஆணைக்குழச் சுற்றறிக்கைகள் மற்றும் 07 ஸ்தாபன சுற்றறிக்கை கடிதங்களை வெளியிட்டது.

இவற்றின் விபரங்கள் அட்டவணை 20.1 மற்றும் அட்டவணை 20.2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இல	சுற்றறிக்கை இல	விடயம்	சுற்றறிக்கைத் திகதி
1	01/2020	தொழில் வழகாட்டல் ஆலேசகர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்	24.01.2020
2	11/2019(iii)	இணைப் பேராசிரியார்/பேராசிரியர் பதவிக்கான ஆட்சேர்ப்பு/பதவியுயர்வு திட்டத்திற்கான திருத்தங்கள்	17.02.2020

3	02/2020	உப வேந்தர் பதவிக்கு நியமித்தல்	04.05.2020
4	14/2019(i)	திறந்த விளம்பரம் மூலமாக அல்லது திறமைப் பதவியுயர்வின் மூலமாக பேராசிரியர்/ இணைப் பேராசிரியார் பதவிக்காக தெரிவுக் குழுக்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டவர்களின் நியமனம்	15.05.2020
5	03/2020	சிரேஸ்ட உதவிப் பதிவாளர்/பிரதிப் பதிவாளர் (நூலக சேவைகள்) மற்றும் சிரேஸ்ட உதவிச் செயலாளர்/ சிரேஸ்ட உதவிப் பதிவாளர், பிரதிச் செயலாளர்/பிரதிப் பதிவாளர்(சட்ட மற்றும் ஆவணப்படுத்தல்) பதவிகளுக்கான பதவி உயர்வுகள்	01.06.2020
6	04/2020	பல்கலைக்கழகங்கள்/வளாகங்கள்/நிறுவனங்களுக்கு மாணவர்களாலும் ஆளணி உறுப்பினாகளாலும் மேற்கொள்ளப்பட்ட பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலைசார்ந்த வன் செயலகள் மீதானமுறைப்பாடுகள்	10.08.2020
7	05/2020	கணக்காய்வு உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்	10.08.2020
8	06/2020	மேற்பார்வையாளர்(தரைத்தோற்றம்) தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான திருத்தம்	24.08.2020
9	07/2020	நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் பதவிக்கான நியமனம்	11.09.2020
10	21/2018(i)	தொழில்நுட்ப அலுவலர் (ICT) பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான திருத்தம்	16.10.2020
11	08/2020	U-AS 2(II) சம்பளத் திட்டத்திலுள்ள கல்விசார் உதவி ஆளணி வகைப்பாட்டுக்கான வினைத்திறன் தடைதாண்டல் தேவைப்பாடுகள்	11.11.2020
12	09/2020	பட்டபின்படிப்பு பட்டம், இளமாணிப் பட்டம் அல்லது வேறு ஏதாவது கல்விசார் தகமைகள், வேறு ஏதாவது தகமைகளின் எண்ணம்.	12.11.2020
13	10/2020	ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்	12.11.2020
14	11/2020	பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் மாற்றுவழி கணிப்பீடுகளை நடாத்துவதற்கான வழிகாட்டல்கள்	01.12.2020
15	12/2020	அரச நிறுவனங்களிலுள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலைவாய்ப்பு	08.12.2020
16	13/2020	தொழில்நுட்ப அலுவலர்(ஒலி,ஒளி) பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்	23.12.2020

அட்டவணை 20.1 2020ல் வெளியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கைகள்

இல	சுற்றறிக்கை இல	விடயம்	சுற்றறிக்கைத் திகதி
1	01/2020	பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 25/2019 ஏற்றுக் கொள்ளல் – அரச அலுவலர்களுக்கான விசேட முற்கொடுப்பனவு - 2020	03.01.2020
2	02/2020	அலுவலர் ஒருவர் சம்பள அதிகரிப்பு நாளன்றிலே பதவி உயர்த்தப்படுகின்ற போதும் அவருடைய விருப்பின் பேரில் முன்னைய பதவிக்கு மீள அமர்த்தப்படும் போதும் பொருந்தக்கூடிய சம்பளப் படிநிலையை தீர்மானித்தல்	30.01.2020
3	03/2020	பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 09/2020 ஏற்றுக் கொள்ளல் – றமழான் பண்டிகைக் காலத்தில் விசேட விடுமுறை வழங்குதல்- 2020	30.04.2020
4	04/2020	பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 01/2020 ஏற்றுக் கொள்ளல் – கொவிட்-19 காலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளை மீளத் தொடங்குதல் மற்றும் பராமரித்தல்	30.04.2020

5	05/2020	பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2019 மற்றும் 03/2019(i) ஏற்றுக் கொள்ளல்	11.05.2020
6	06/2020	பல்கலைக்கழக அமைப்பிற்குள் ஒரு பதவியிலிருந்து இன்னொரு பதவிக்கு நியமிக்கும் போது ஊழியர்களின் சம்பள நிலைப்பாடு	24.08.2020
7	07/2020	பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 24/2020 ஏற்றுக் கொள்ளல் – 2021இல் ஆரம்பமாகும் வேலை	30.12.2020

அட்டவணை 20.2 2020ல் வெளியிடப்பட்ட ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று

நிதி நிலைமைக் கூற்று			LKR
2020 டிசம்பர் 31 திகதியன்று	Note	2020	2019
சொத்துக்கள்			
அசையாச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	1	517,346,263	66,871,406
பெறப்பட வேண்டிய கணக்குகள்	2	84,352,955	138,945,888
இருப்புக்கள்		11,463,447	8,246,357
முன்னோக்கிய கொடுப்பனவுகள்/வைப்புக்கள்	3	2,825,836	4,951,841
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**615,988,501**	**219,015,492**
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	4	76,883,610	77,889,919
காணிகள் மற்றும் கட்டிடங்கள்	4	602,658,363	613,327,894
புலப்படாச் சொத்துக்கள் - கணனி மென்பொருள்	5	3,848,906	5,013,193
மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் - கணனி மென்பொருள்	6	12,271,750	11,683,750
முதலீடுகள்	7	49,701,691	49,080,430
பிணை முறிகள் மிகை மதிப்பு	8	4,703,829	5,268,598
அன்பளிப்புக்கள்/புலமைப்பரிசில் நிதிய முதலீடு	9	36,787,225	30,783,729
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		**786,855,374**	**793,047,513**
மொத்தச் சொத்துக்கள்		**1,402,843,876**	**1,012,063,005**
பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டிய கணக்குகள்	10	94,780,735	59,760,624
முன்னோக்கிய கொடுப்பனவுகள்/வைப்புக்கள்	11	40,901,140	21,788,605
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**135,681,876**	**81,549,230**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
ஓய்வுதிய அனுகூலங்களுக்கான ஒதுக்கீடுகள்	12	100,266,049	87,645,735
அன்பளிப்புக்கள் நிதியம்	13	38,914,914	32,958,826
மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		**139,180,963**	**120,604,562**
மொத்தப் பொறுப்புக்கள்		**274,862,838**	**202,153,791**
தேறிய சொத்தக்கள்		**1,127,981,037**	**809,909,214**
பல்கலைக்கழக நிதியம் மற்றும் பெறுவனவுகள்			
சிறப்பு நிதியங்கள்	14	1,708,840	1,573,366
ஒத்தி வைக்கப்பட்ட மூலதன பெறுவனவுகள்	15	188,429,760	201,135,647
செலவிடப்படாத மூலதன அளிப்புக்கள்	16	306,824,678	3,577
அன்பளிப்புக்கள் மற்றும் உதவிகள்		759,665	893,906
ஆளனி மேம்பாட்டு நிதியம்		25,402,237	33,800,132
UGC அபிவிருத்தி நிதியம்		36,154,376	39,129,376
மீள் மதிப்பீட்டு மேலதிகம்		509,313,767	509,313,767
திரட்டிய மேலதிகம் / (குறைவு)		59,387,714	24,059,443
மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள்		**1,127,981,037**	**809,909,214**

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பொறுப்புடையவர்களாக இருக்கின்றனர். இந்த நிதிக் கூற்றுக்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அங்கீகரித்துள்ளதுடன் ஆணைக்குழு சார்பில் கையொப்பமிட்டுள்ளனர்.

Snr.Prof. Sampath Amaratunga
Chairman

Snr. Prof. A.K.W.Jayawardane
Commission Member

Ubayakula Ranaweera
Accountant

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று		
2020 டிசம்பர் 31 திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கானது	**2020**	**2019**
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
மேலதிகம் / (குறைவு)	**29,882,647**	**12,267,136**
சீர்படுத்தல்கள்		
முன்னைய ஆண்டுகளுக்கான சீர்படுத்தல்கள்	5,445,624	42,322
புனரமைப்புக்களுக்கான மாற்றல்கள்	-	11,412,091
தேய்வுகள்	34,655,997	39,744,987
பெறுமானத் தேய்வுகள்	(34,655,997)	(39,744,987)
பிணை முறிகள் மிகை மதிப்பு	(564,769)	251,763
வருமானம் மற்றும் செலவினம் - நிதியக் கணக்கு	(8,971,395)	-
பணிக்கொடைக்கான ஒதுக்கீடு	13,641,856	30,861,385
ஸ்வீப்பர் கணக்கு வட்டி - புலமைப்பரிசில்	(46,049)	-
தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்	**39,387,914**	**54,834,697**
தொழிற்பாட்டு மூலதனத்தின் மாற்றங்கள்		
இருப்புக்கள் (அதிகரிப்பு) / குறைவு	(3,217,090)	24,497,186
கொடுப்பனவுகள் (அதிகரிப்பு) / குறைவு	48,687,022	(41,787,016)
பணிக்கொடைக்கான வட்டி	3,568,467	3,568,116
முற் கொடுப்பனவுகள் / வைப்புக்கள் (அதிகரிப்பு) / குறைவு	2,126,005	(111,738)
பெறுவனவுகள் (அதிகரிப்பு) / குறைவு	54,592,934	76,198,203
பணிக்கொடை கொடுப்பனவுகள்	(4,025,241)	(2,610,988)
முன்னைய ஆண்டுகளுக்கான சீர்படுத்தல்கள் - நிலையான சொத்துக்கள் மூலதன மதிப்பாக்கம்	-	290,196
தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசுப் பாய்ச்	**141,120,011**	**114,878,656**
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்		
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவ	(21,815,869)	(25,119,904)
நிலையான வைப்புக்கள் / திறைசேரிப் பிணைப்பத்திரங்களில் முதலீடு	(6,624,758)	1,027,043
மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் (அதிகரிப்பு) / குறைவு	(588,000)	8,883,328
முதலீட்டு செயற்பாடுகளின் ஊடாக பெற்ற தேறிய காசுப் பாய்ச்	**(29,028,627)**	**(15,209,533)**
நிதிசார் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
மூலதன அளிப்புக்கள் பெறுவனவு	21,000,000	11,500,000
புனரமைப்பு உதவிகள் பெறுவனவுகள்	3,000,000	4,000,000
மூலதன உதவி (குறைவு) / அதிகரிப்பு	12,705,887	4,129,900
குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காகப் பெறப்பட்ட நிதி	135,475	(29,798,027)
புலமைப் பரிசில் நிதியப் பெறுவனவுகள் / (கொடுப்பனவுகள்)	5,956,088	776,761
ஆளணி அபிவிருத்தி நிதியத்தின் (குறைவு) / அதிகரிப்பு	(8,397,895)	3,769,065
UGC அபிவிருத்தி நிதியத்தின் (குறைவு) / அதிகரிப்பு	(2,975,001)	(30,640,783)
மனித வளங்கள் அபிவிருத்தி நிதியத்தின் அதிகரிப்பு / (குறைவு)	306,824,678	-
2017 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறைவு	-	3,577
அன்பளிப்புக்கள் மற்றும் பரிசில்கள் (குறைவு) / அதிகரிப்பு	134,241	234,051
நிதிசார் செயற்பாடுகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**338,383,473**	**(36,025,456)**
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் அதிகரிப்பு / (குறைவு)	**450,474,857**	**63,643,667**
	66,871,406	**3,227,739**
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசு அல்லாத சொத்துக்கள்	**517,346,263**	**66,871,406**
குறிப்பு - 1		
UGC A/C 2323284 - இலங்கை வங்கி	(258,892,745)	(50,374,646)
இலங்கை வங்கி - பல்கலைக்கழக புலமைப் பரிசில் நிதியம்	3,133,245	2,071,605
உடனடி வைப்புக்கள்	650,000,000	86,000,000
நிதிய முகாமைத்துவக் கணக்கு	122,954,013	28,918,448
மக்கள் வங்கி - சேகரிப்புக் கணக்கு	151,750	256,000
	517,346,263	**66,871,406**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானஉரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று

2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு உரிமை மாற்றம் பற்றிய கூற்று

விபரம்	நிறுத்திவைக்கப் பட்ட உதவிகள்	செலவிடப்படாத உதவிகள்	நிறுத்திவைக்கப் பட்ட இலாபம் /. நட்டம்	பல்.மா.ஆ.கு. அபிவிருத்தி நிதியம்	மீள் மதிப்பிட்டு மேலதிகம்	ஆளணி அபிவிருத்தி நிதியம்	அன்பளிப்புக்கள் பெறுவனவு	மொத்த தேறிய சொந்துப் பங்குகள்
2019.01.01 ஆம் திகதியன்று மீதி	205,234,547	-	11,749,985	69,770,159	509,313,767	30,031,067	1,127,957	827,227,482
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்கள்	-	-	42,322	-	-	-	-	42,322
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்கள் - தேய்மானம்	-	-	(290,196)	-	-	-	-	(290,196)
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்கள் - பெறுமானத் தேய்மானம்	-	-	290,196	-	-	-	-	290,196
அரச அளிப்புக்கள் பெறுவனவு	-	15,500,000		-	-	-	-	15,500,000
ஆண்டின் மேலதிகம் / பற்றாக்குறை	-		12,267,136	-	-	-	-	12,267,136
செலவிடப்படாத நிதியத்திற்கு மாற்றுதல் - கையகப்படுத்தல்கள்	15,500,000	(15,500,000)	-	-	-	-	-	-
தேய்வுகள், பெறுமானத் தேய்வுகள்	(40,035,183)	-	-	-	-	-	-	(40,035,183)
அபிவிருத்தி நிதியத்திடமிருந்து மாற்றுதல்	19,955,021	-	-	(19,955,021)	-	-	-	-
HCD செலவிடப்படாத நிதியத்திலிருந்து மாற்றுதல்	247,211	-	-	-	-	-	-	247,211
CGEE இற்கு மாற்றுதல்	-	-	-	(11,514,011)	-	-	-	(11,514,011)
அன்பளிப்புக்களின் பெறுமானத் தேய்வு	234,051	-	-	-	-	-	(234,051)	-
இலாபத்தை மாற்றுதல் - APQN மாநாடு	-	-	-	828,250	-	-	-	828,250
முதலீடுகளுக்கான வட்டி	-	-	-	-	-	2,148,764	-	2,148,764
தேசிய விஞ்ஞான அறக்கட்டளை நிதியத்திலிருந்து மாற்றல்	-	-	-	-	-	1,620,301	-	1,620,301
2019 திசெம்பர் 30 திகதியன்று மீதி	**201,135,647**	**-**	**24,059,443**	**39,129,376**	**509,313,767**	**33,800,132**	**893,906**	**808,332,272**
செலவிடப்படாத 2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள்	-	3,577	-	-	-	-	-	3,577
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்கள்	-	-	5,445,624	-	-	-	-	5,445,624
அரச அளிப்புக்கள் பெறுவனவு	-	440,000,000		-	-	-	-	440,000,000
ஆண்டின் மேலதிகம் / பற்றாக்குறை	-	-	29,882,647	-	-	-	-	29,882,647
செலவிடப்படாத நிதியத்திற்கு மாற்றுதல் - கையகப்படுத்தல்கள்	21,000,000	(21,000,000)	-	-	-	-	-	-
புனரமைப்புச் செலவினத் தேய்மானம்	-	(2,881,725)	-	-	-	-	-	(2,881,725)
தேய்வுகள், பெறுமானத் தேய்வுகள்	(34,655,997)	-	-	-	-	-	-	(34,655,997)
ஈவனு செலவிடப்படாத நிதியத்திலிருந்து மாற்றுதல்	697,594	(697,594)	-	-	-	-	-	-
புனரமைப்பு செலவினங்களை மாற்றுதல்	118,275	(118,275)	-	-	-	-	-	-
ருபுஷ புலமைப்பரிசில் நிதியத்தை சிறந்த பல்கலைக்கழக நிதியத்த	-	-	-	(2,000,000)	-	-	-	(2,000,000)
ஈவனு செலவினத் தேய்மானம்	-	(108,481,304)	-	-	-	-	-	(108,481,304)
அன்பளிப்புக்களின் தேய்மானம்	134,241	-	-	-	-	-	(134,241)	-
முதலீட்டின் மீதான வட்டி	-	-	-	-	-	1,611,389	-	1,611,389
தேசிய விஞ்ஞான அறக்கட்டளையின் செலவுகள்	-	-	-	-	-	(401,500)	-	(401,500)
உருவாக்கப்பட்ட நிதிய் செலவினங்கள்	-	-	-	(975,000)	-	-	-	(975,000)
ஆளணி மேம்பாட்டு நிதிய் செலவினங்கள்	-	-	-	-	-	(9,607,784)	-	(9,607,784)
								-
2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மீதி	**188,429,760**	**306,824,678**	**59,387,714**	**36,154,376**	**509,313,767**	**25,402,237**	**759,665**	**1,126,272,198**

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு வருடாந்த நிதிக் கூற்று 2020
ஜனவரி முதல் டிசம்பர் 2020 வரையான காலத்திற்கான நிதிச் செயற்றிறன் கூற்று

நிதிச் செயற்திறன் பற்றிய கூற்று			ரூ.
2020 ஜனவரி முதல் திசெம்பர் வரையான காலப் பகுதி	குறிப்பு	2020	2019
வருமானம்			
அரசாங்க மானியம்	17	2,789,612,876	2,674,130,539
அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்பு			
ஏனைய வருமானங்கள்	18	29,677,510	30,318,443
மொத்த வருமானம்		**2,819,290,387**	**2,704,448,982**
செலவுகள்			
சம்பளம், ஊதியம், மற்றும் ஊழியர் நலனோம்புகை	19	320,396,652	319,259,998
வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	20	86,317,908	106,122,138
மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல்கள்	21	2,314,606,010	2,175,591,318
தேய்வுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் பெறுமானத் தேய்வு	22	34,655,997	39,744,987
புனரமைப்புச் செலவுகள்	23	2,881,725	17,775,506
ஏனைய செலவுகள்	24	30,549,447	33,687,898
மொத்தச் செலவு		**2,789,407,740**	**2,692,181,845**
காலப் பகுதிக்குள் மேலதிகம் / (குறைவு)		**29,882,647**	**12,267,136**

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2020 டிசம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பளியுள்ள கணக்கெடுப்புக் கருத்துரை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள கணக்கெடுப்புக்கருத்துரைக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டிருக்கும் விடயங்களின் ஊடாக ஏற்படும் அழுத்தங்கள் தவிர நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்கங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 முனைப்பளியுள்ள கணக்கெடுப்பு கருத்துரைக்கான அடிப்படை

(அ)இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்திக்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட் காலத்தை வருடாந்தம் மீளாய்வுக்குட்படுத்தாமை காரணமாக கிரயம் 67.2 மில்லியன் ரூபா வாகனங்கள் உட்பட்ட நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானத்திற்குட்படுத்தப்பட்டிருந்தபோதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, ஏற்பட்டிருந்த மதிப்பீட்டுப் பிழையை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ)இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்திக்கமைய நிதிக் கூற்றுக்களில் அறிக்கைப்படுத்தப்படுவது நிறுவனமொன்றின் அறிக்கைப்படுத்தல் காலப்

பகுதியின் இறுதியில் அதன் நிதி நிலைமை சம்பந்தமாகவன்றி எதிர்காலத்தில் ஏற்பட முடியுமான நிலைமைகள் சம்பந்தமாக இல்லையென்பதுடன் எதிர்காலத்தில் செயற்பாடுகளுக்கு ஏற்க வேண்டியேற்படும் செலவுகளுக்கான நிதி ஏற்பாடுகளை இனங்கண்டுகொள்ளக் கூடாது. ஆயினும் அறிக்கையின் திகதியாகும்போது 02 நகரியல் பல்கலைக்கழகங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படாத 04 ஆலோசகர்களுக்கு ஆலோசளைக் கட்டணமாக 4.4 மில்லியன் ரூபா மீளாய்வாண்டின் இறுதியில் நிதியீடு செய்யப் படாமை காரணமாக அந்த அளவினால் ஆண்டின் மேலதிகம் குறைவாகவும் நடைமுறைப் பொறுப்புக்களை அதிகமாகவும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ)திறைசேரி அளிப்பொன்றாகக் கிடைக்கப் பெற்ற 2018 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 2018 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்த 4.3 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க மோட்டார் வண்டியின் நியாயமான பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கில் பதிவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ)மீளாய்வாண்டுடன் தொடர்பாக 1.8 மில்லியன் ரூபா செலவுக் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தமையின் காரணமாக ஆண்டின் மேலதிகம் மற்றும் அட்டுறு செலவுகள் அந்த அளவினால் முறையே அதிகமாக மற்றும் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துரைக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவைகள் என நான் நம்புகின்றேன்.

1.3ஆணைக்குழுவின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வறிக்கைத் திகதியின் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் ஆணைக்குழுவின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, ஆனாலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது சம்பந்தமாக எனது கணக்காய்வறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதிலிருந்து கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரையில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன் நான் அது சம்பந்தமாக எந்த விதமான சான்றுப்படுத்தலையோ கருத்தையோ வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்பாக, மேலே இனங்கண்டு கொள்ளப்பட்ட ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமானபோது வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானபோது வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு விதமாகப் பெற்றுக்கொண்ட அறிவிற்கமைய அளவு ரீதியாக பொருந்தவில்லையாவென்பதனை கவனத்திற்கொள்ளுதல் எனது பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் 2020 ஆண்டறிக்கையை வாசிக்கும்போது அதில் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருப்பதாக நான் தீர்மானித்தால் அதனை சரி செய்வதற்காக நிர்வகிக்கும் தரப்புக்கு அந்த விடயங்களைத் தெரிவித்தல் வேண்டும். மேலும் சரி செய்யப்படாத பிழையாகக் குறிப்பிடப்படடடிருத்தல்கள் இருப்பின் அவை அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) உறுப்புரைக்கமைய உரிய காலப் பகுதியினுள் என்னால் பாராளுமன்றத்தில் சபையில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவை தொடந்தும் நடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம்,ஆணைக்குழுவை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின்நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக சோதனையிடும் பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் ஆணைக்குழுவின் வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

1.5நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும்.நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுக்குக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் மொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் ஏனைய பொதுவான விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் தரப்புக்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய எனது அறிக்கையின் முனைப்பளியுள்ள

கணக்கெடுப்புக் கருத்துரைக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கம் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதுடன், எனது ஆய்வின்போது நிறுவகம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளமையை காண முடியுமாக இருக்கின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எதுவும் எனது கவனத்திற்குட்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய ஆணைக்குழுவினது நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு ஆணைக்குழுவுடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமைக்குப் புறம்பான வகையில் தொடர்பு இருத்தல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய ஏதேனுமொரு ஏறபுடைத்தாகும் எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இயைந்துசெல்லாத வகையில் செயற்பட்டிருத்தல்.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய ஆணைக்குழுவின் அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகளுடன் இயைந்து செல்லாத வகையில் அலுவல் மேற்கொண்டிருந்தமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய ஆணைக்குழுவின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் உரிய காலப் பகுதிக்குள் ஏற்புடைத்தாகும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தாதிருந்தமை.

2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 12 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுடன் தொடர்பான 20 கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டு 01 வருடம் முதல் 13 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்தபோதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் குறித்த கருத்திட்டங்களின் பணிகளை ஆரம்பிப்பதற்கு உயர் கல்வி நிறுவகங்கள் தவறியிருந்தன.

(ஆ) 10 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுடன் தொடர்பான கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு 03 முதல் 11 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்தபோதிலும் ஒப்பந்தப்பணியை ஒப்படைத்தல் தாமதமாகியமை,பணிகளை ஆரம்பித்தல் மற்றும் கருத்திட்டங்களை நிறைவு செய்ய வேண்டிய உரிய காலப் பகுதியை நீடித்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் 18 கருத்திட்ட்ங்களின் பௌதிக முன்னேற்றம் 8% முதல் 50% வரை மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது.

(இ) இலங்கை மாணவர்களின் திறமை மற்றும் அறிவை விருத்தி செய்தல் மற்றும் அதனூடாக தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட மாணவர்களை உருவாக்கும் நோக்கில் 2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டின் யூன் மாதம் வரையான காலப் பகுதிக்காக 452 மில்லியன் ரூபா தொகையை தெற்காசியப் பல்கலைக்கழக அங்கத்துவக் கட்டணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் செலவிடப்பட்டிருந்தாலும் இலங்கை மாணவர்களின் திறமை மற்றும் அறிவை விருத்தி செய்தல் மற்றும் அதனூடாக தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்கான பங்களிப்பு வழங்கப்பட்டிருப்பதனை அவதானிக்க முடியவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 03 பல்கலைக்கழகங்களுக்கு இணையவழி முறையில் மாணவர்கள் அனுமதி தொடர்பான கணனி மென்பொருளை தாபிப்பதற்காக ரூ.10,253,750 முற்பணத் தொகை வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியாகும்போது 02 முதல் 05 வரையான வருட காலம் கடந்திருந்தபோதிலும் குறித்த அலுவல்களை நிறைவு செய்து முள்பணத்தைத் தீர்ப்பதற்கு அறிக்கையின் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும்போது 2016/2017 கல்வியாண்டு முதல் 2019/2020 கல்வியாண்டு வரை முறையே 897,738,2,226 மற்றும் 2,461 என்ற ரீதியில் வெற்றிடங்கள் நிலவியதுடன் அந்த வெற்றிடங்களை அறிக்கைத் திகதி வரை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 2019 திசெம்பர் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தபோதிலும் பல்கலைக்கழக அனுமதிக்காக இணையவழி முறையின் கீழ் விண்ணப்பங்கள் கோருதலை 02 மாதத்திற்கும் அதிக காலம் தாமதித்து 2020 மார்ச் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.மேலும் 2020 ஒக்தோபர் 12 ஆம் திகதி 2020 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. உயர் தரப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அந்தத் திகதிக்கு முன்னர் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவறியமை காரணமாக பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பை இழந்த மாணவர்களுக்கு 2020 ஆம் ஆண்டின் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை.

(எ) 21ஆம் நூற்றாண்டுக்கு பொருந்தும் விதத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் ஊழியர்களை மையமாகக் கொண்ட நிதிசார் தகவல்கள் முறைமையொன்றை 2020 யூன் மாதமாகும்போது அறிமுகஞ் செய்வதற்கு மீளாய்வாண்டின் செயல் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதியில் அதன் பௌதிக முன்னேற்றம் சுமார் 50% ஆக இருந்தது.

(ஏ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தை மீளாய்வுக்குட்படுத்தி நாளதுவரையாக்கல், மாணவர்களின் அனுமதியை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கத்தின் உயர்கல்விப் பிரிவை மறுசீரமைத்தல் மற்றும் நிகழ்கால மற்றும் எதிர்கால உயர் கல்வித் தேவைப்பாடுகளுக்குப் பொருந்தும் விதத்தில் உயர்கல்வி நிறுவகங்களை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் நாளதுவரையாக்கல் ஆகிய விடயங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதியில் அதன் பௌதிக முன்னேற்றம் 25% எனும் கீழ் மட்டத்திலேயே நிலவியது.

டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் சட்ட ரீதியான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயம்	தற்போதைய நிலைமை
(அ) 12 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுடன் தொடர்பான 20 கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டு 01 வருடம் முதல் 13 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்தபோதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் குறித்த கருத்திட்டங்களின் பணிகளை ஆரம்பிப்பதற்கு உயர் கல்வி நிறுவகங்கள் தவறியிருந்தன.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சட்டத்தின் 100(1) பிரிவுக்கமைய தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படும் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கு நிதி ஏற்பாடு ஒதுக்கப்படுகின்றது. அதற்கமைய குறித்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்கள் அவற்றுக்குக் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டினுள் முன்னுரிமை வரிசைக்கிரமத்திற்கமைய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கைள் ஊடாக புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதனை 2019 ஆம் ஆண்டு முதல் வரையறுத்திருந்தமையின் காரணமாக புதிய கருத்திட்டங்களின் பணிகளை ஆரம்பித்தல் தாமதமடைந்துள்ளது. தற்போது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட10,408/- மில்லியன் ரூபா மதிப்பீட்டுப் பெறுமதியைக் கொண்ட 22 கருத்திட்டங்கள், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் புதிய கருத்திட்டங்கள் ஆரம்பிப்பதனை வரையறுத்திருப்பதனால் ஆரம்பிக்க முடியாதுள்ளது. அத்தோடு கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மாணவர் விடுதியை நிர்மாணிப்பதற்கு மாத்திரமே 13 வருடங்கள் தாமதமாகியுள்ளது. அதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள காணியில் விடுதியை நிர்மாணிப்பதற்கான செலவு அதிகமாக இருப்பதனால் பிறிதொரு காணியை கண்டறிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனால் இந்தக் கருத்திட்டம் தாமதமடைந்துள்ளதாக பல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
(ஆ) 10 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுடன் தொடர்பான கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு 03 முதல் 11 வருடங்கள் வரையான காலம்	பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்குக் கிடைக்கும் வருடாந்த நிதி ஏற்பாடு மற்றும் அதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து பணி முற்பணம் (கட்டு நிதி) விடுவிப்புக்கமைய மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் தீர்மானிக்கப்படுகின்றது.

கடந்திருந்தபோதிலும் ஏல விலையை நிர்ணயித்து பணியை ஒப்படைத்தல் தாமதமாகியமை,பணிகளை ஆரம்பித்தல் மற்றும் கருத்திட்டங்களை நிறைவு செய்ய வேண்டிய உரிய காலப் பகுதியை நீடித்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் 18 கருத்திட்ட்ங்களின் பௌதிக முன்னேற்றம் 8% முதல் 50% வரை மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது.	கடந்த 05 வருடங்களில் 25,525/-மில்லியன் ரூபா செலவு செய்து 138 கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அது தவிர 80 கருத்திட்டங்கள் பல்வேறு முன்னேற்ற மட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்களில் பேராதனை மருத்துவ பீடத்தின் இணை மருத்துவ சிகிச்சைக் கட்டிடம் மாத்திரமே 11 வருடங்கள் தாமதமாகி நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதன் முதலாவது கட்டம் 2013.04.30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இரண்டாவது கட்டத்தை ஆரம்பிப்பதற்கான புதிய மதிப்பீடு அங்கீகரிக்கப்படும் வரை தாமதமடைந்துள்ளது. இவ்வாறு கருத்திட்டங்களின் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் நிலவுவதற்கு பொதுவாக கீழ் குறிப்பிடப்படும் காரணங்கள் ஏதுவாகின்றது. i. வரையறுக்கப்பட்ட வருடாந்த நிதி ஏற்பாடு காரணமாக ஆரம்பிப்பதற்குத் தாமதமாகியமை. ii. தாமதமாக ஆரம்பிப்பதனால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செலவினம் (TCE) போதுமானதாக இருக்காமை. iii. அதற்கமைய கருத்திட்டங்களின் மொத்தச் செலவின மதிப்பீட்டை நாளதுவரையாக்கி அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். iv. 2018,2019,2020 ஆண்டுகளில் மூலதன நிதியை விடுவித்தல் குறைந்த மட்டத்தில் நிலவியமை. அத்தோடு 2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 வைரஸ் தொற்று நிலைமை என்பன கருத்திட்டங்களின் முன்னேற்றத்திற்கு மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
(இ) இலங்கை மாணவர்களின் திறமை மற்றும் அறிவை விருத்தி செய்தல் மற்றும் அதனூடாக தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட மாணவர்களை உருவாக்கும் நோக்கில் 2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டின் யூன் மாதம் வரையான காலப் பகுதிக்காக 452 மில்லியன் ரூபா தொகையை தெற்காசியப் பல்கலைக்கழக அங்கத்துவக் கட்டணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் செலவிடப்பட்டிருந்தாலும் இலங்கை மாணவர்களின் திறமை மற்றும் அறிவை விருத்தி செய்தல் மற்றும் அதனூடாக தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட	தெற்காசிய பல்கலைக்கழகம், சார்க்(SARC)அரச தலைவர்கள் மாநாட்டின்போதன இணக்கப்பாட்டிற்கையம 2007 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அங்கத்துவ நாடுகளுக்கான பங்களிப்புத் தொகை தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, வெளிநாட்டு அமைச்சின் அறிவித்தல் மற்றும் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டது. **விபரம்** | **கொடுப்பனவு 2010 முதல் 2014** | **கொடுப்பனவு 2015 முதல் 2019** | **கொடுப்பனவு 2020, 2019 மற்றும் 2020 06 மாதங்கள்** | **மொத்தம்** பங்களிப்பு | 2.951 | இல்லை | 0.394 | 3.345

மாணவர்களை உருவாக்குவதற்கான பங்களிப்பு வழங்கப்பட்டிருப்பதனை அவதானிக்க முடியவில்லை.	(மில்.அமெ.டொ.)				
	பங்களிப்பு (மில்.ரூ.)	378.1	இல்லை	73.87	451.97

தெற்காசிய பல்கலைக்கழகத்திற்கு பட்டப்பின் படிப்புக்காக வருடாந்தம் சில இலங்கை மாணவர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஆனாலும் இலங்கை மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்காதிருப்பதுடன் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் தெற்காசியப் பல்கலைக்கழகத்திற்கு கற்கைநெறிக்கான கட்டணத்தை செலுத்துகின்றனர்.

அதற்கமைய 2014 அம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 44 மாணவர்களுக்கு தெற்காசியப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை பயிலுவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.2021 ஆம் ஆண்டில் இந்த மாணவர்களின் எண்ணிக்கை மூவராக (03) இருப்பதுடன் அந்த மாணவர்களும் கற்கைநெறிக் கட்டணத்தைச் செலுத்துகின்றனர்.

இது சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தெற்காசியப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை தெரிவு செய்யும் செயல்முறை சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு இதுவரை பதில் கிடைக்கவல்லையென்பதோடு நிர்வாக சபையைக் கூட்டுவதனையும் தொடர்ந்தும் காலந்தாழ்த்தியுள்ளது.

இதற்கமைய செலுத்தும் தொகையுடன் ஒப்பிடுகையில் தெற்காசியப் பல்கலைக்கழகத்தினால் அனுகூலங்கள் (நன்மை) கிடைப்பதில்லையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்த நிலைமையின் அடிப்படையில்2020/2021 தவணைத் தொகையைச் செலுத்துவதனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், இந்த தெற்காசியப் பல்கலைக்கழகம் சம்பந்தமாக மேலும் செலவு மற்றும் அனுகூலங்களை பகுப்பாய்வு செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 03 பல்கலைக்கழகங்களுக்கு இணையவழி முறையில் மாணவர்களை அனுமதித்துக் கொள்வதுடன் தொடர்பான கணனி மென்பொருளை தாபிப்பதற்காக ரூ.10,253,750	1. பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை இணையவழி முறையின் கீழ் கோருவதற்கான கணனி மென்பொருளை தாபிக்கும் அலுவல் 2014 ஆம் ஆண்டில் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான ஆரம்பக் கொடுப்பனவு ரூ.7,000,000/- ஆகும். 2015 இல் யுனிகோட் முறை (UNICODE) அறிமுகஞ் செய்யப்பட்டமையின் அடிப்படையில் அதனை மேலும் மேம்படுத்துவதற்கான தேவையேற்பட்டதுடன்

முற்பணத் தொகை வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியாகும்போது 02 முதல் 05 வரையான வருட காலம் கடந்திருந்தபோதிலும் குறித்த அலுவல்களை நிறைவு செய்து முள்பணத்தைத் தீர்ப்பதற்கு அறிக்கையின் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அதற்காக ரூ. 1,972,750/- மொரட்டுவைப் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டது. இவ்வாறு தொடர்ந்து மேம்படுத்தப்பட்ட மென்பொருள் 2019 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தும் வசதிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் மொபிடெல் /ரெலிகொம் முத்தரப்பு உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் இந்த மென்பொருள் "அனுமதிக்கான விண்ணப்பங்களை இணையவழி முறையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு" பயன்படுத்தப்படுகின்றது. அத்தோடு அந்த மென்பொருள் ஊடாக மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் ஏற்புடைய கற்கை நெறியில் பதிவு செய்துகொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த முத்தரப்பு உடன்படிக்கையை ஆரம்பிக்கும்போது மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் மொபிடெல் / ரெலிகொம் நிறுவனங்களுக்கு எந்த விதமான மேலதிக கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கமைய மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினூடாக மேம்படுத்தப்பட்ட மென்பொருளுக்காக செலுத்தப்பட்ட ரூ. 8,972,750/- தொகையை 2021 ஆம் ஆண்டு முதல் மூலதன மயப்படுத்த முடியும். 2. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனித் தொழில்நுட்ப நிறுவகத்துடன் இணைந்த தீக்ஷன நிறுவகத்தினால் உருவாக்கப்பட்ட "பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான மென்பொருள்" இற்காக 2015 ஆம் ஆண்டில் யுனிகோட் முறை(UNICODE)அறிமுகப்படுத்தப்பட்டமையின் காரணத்தினால் அதற்காக மேலதிக ரூ.750,000/- தொகை 2016 ஆம் ஆண்டில் ரூ. 375,000 மற்றும் 2017 ஆண்டில் ரூ. 375,000 எனச் செலுத்தப்பட்டது. மேலும், அந்த மென்பொருளை 2020/2021 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியை வெளியிடுவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படும் உள்ளக மென்பொருளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக மேலும் மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் புதிய சேவை உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதுடன் அந்த அலுவல் தற்போது நிறைவு

	செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூ.450,000/- செலுத்த வேண்டுமென்பதோடு அதில் ரூ. 405,000/- ஆரம்பத் தொகையாக ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த மென்பொருளையும் 2021 ஆம் ஆண்டில் மூலதனமயப்படுத்த முடியும். 3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மஹபொல புலமைப் பரிசிலை இணைய வழி முறையில் செலுத்துவதற்காக மென்பொருளொன்றை மேம்படுத்தி உருவாக்குவதற்காக களணிப் பல்கலைக்கழகத்திற்கு 2017 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டது. அதன் மதிப்பீடு ரூ..1,770,000/- ஆகுமென்பதோடு அந்தத் தொகையில் ரூ. 531,000/- முற்பணத் தொகை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் களணிப் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டது. தற்போது அந்தத் தொகையில் ரூ. 265,400/- தொகை மஹபொல நிதியத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு திருப்பிச் செலுத்தப்பட்டு ஈடு செய்யப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் சம்பந்தமான தற்போதைய நிலைமை பற்றி மஹபொல நிதியத்தினால் களணிப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரிடம் உசாவப்பட்டுள்ளதுடன், அவருடைய பதிலுக்கமைய அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
(உ) பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும்போது 2016/2017 கல்வியாண்டு முதல் 2019/2020 கல்வியாண்டு வரை முறையே 897,738,2,226 மற்றும் 2,461 என்ற ரீதியில் வெற்றிடங்கள் நிலவியதுடன் அந்த வெற்றிடங்களை அறிக்கைத் திகதி வரை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.	2016/2017கல்வியாண்டு முதல்2019/2020கல்வியாண்டு வரை ஒவ்வொரு கல்வியாண்டிலும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும்போது கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வெற்றிடம் நிலவுவதற்கான காரணம் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை காரணமல்ல என்பதோடு வெற்றிடங்களை நிரப்புவதன் கீழ் வழங்கப்படும் கற்கைநெறிகளில் பதிவு செய்துகொள்வதனை குறித்த மாணவர்கள் நிராகரிப்பதே காரணமாகும்.எவ்வாறாயினும்2018/2019 கல்வியாண்டிற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக 7 சுற்றுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2019/2020கல்வியாண்டிற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக இது வரை 5 சுற்றுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2019/2020கல்வியாண்டிற்காக மேலும்

83

	பல்கலைக்கழக கற்கை நெறிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(ஊ) 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 2019 திசெம்பர் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தபோதிலும் பல்கலைக்கழக அனுமதிக்காக இணையவழி முறையின் கீழ் விண்ணப்பங்கள் கோருதலை 02 மாதத்திற்கும் அதிக காலம் தாமதித்து 2020 மார்ச் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுமேலும் 2020 ஒக்தோபர் 12 ஆம் திகதி 2020 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. உயர் தரப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அந்தத் திகதிக்கு முன்னர் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவறியமை காரணமாக பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பை இழந்த மாணவர்களுக்கு 2020 ஆம் ஆண்டின் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை.	2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் 2020 மார்ச் மாதம் கோரப்பட்டிருந்தது. ஆனாலும் முதலாவது கொவிட் தொற்று அலை காரணமாக மார்ச் 14 முதல் நாடு பூராவும் முடக்கப்பட்டதுடன் அதற்கமைய பாடசாலை முறைமை கால வரையறையின்றி மூடப்பட்டது. அதற்கமைய பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு அதிபரின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்வதனை இலகுபடுத்துமுகமாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்காகன இறுதித் திகதியை 2020 யூன் 22 ஆம் திகதி வரை நீடிக்க வேண்டியேற்பட்டது. அத்தோடு அந்த ஆண்டில் பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமாக பல்வேறு தரப்புக்களால் உயர் நீதிமன்றத்தில் 07 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மேலும் 2020 ஒக்தோபர் மாதம் 09 ஆம் திகதியாகும்போது இரண்டு (02) பாடத்திட்டங்களின் கீழ் தோற்றிய மாணவர்களுக்கு நியாயமான முறையொன்றைப் பரிந்துரைப்பதற்கு சட்ட மா அதிபரின் அறிவுறுத்தல்களைக் கோர வேண்டியேற்பட்டது. சட்ட மா அதிபரின் அந்த அறிவுறுத்தல்களுக்கமைய இடைக்கிடை முறைகளை மாற்றியமைக்க வேண்டியேற்பட்டமையினால் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதற்கு 2020 ஒக்தோபர் மாதம் வரை தாமதிக்க வேண்டியேற்பட்டது. கொவிட் தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட இவ்வாறான தாமதங்களைத் தடுப்பதற்காக 2021 ஆம் ஆண்டு முதல் முழுமையான கணனி மென்பொருளொன்றைப் பயன்படுத்தி பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து பிள்ளைகளின் பாடசாலை காலப் பகுதியை தீர்மானிப்பதற்கான செயல்முறையொன்று தயாரிக்கப்பட்டது. அதற்கமைய2020/2021 கல்வியாண்டிற்கான வெட்டுப் புள்ளிகளை 2021 ஒக்தோபர் மாதம் வழங்கப்பட்டது. மேலும், எதிர்காலத்தில் உயர் தரப் பரீட்சை புதிய பாடத்திட்டம் பழைய பாடத்திட்டம் என இரண்டு (02) பாடத்திட்டங்கள் ரீதியில் நடாத்துவதனை அதிமேதகு ஜனாதிபதியவர்களின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்வதில்லையென பரீட்சைத் திணைக்களத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
(எ) 20 ஆம் நூற்றாண்டுக்கு பொருந்தும் விதத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் ஊழியர்களை மையமாகக்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் ஊழியர்களை மையமாகக் கொண்ட நிதிசார் தகவல்கள் முறைமையொன்றின் ஊடாக பல்கலைக்கழக முறைமைக்காக பொதுவான சம்பள மென்பொருளொன்று,மேம்படுத்தப்பட்ட சேமலாப நிதிய மென்பொருளொன்று மற்றும்

கொண்ட நிதிசார் தகவல்கள் முறைமையொன்றை 2020 யூன் மாதமாகும்போது அறிமுகஞ் செய்வதற்கு மீளாய்வாண்டின் செயல் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதியில் அதன் பௌதிக முன்னேற்றம் சுமார் 50% ஆக இருந்தது.	மேம்படுத்தப்பட்ட ஓய்வூதியங்கள் மென்பொருளொன்றை தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலை நிறைவேற்றுவதற்காக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பின்னர் ஆலோசனை சேவை ஒப்பந்தப் பணி 2021 ஆம் ஆண்டில் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது. தற்போது ஆரம்பத் திட்டமிடல் அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த அலுவல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2020 மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையும் ஊழியர்களை மையமாகக் கொண்ட நிதிசார் தகவல்கள் முறைமையை மேம்படுத்தும் அலுவல்களின் பௌதிக முன்னேற்றம் மீது தாக்கம் செலுத்தியுள்ளது.
(ஏ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தை மீளாய்வுக்குட்படுத்தி நாளதுவரையாக்கல், மாணவர்களின் அனுமதியை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கத்தின் உயர்கல்விப் பிரிவை மறுசீரமைத்தல் மற்றும் நிகழ்கால மற்றும் எதிர்கால உயர் கல்வித் துவைப்பாடுகளுக்குப் பொருந்தும் விதத்தில் உயர்கல்வி நிறுவகங்களை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் நாளதுவரையாக்கல் ஆகிய விடயங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதியில் அதன் பௌதிக முன்னேற்றம் 25% எனும் கீழ் மட்டத்திலேயே நிலவியது.	1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளை நிகழ்காலத்திற்குப் பொருந்தும் பிரகாரம் நாளதுவரையாக்கும் நோக்கில் 2020.03.12 ஆம் திகதி நடைபெற்ற 1028 ஆவது ஆணைக்குழுக் கூட்டத்தின்போது அதற்காக அறிஞர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த அறிஞர் குழு அங்கத்தவர்கள் பல்கலைக்கழக முறைமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆர்வங்கொண்ட அனைத்துத் தரப்புக்களுடனும் இடைக்கிடை கலந்துரையாடலை மேற்கொண்டு அறிஞர் குழுவின் இறுதி அறிக்கை 2020.12.22 ஆம் திகதி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை சட்டத்தினை திருத்தியமைப்பதற்கான முன்மொழிவுகள் அடங்கிய விபரமான அறிக்கையொன்றாக இருப்பதனால் அதனை சட்ட வரையறைக்குள் பொருந்தும் பிரகாரம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் அதன் பின்னர் ஆணைக்குழு அங்கத்தவர்களுடன் இடைக்கிடை இந்த புதிய ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அனைத்துத் திருத்தங்களும் உள்ளடங்கிய இறுதி வரைவை கௌரவ கல்வி அமைச்சரின் கவனத்திற்குட்படுத்துவதற்காக கலந்துரையாடப்படவிருப்பதுடன் தற்போது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிய வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்
2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று

	குறிப்புக்கள்	2020	2019
		ரூ.	ரூ.
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	5	121,490,944	540,830,105
பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம்	6	371,000,028	340,575,680
பெறப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை	7	68,726,222	40,444,195
முதலீடுகள்	8	2,704,032,556	1,819,511,250
		3,265,249,750	2,741,361,229
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
முதலீடுகள்	8	10,524,626,140	8,707,033,353
பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம்	6	731,805,487	396,356,998
		11,256,431,626	9,103,390,351
மொத்தச் சொத்துக்கள்		14,521,681,376	11,844,751,581
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
நானாவித கடன் வழங்குநர்கள்	9	1,137,214	1,083,030
அங்கத்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை	10	9,513,631	1,920,135
சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை	11	91,333	1,796,763
செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படிகள்	12	31,618	31,618
செலுத்த வேண்டிய வருமான வரி	13	183,210,433	119,034,441
		193,984,229	123,865,988
மொத்த தேறிய சொத்துக்கள்		**14,327,697,146**	**11,720,885,593**
அங்கத்துவ நிதியம் மற்றும் இருப்புக்கள்			
பங்களிப்பு நிதியம்		13,472,992,175	10,905,585,546
ஓய்வூதிய நிதியம்		358,793,633	321,402,667
ஒட்டுமொத்த வருமானம்		495,911,337	493,897,380
நிதியத்தின் தேறிய பெறுமதி		**14,327,697,146**	**11,720,885,593**

05 முதல் 06 வரையான கணக்கீட்டு கொள்கைகள் பக்கங்களும் 07 முதல் 15 வரையான குறிப்புகள் பக்கங்களும் இத்தகைய நிதிக் கூற்றின் ஒருங்கிணைந்த பகுதியொன்றை உருவாக்குகின்றன. இத்தகைய நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அளிக்கைக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களே பொறுப்பானவர்கள். 2021 பெப்ரவரி 25 இல் இடம்பெற்ற ஆணைக்குழுவின் 1,049 வது கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் இத்தகைய நிதிக் கூற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்டன

Ubayakula Ranaweera
Accountant

Dr. Priyantha Premakumara
Secretary

Snr Prof. Sampath Amaratunge
Chairman

Snr Prof. A.K.W.Jayawardena
Commission Member

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிய வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்
2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	2020	(மீள் கூற்று) 2019
	ரூ.	ரூ.
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
வரி மற்றும் செலவுக்குப் பின்னரான தேறிய வருமானம்	**1,129,976,136**	**989,655,897**
கூட்டுக / (கழிக்குக):		
திறைசேரி முறிகள் மீதான கழிவு / உபரித்தொகை	15,763,023	15,806,269
விற்கப்பட்ட திறைசேரி முறிகள் மீதான கணக்கீட்டு லாபம் / நட்ட	-	(3,729,405)
ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை	12,147,579	10,567,013
வருமான வரி ஒதுக்கீடு	188,763,208	165,438,745
	1,346,649,945	1,177,738,518
தொழிற்பாட்டு மூலதன மாற்றங்கள்		
பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம் (அதிகரிப்பு) / குறைவு	(365,872,837)	(316,076,528)
நானாவித கடன் வழங்குனர்களின்(அதிகரிப்பு) / குறைவு	54,183	75,820
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசு உருவாக்கம்	**980,831,291**	**861,737,810**
கழிக்குக : செலுத்திய வருமான வரி	(124,599,824)	(122,193,933)
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**856,231,468**	**739,543,877**
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
நிலையான வைப்புக்களின் முதிர்ச்சி	1,819,511,250	1,515,000,000
நிலையான வைப்புக்களில் முதலீடு	(2,154,032,556)	(2,209,511,250)
விற்பனை/ திறைசேரி முறிகள் முதிர்ச்சி	-	315,468,096
கடன் பத்திரங்கள் கொள்வனவு	(1,800,000,000)	(800,000,000)
திறைசேரி முறிகள் கொள்வனவு	(583,355,810)	(303,489,400)
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**(2,717,877,116)**	**(1,482,532,554)**
நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
பங்களிப்புத் தொகை பெறுகை	1,617,121,757	1,421,253,500
பங்களிப்புத் தொகை மீளச் செலுத்தல்	(82,263,214)	(82,495,833)
ஓய்வூதியம் செலுத்துதல்	(92,552,055)	(75,421,026)
நிதி நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**1,442,306,487**	**1,263,336,641**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு	(419,339,161)	520,347,964
ஆரம்ப காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	540,830,105	20,482,141
இறுதி காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**121,490,944**	**540,830,105**
வங்கிப் பணம்		
இலங்கை வங்கி	997,561	7,817,451
மக்கள் வங்கி	2,000,000	
கூட்டுக: **நிதிய முகாமைத்துவக் கணக்குகள்**		
மீள்கொள்வனவு வைப்புக்கள்	-	505,000,000
ஒரு நாள் இரவுநேர வைப்புக்கள்	-	25,000,000
ஸ்வீப்பர் வைப்புக்கள் - இலங்கை வங்கி	11,605,151	3,012,653
ஸ்வீப்பர் வைப்புக்கள் - மக்கள் வங்கி	106,888,233	
	121,490,944	**540,830,105**

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிய வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானஉரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று

2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
உரிமை மாற்றல் கூற்று

	பங்களிப்பு நிதியம்	ஓய்வூதிய நிதியம்	நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் (மீள்	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2019 ஜனவரி 01 ஆம் திகதியன்று மீதி	8,722,324,383	281,196,642	462,916,135	9,466,437,160
2019 ஆம் ஆண்டிற்கான மேலதிகம்	-	-	989,641,694	989,641,695
திறைசேரி முறிகள் மீதான கழிவு/உபரித்தொகை (366) சீர்படுத்தல்கள்		-	3,870	3,870
பெறப்பட வேண்டிய தொகுதிக்கடன் வருமானம் (மீள் கூற்று)			83,476	83,476
பெறப்பட வேண்டிய நிலையான வைப்புக்களின் வருமானம் (மீள் கூற்று)		-	(71,462)	(71,462)
செலுத்த வேண்டிய வருமான வரி (மீள் கூற்று)	-		(1,682)	(1,682)
உறுப்பினர்களிடமிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி	(2,540,796)	-	2,540,796	-
பிழையான பங்களிப்புத் தொகையை சீர்செய்தல்	(82,864)	-	-	(82,864)
நிலுவை / கிடைக்கப்பெறாத பங்களிப்புத் தொகை	3,351,390	-	-	3,351,390
நடப்பு ஆண்டின் வருமானத்தின் ஊடான பரிமாற்றல்	-	10,567,013	-	10,567,013
ஓய்வூதியகாரர்களுக்காக பெற்ற பங்களிப்புத் தொகை	-	4,417	-	4,417
நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம்	1,407,633,090	-	-	1,407,633,090
பூரணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல்	(52,828,840)	-	-	(52,828,840)
ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல்	(78,673,385)	78,673,385	-	-
பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல்	(28,430,646)	-	-	(28,430,646)
2019 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல்	-	(75,421,026)	-	(75,421,026)
ஓய்வூதிய நிதியத்தின் / பங்களிப்பு நிதியத்தின் வட்டி	934,833,213	26,382,235	(961,215,448)	-
2019 டிசம்பர் 31 ஆம் திகதின்று மீதி (மீள் கூற்று)	10,905,585,546	321,402,667	493,897,380	11,720,885,593
2020 ஆம் ஆண்டிற்கான மேலதிகம்	-	-	1,129,963,528	1,129,963,528
உறுப்பினர்களிடமிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி	(15,896,766)	-	15,896,766	-
பிழையான பங்களிப்புத் தொகையை சீர்செய்தல்	(75,476)	-	-	(75,476)
நிலுவை / கிடைக்கப்பெறாத பங்களிப்புத் தொகை	8,511,015	-	-	8,511,015
நடப்பு ஆண்டின் வருமானத்தின் ஊடான பரிமாற்றல்	-	12,147,579	-	12,147,579
ஓய்வுதியகாரர்களுக்காக பெற்ற பங்களிப்புத் தொகை	-	177	-	177
நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம்	1,636,968,067	-	-	1,636,968,067
பூரணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல	(67,908,382)	-	-	(67,908,382)
ஓய்வுதிய நிதியத்திற்கு மாற்றுதல்	(89,960,446)	89,960,446	-	-
பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல்	(20,242,899)	-	-	(20,242,899)
2020 ஆம் ஆண்டில் ஓய்வுதியம் செலுத்துதல்	-	(92,552,055)	-	(92,552,055)
ஓய்வுதிய நிதியத்தின் / பங்களிப்பு நிதியத்தின் வட்டி	1,116,011,515	27,834,820	(1,143,846,336)	-
	2,567,406,629	37,390,966	2,013,959	2,606,811,554
2020 டிசம்பர் 31 ஆம் திகதின்று மீதி	13,472,992,175	358,793,633	# 495,911,338	14,327,697,146

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதிய வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயற்றிறன் கூற்று

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்
2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

(மீள் கூற்று)

		குறிப்புக்கள்	2020	2019
			ரூ.	ரூ.
வருமானம்				
முதலீட்டு வருமானம்		14	1,332,635,658	1,167,598,226
கழிக்குக:	வருமான வரிக்கான ஒதுக்கீடு		(188,775,815)	(165,438,745)
வரிக்கு பின்னரான தேறிய வருமானம்			1,143,859,843	1,002,159,481
கழிக்குக:	**செலவுகள்**			
	ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை	15	12,147,579	10,567,013
	தொழிற்பாட்டுச் செலவுகள்	16	1,748,736	1,936,570
			13,896,315	12,503,584
செலவுகளை கழித்த பின்னர் தேறிய வருமானம்			**1,129,963,528**	**989,655,897**
கூட்டுக:	வருமானத்துக்கான சீர்படுத்துகை		15,896,766	2,540,796
	முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்		493,897,380	462,916,135
பங்கிட முடியுமான தேறிய வருமானம்			**1,639,757,674**	**1,455,112,828**
கழிக்குக:	**அங்கத்துவர் வட்டி**			
	பங்களிப்பு நிதியத்திற்கான வட்டி		1,116,011,515	934,833,213
	ஓய்வூதிய நிதியத்திற்கான வட்டி		27,834,820	26,382,235
			1,143,846,336	961,215,448
முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்			**495,911,338**	**493,897,380**

தலைவர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

பல்கலைக்கழக ஒய்வூதிய நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1)ஆவதுபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

பல்கலைக்கழக ஒய்வூதிய நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுநிதிநிலைமைக் கூற்று,அன்றையதிகதியுடன் முடிவடைந்தஆண்டிற்கானநிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றல் கூற்றுமற்றும் அன்றையதிகதியுடன் முடிவடைந்தஆண்டிற்கானகாசுப் பாய்ச்சல் கூற்றுமற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பானகுறிப்புக்கள்,பொழிப்புச் செய்யப்பட்டமுக்கியகணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தஆண்டிற்கானநிதிக் கூற்றுக்கள் இலங்கைசனநாயகசோசலிசக் குடியரசுஅரசியலமைப்புச் சட்டத்தின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்துவாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கதேசியகணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனதுஅறிக்கைஉரியகாலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுநிதிநிலைமைமற்றும் அன்றையதிகதியுடன் முடிவடைந்தஆண்டிற்கானநிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல்இலங்கைஅரசதுறைகணக்கீட்டுநியமங்களுக்கமையஉண்மைமற்றும் நியாயமானநிலைமையையெடுத்தியம்புகின்றதென்பதுஎனதுகருத்தாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானது மானகணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்தநிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுநியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டநிதிக் கூற்றுக்களைதயாரிக்கமுடியுமாக இருப்பதற்குத் தேவையானஉள்ளககட்டுப்பாடுகளைதீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போதுநிதியத்தை தொடந்தும் நடாத்துவதற்கானஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம், நிதியத்தை கலைத்துவிடுவதற்குகருதினால் அல்லதுவேறுமாற்றுவழிகள்
இல்லாதவிடத்துசெயற்பாடுகளைநிறுத்துவதற்குநடவடிக்கைமேற்கொண்டாலேதவிரதொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பானவிடயங்களைவெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதிஅறிக்கைப்படுத்தல் செயற்பாடுதொடர்பானபொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்ககணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்தமற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைதயாரிக்கக் கூடியவாறு தனது வருமானங்கள்,செலவுகள்,சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாகஉரியபிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளைபேணிவரல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக,நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையானபிறழ் கூற்றுக்களைகொண்டிராதவைஎனநியாயமானஉறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனதுகருத்துஉள்ளடங்கியகணக்காய்வுஅறிக்கையைவெளியிடுதல் எனதுநோக்கமாகும்.நியாயமானஉறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலானஉறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கைகணக்காய்வுநியமங்களின் பிரகாரம் கணக்காய்வைமேற்கொள்ளும்போதுஅதுஎப்போதும் பொருண்மையானபிறழ் கூற்றுக்களைவெளிப்படுத்திக் கொள்வதற்கானஉறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனிஅல்லது கூட்டானஅழுத்தம் காரணமாகபொருண்மையானபிறழ் கூற்றுக்கள் ஏற்படமுடியுமாக இருப்பதுடன்,அதன் அளவானது இந்தநிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்ததீர்மானங்கள் மீதானதாக்கத்தின் மீதுதங்கியுள்ளது.

இலங்கைகணக்காய்வுநியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாகஎன்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வுமேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ளகணக்காய்வுக்குக் கருத்துரைக்கானஅடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லதுதவறுகள் காரணமாகநிதிக் கூற்றுக்களில் ஏற்படமுடியுமானபொருண்மையானபிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடியஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடுசெய்வதற்காகசந்தர்ப்பத்திற்கேற்பபொருத்தமானகணக்காய்வுநடைமுறைகள் திட்டமிடப்பட்டுநடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாகஏற்படும் பொருண்மையானபிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாகஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி,பொய் ஆவணங்களைதயாரித்தல்,வேண்டுமென்றேதவிர்த்தல் அல்லதுஉள்ளகக்கட்டுப்பாடுகளைதவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கானகாரணங்களாகும்.

- உள்ளகநிர்வாகத்தின் பயன்தருதன்மைசம்பந்தமாகக்கருத்தைதெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும்,சந்தர்ப்பத்திற்கேற்பபொருத்தமானகணக்காய்வுநடைமுறைகளைதிட்டமிடுவதற்காகஉள்ளகநிர்வாகம் சம்பந்தமானதெளிவுபெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்டகணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுமதிப்பீடுகளின் நியாயத்தன்மைமற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டதொடர்புடையவெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடுமதிப்பீடுசெய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லதுநிலைமைகள் காரணமாகஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்புசம்பந்தமாகபொருண்மையானநிச்சயமற்றதன்மை இருக்கின்றதாஎன்பதுதொடர்பாகபெற்றுக்கொள்ளப்பட்டகணக்காய்வுசாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காகஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்புசம்பந்தமானஅடிப்படையைபயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமைதீர்மானிக்கப்பட்டது. போதுமானநிச்சயமற்றதன்மைநிலவுவதாகநான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அதுசம்பந்தமானவெளிப்படுத்தல்களுக்குஎனதுகணக்காய்வுஅறிக்கையில் கவனத்தைச் செலுத்தவேண்டியுள்ளதுடன்,அந்தவெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனதுகருத்தைதிருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்காலநிகழ்வுகள் அல்லதுநிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்புமுடிவுறுத்தப்படலாம்.

- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்புமற்றும் உள்ளடக்கத்திற்குஅடிப்படையாகஅமைந்தகொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானமற்றும் நியாயமானவிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டுநிதிக் கூற்றுக்களில் மொத்தமுன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனதுகணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்டமுக்கியமானகணக்காய்வுக் கண்டறிதல்கள்,பிரதானஉள்ளகக்கட்டுப்பாட்டுவினைத்திறனின்மைமற்றும் ஏனைய பொதுவானவிடயங்கள் சம்பந்தமாக ஆளும்தரப்புக்களுக்குஅறிவுறுத்துகின்றேன்.

2. ஏனைய சட்டரீதியானமற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றியஅறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்கதேசியகணக்காய்வுசட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாகவிசேடஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்கதேசியகணக்காய்வுசட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதேவைகளுக்கமைய நிதியத்தின்நிதிக் கூற்றுக்கள் கடந்தஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்கதேசியகணக்காய்வுசட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதேவைகளுக்கமையகடந்தஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்டபரிந்துரைகள்,முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) க்கு அமைவாக 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் விவகாரங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2020 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்மந்தமாக 2018 இன் 19$^{ம்}$ இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1)வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கையின்படி கணக்காய்வு கேள்விகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே இது தொடர்பில் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

பல்கலைக்கழக சேமலாப நிதிய வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று

பல்கலைக்கழக சேமலாப நிதியம்
2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று

	2020 ஆம் ஆண்டு ரூபா	(மீள் கூற்று) 2019 ஆம் ஆண்டு ரூபா
சொத்துக்கள்		
நடைமுறைச் சொத்துக்கள்		
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	154,623,411	1,517,622,550
பெறப்பட வேண்டிய வட்டி	1,737,016,864	1,358,607,042
பெறப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை	254,859,438	143,073,745
பெறப்பட வேண்டிய சேமலாப நிதிய தவணைத் தொகை	35,588,693	22,965,568
பெறப்பட வேண்டிய சேமலாப நிதியக் கடன்	1,046,871,791	895,943,261
முதலீடுகள்	11,223,586,114	6,835,000,000
ஏனைய முற்பணங்கள்	362,800	373,706
இருப்புக்கள்	28,112	210,654
	14,452,937,223	10,773,796,525
நடைமுறையல்லாத சொத்துக்கள்		
பெறப்பட வேண்டிய வட்டி	1,687,409,659	1,044,294,065
சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்	27,067	122,392
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	1,205,934	1,691,246
நீண்ட கால முதலீடுகள்	34,360,934,984	31,439,721,543
சேமலாப நிதியக் கடன்	6,384,690,902	6,150,651,456
	42,434,268,547	38,636,480,701
மொத்தச் சொத்துக்கள்	**56,887,205,771**	**49,410,277,227**
பொறுப்புக்கள்		
கழிக்க : நடைமுறை பொறுப்புக்கள்		
நாணாவித கடன் வழங்குனர்கள்	2,044,497	1,982,440
செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப்படி நிலுவைப் பங்களிப்புத் தொகை	45,849,418	45,831,213
செலுத்த வேண்டிய சேமலாப நிதிய அனுகூலங்கள்	49,806,648	46,011,265
செலுத்த வேண்டிய வரிகள்	650,370,746	448,155,681
	748,071,309	541,980,600
மொத்த தேறிய சொத்துக்கள்	**56,139,134,462**	**48,868,296,627**
நிதியீடுகளாவன.		
அங்கத்துவக் கணக்கு மீதி - செயற்பாடு	56,020,836,691	48,690,885,342
அங்கத்துவக் கணக்கு மீதி - செயற்பாடற்ற	38,153,592	38,208,635
செயற்பாடற்ற அங்கத்துவர்களுக்கான ஒதுக்கீடு	8,000,000	8,000,000
கோரப்படாத அனுகூலங்கள் இருப்பு	6,993,398	6,981,274
நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்	65,150,781	124,221,377
நிதியத்தின் தேறிய பெறுமதி	**56,139,134,462**	**48,868,296,627**

05 முதல் 07 வரையான கணக்கீட்டு கொள்கைகள் பக்கங்களும் 08 முதல் 22 வரையான குறிப்புகள் பக்கங்களும் இத்தகைய நிதிக் கூற்றின் ஒருங்கிணைந்த பகுதியொன்றை உருவாக்குகின்றன. இத்தகைய நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அளிக்கைக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களே பொறுப்பானவர்கள். 2021 பெப்ரவரி 25 இல் இடம்பெற்ற ஆணைக்குழுவின் 1,049 ஆவது கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் இத்தகைய நிதிக் கூற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்டன

Ubayakula Ranaweera
Accountant

Dr. Priyantha Premakumara
Secretary

Snr. Prof. Sampath Amaratunge
Chairman

Snr. Prof. A K W Jayawardane
Commission Member

பல்கலைக்கழக சேமலாப நிதிய வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

பல்கலைக்கழக சேமலாப நிதியம்
2020 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	2020 ஆம் ஆண்டு ரூபா	(மீள் கூற்று) 2019 ஆம் ஆண்டு ரூபா
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
வரி மற்றும் செலவுக்குப் பின்னரான தேறிய வருமானம்	4,063,226,896	3,770,201,568
சீரபடுத்தல்கள்		
திறைசேரி முறிகள் மீதான கழிவு / உபரித்தொகை	73,006,730	82,643,919
திறைசேரி முறிகள் விற்பனை மீதான லாபம் / நட்டம்	-	(50,013,348)
ஆண்டின் தேய்மானம்	95,325	212,540
பதிவழிப்புக்கள்	485,311	485,311
வருமான வரி	673,936,576	619,604,539
தொழிற்பாட்டு மேலதிகம் / குறைவு	4,810,750,839	4,423,134,529
தொழிற்பாட்டு மூலதன மாற்றங்கள்		
இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்	182,543	31,649
பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமான மாற்றம்	(1,021,525,417)	(637,110,925)
ஏனைய முற்பணங்கள் மாற்றம்	10,906	(152,979)
பெறப்பட வேண்டிய கடன் தவணைத் தொகை மாற்றம்	(12,623,125)	8,719,127
செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப்படி மாற்றம்	18,205	-
நானாவித கடன் வழங்குனர்களின் மாற்றம்	62,057	(2,798,985)
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய காசு	3,776,876,007	3,791,822,417
ஆண்டினுள் செலுத்திய வருமான வரி	(471,721,511)	(795,598,664)
தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**3,305,154,496**	**2,996,223,754**
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
நிலையான வைப்புக்களின் முதிர்ச்சி	7,401,682,192	11,180,000,000
நிலையான வைப்புக்களில் முதலீடு	(10,156,731,256)	(10,375,000,000)
திறைசேரி முறிகள் விற்பனை / முதிர்ச்சி	-	2,835,853,829
கடன் பத்திரங்கள் கொள்வனவு	(3,200,000,000)	(6,500,000,000)
திறைசேரி முறிகள் கொள்வனவு	(1,427,757,222)	(796,741,600)
சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு	-	-
கடன் வழங்குதல் மற்றும் தீர்த்தல்	(384,967,976)	(742,099,177)
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**(7,767,774,262)**	**(4,397,986,948)**
நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
அங்கத்துவப் பணம் வரவு	5,808,176,372	5,344,712,089
அங்கத்துவப் பணம் செலுத்தல்	(2,708,555,744)	(2,451,499,444)
நிதி நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்	**3,099,620,628**	**2,893,212,645**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு	**(1,362,999,138)**	**1,491,449,450**
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	1,517,622,550	26,173,101
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**154,623,411**	**1,517,622,550**

பல்கலைக்கழக சேமலாப நிதிய வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானஉரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று

பல்கலைக்கழக சேமலாப நிதியம்

2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்றல் கூற்று

	அங்கத்துவ மீதி செயற்பாடு	அங்கத்துவ மீதி செயற்பாடற்ற	செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்கிற்கான ஒதுக்கீடு	கோரப்படாத அனுகூல இருப்பு	நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்	மொத்த தேறிய சொத்துக்கள்
2019.01.01 ஆம் திகதியவ்று மீதி (மீள் கூற்று)	42,215,141,094	38,411,700	8,000,000	6,977,990	6,202,221	42,274,733,005
ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம்	5,294,310,631	-	-	-	-	5,294,310,631
ஆண்டிற்குரிய அங்கத்துவ வட்டி	3,691,767,456	-	-	-	(3,691,767,456)	-
செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி	-	-	307,093	-	(307,093)	-
அங்கத்துவப் பணம் மீளச் செலுத்தல்	(2,456,257,679)	-	-	-	-	(2,456,257,679)
ஓய்வினை விடுப்புக்கான அறவீடுகள்	(14,688,093)	-	-	-	-	(14,688,093)
சீர்படுத்தல்கள்	(39,388,066)	(203,066)	(307,093)	3,284	39,892,135	(2,805)
வரிக்கு பின்வரான தேறிய வருமானம் (மீள் கூற்று)	-	-	-	-	3,770,201,568	3,770,201,568
2019.12.31 ஆம் திகதியவ்று மீதி (மீள் கூற்று)	**48,690,885,342**	**38,208,635**	**8,000,000**	**6,981,274**	**124,221,377**	**48,868,296,627**
ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம்	5,929,904,394	-	-	-	-	5,929,904,394
ஆண்டிற்குரிய அங்கத்துவ வட்டி	4,146,785,331	-	-	-	(4,146,785,331)	-
செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி	-	-	1,951,215	-	(1,951,215)	-
அங்கத்துவப் பணம் மீளச் செலுத்தல்	(2,712,351,127)	-	-	-	-	(2,712,351,127)
ஓய்வினை விடுப்புக்கான அறவீடுகள்	(9,942,329)	-	-	-	-	(9,942,329)
சீர்படுத்தல்கள்	(24,444,921)	(55,043)	(1,951,215)	12,124	26,439,054	-
வரிக்கு பின்வரான தேறிய வருமானம் (மீள் கூற்று)	-	-	-	-	4,063,226,896	4,063,226,896
2020.12.31 ஆம் திகதியவ்று மீதி	**56,020,836,691**	**38,153,592**	**8,000,000**	**6,993,398**	**65,150,781**	**56,139,134,462**

பல்கலைக்கழக சேமலாப நிதிய வருடாந்த நிதிக் கூற்று 2020
2020 டிசம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயற்றிறன் கூற்று

பல்கலைக்கழக சேமலாப நிதியம்
2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

	2020 ஆம் ஆண்டு ரூபா	(மீள் கூற்று) 2019 ஆம் ஆண்டு ரூபா
வருமானம்		
முதலீட்டு வருமானம்	4,740,825,953	4,393,116,137
கழிக்க : செயற்பாட்டுச் செலவுகள்	(3,662,481)	-3,310,029
வரிக்கு முன்னரான தேறிய வருமானம்	**4,737,163,472**	**4,389,806,107**
கழிக்க : வருமான வரி	(673,936,576)	-619,604,539
வரிக்கு பின்னரான தேறிய வருமானம்	**4,063,226,896**	**3,770,201,568**
கூட்டுக :		
வருமானத்திற்கு சீர்படுத்தல்	26,439,054	39,892,135
கடந்த ஆண்டின் நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்	124,221,377	6,202,221
பகிர்வதற்கான தேறிய இலாபம்	**4,213,887,327**	**3,816,295,925**
அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி	(4,146,785,331)	-3,691,767,455
செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி	(1,951,215)	-307,093
முன் கொணரப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்	**65,150,781**	**124,221,377**

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

பல்கலைக்கழகசேமலாப நிதியத்தின் 2020திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று,உரிமை மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 91 ஆவது உப பிரிவு மற்றும் 18 ஆவது பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பல்கலைக்கழக சேமலாப நிதிய விதிமுறைகளின் (திருத்தப்பட்ட) 24 ஆவது பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2020திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல்இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகையை மேற்கொள்ளும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிதியத்தைதொடந்தும் நடாத்துவதற்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம்,நிதியத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறுதனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும்.நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவானது இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால்

எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுக்குக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கில் இல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதுமான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது கருத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறுத்தப்படலாம்.
- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் மொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் ஏனைய பொதுவான விடயங்கள் சம்பந்தமாக ஆளும் தரப்புக்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இயைந்திராமை

கீழ் குறிப்பிடப்படும் இயைந்திராமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள்/விதிகள்../..ஏற்பாடுகள்		விபரம்
(அ)	1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்	
(i)	93 (2) பிரிவு	பங்காளர் ஒருவர் ஓய்வு பெறும் வயதைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பணி முடிவுறுத்தப்பட்டால் அன்றைய திகதியன்று சேமலாப நிதியத்தில் ஊழியரின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள முழுத் தொகை மற்றும் வட்டியை அவருக்குச் செலுத்த வேண்டும். ஆயினும் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய விரிவுரையாளரின் பணி 2000 செப்தெம்பர் 10 ஆம் திகதி நிறுத்தப்பட்டிருந்தாலும் நிதியத்தின் மீதியை விடுவிப்பதற்கு 2020 மே 29 ஆம் திகதி வரை 227 மாத காலம் தாமதமடைந்திருந்தது. பணி முடிவுறுத்தப்பட்ட திகதியன்று கணக்கில் நிலவிய ரூ.227,072 மீதியுடன் ரூ.1,228,899 வட்டியுடன் ரூ.1,455,971 விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii)	95 பிரிவு	• பங்காளரின் கணக்கை முடிவுறுத்தி 03 மாத காலப் பகுதியினுள் பங்காளரின் கணக்கில் இருக்கும் மீதியைச் செலுத்தி நிறைவு செய்தல் வேண்டும். ஆயினும் பணி முடிவுறுத்தப்பட்ட 108 பங்காளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை குறித்த உயர் கல்வி நிறுவகங்களுக்கு சமர்ப்பித்துகொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு 01 மாதம் முதல் 317 மாதங்கள் வரையான கால இடைவெளியைக் கொண்ட தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் அந்த தாமதக் காலப் பகுதிக்காக ரூ.9,241,071 வட்டித் தொகை செலுத்தப்பட்டிருந்தது. • பணி முடிவுறுத்தப்பட்ட சேவை பெறுநர் வேண்டுமென்றே அல்லது கவனயீனமாக நிதியை விடுவித்துக்கொள்வதற்காக விண்ணப்பிப்பதனை 01 மாதம் முதல் 312 மாதங்கள் வரையான காலப் பகுதி தாமதமடைந்திருந்ததுடன் தாமதமாக விண்ணப்பிக்கும் நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக ஆணைக்குழுவினால் போதுமானளவு ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	1982 பெப்ரவரி 02 ஆம் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை	(i) பணி முடிவுறுத்தப்பட்ட பங்காளாரால் குறித்த உயர் கல்வி நிறுவகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பத்தை 02 மாதங்களுக்குள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அந்தத் தாமதம் குறித்த உயர் கல்வி நிறுவகத்தின் தவறு அல்லது தாமதம் காரணமாக ஏற்பட்டமையினால் செலுத்தப்பட்ட வட்டியை தாமதத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலரிடமிருந்து அறவிட்டுக்கொள்ளுதல் வேண்டும். ஆயினும் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும்போது 01 மாதம் முதல் 34 மாதங்கள் வரையான காலப் பகுதி தாமதம் ஏற்பட்டமையின் காரணமாக வட்டியைக் கணக்கிட்டு செலுத்தும்போது சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு உயர் கல்வி நிறுவகங்களிடமிருந்து சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களைக் கவனத்திற்கொண்டு ஒரு மாத காலத்திற்குள் நிதியை பங்காளருக்கு

விடுவிக்க வேண்டியிருந்த போதிலும் அதற்காக 01 மாதம் முதல் 52 மாதங்கள் வரையான காலம் தாமதம் ஏற்பட்டிருந்தது.

3.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

2001 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியுடன் தொடர்பாக ரூபா 48,891,896 பெறுமதிமிக்க வெளியிடப்பட்ட ஆனாலும் உரிமை கோரப்படாமையின் காரணமாக இரத்துச் செய்யப்பட்ட 473 காசோலைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்த நிதியை செலுத்தித் தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தினால் போதுமானளவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2020 திசெம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கருத்துக்கள் மற்றும் அதன் தற்போதைய நிலைமை
3.1 (அ)1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் **(i) 93 (2) பிரிவு** பங்களிப்பாளர் ஒருவர் ஓய்வு பெறும் வயதைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பணி முடிவுறுத்தப்பட்டால் அன்றைய திகதியன்று சேமலாப நிதியத்தில் ஊழியரின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள முழுத் தொகை மற்றும் வட்டியை அவருக்குச் செலுத்த வேண்டும். ஆயினும் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய விரிவுரையாளரின் பணி 2000 செப்தெம்பர் 10 ஆம் திகதி நிறுத்தப்பட்டிருந்தாலும் நிதியத்தின் மீதியை விடுவிப்பதற்கு 2020 மே 29 ஆம் திகதி வரை 227 மாத காலம் தாமதமடைந்திருந்தது. பணி முடிவுறுத்தப்பட்ட திகதியன்று கணக்கில் நிலவிய ரூ.227,072 மீதியுடன் ரூ.1,228,899 வட்டியுடன் ரூ.1,455,971 விடுவிக்கப்பட்டிருந்தது.	குறித்த விண்ணப்பங்கள் 2018.09.07ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றதுடன், குறித்த பங்காளருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குத் தேவையான கணக்குகள் பற்றிய விபரங்கள் இல்லாமையின் காரணமாக பங்களிப்பாளருக்கு (அங்கத்தவருக்கு) இது பற்றிய தெரியப்படுத்தலை (Acknowledgement)2018.11.29 ஆம் திகதி பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டது. அதற்கான பதில் கிடைக்காமையினால் குறித்த அங்கத்தவருக்கு இரண்டு நினைவூட்டல் கடிதங்கள் 2019.04.03 மற்றும் 2019.11.21 ஆம் திகதிகளில் அனுப்பப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கும் பதில்கள் கிடைக்கப் பெறாமையின் காரணத்தினால் 2020 மார்ச் மாதத்தில் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது இந்தக் கொடுப்பனவு இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.
1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் **(ii) 95 பிரிவு** • பங்களிப்பாளரின் கணக்கை முடிவுறுத்தி 03 மாத காலப் பகுதியினுள் பங்களிப்பாளரின் கணக்கில் இருக்கும் மீதியைச் செலுத்தி நிறைவு செய்தல் வேண்டும். ஆயினும் பணி முடிவுறுத்தப்பட்ட 108 பங்காளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை குறித்த உயர் கல்வி நிறுவகங்களுக்கு சமர்ப்பித்து கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு 01 மாதம் முதல் 317 மாதங்கள் வரையான கால	1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 95 ஆவது பிரிவுக்கமைய பங்களிப்பாளருக்கு 03 மாத காலப் பகுதியினுள் கொடுப்பனவை மேற்கொள்ளாவிட்டால், அவருக்கு கொடுப்பனவை மேற்கொண்ட தினத்திற்கு முந்திய மாதம் வரை வட்டியைச் செலுத்த வேண்டும். அதற்கிணங்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 95 ஆவது பிரிவுக்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.மேலும் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் எந்தவிதமான தாமதமும் இன்றி செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சகல ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்படும் பிரகாரம் கணக்கு அலுவல்கள் மற்றும் வட்டி

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கருத்துக்கள் மற்றும் அதன் தற்போதைய நிலைமை
இடைவெளியைக் கொண்ட தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் அந்த தாமதக் காலப் பகுதிக்காக ரூ.9,241,071 வட்டித் தொகை செலுத்தப்பட்டிருந்தது.	சதவீதத்தை தீர்மானிப்பதற்காக திசெம்பர் முதல் பெப்ரவரி வரை மற்றும் COVID 19 தொற்று காரணமாக மார்ச் முதல் மே மாதம் வரை கொடுப்பனவு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த காலப் பகுதியில் குறித்த தாமதம் ஏற்பட்டுள்ளது
• பணி முடிவுறுத்தப்பட்ட சேவை பெறுநர் வேண்டுமென்றே அல்லது கவனயீனமாக நிதியை விடுவித்துக்கொள்வதற்காக விண்ணப்பிப்பதனை 01 மாதம் முதல் 312 மாதங்கள் வரையான காலப் பகுதி தாமதமடைந்திருந்ததுடன் தாமதமாக விண்ணப்பிக்கும் நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக ஆணைக்குழுவினால் போதுமானளவு ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தற்போது சேமலாப நிதியத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை மேலும் முறைப்படுத்துவதற்காக புதிய சுற்றறிக்கையொன்று வரையப்பட்டுள்ளது. அதனை எதிர்வரும் காலத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
(ஆ)1982 பெப்ரவரி 02 ஆம் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை	
